BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER


Paper - 03 Issue - 57 20 Friday October 2006

விற்பனைக்கல்ல

- நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
- வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
- உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

# என்றும் எங்கள் நெஞ்சங்களில்



ஆரியரின் அராஜகத்தால் அநியாயமாகக் கொல்லப்பட்ட நரகாசுரனின் நீங்கா நினைவுகளுடன்...

## நரகாசுரன்

**OFF LICENCE & ON LICENCE**

- New Personal Licence Holder (NCPLH) & Premises Supervisor (DPS) course
- உங்களுக்குரிய Personal Licence எடுக்க வேண்டிய சகல உதவிகள்
- புதிதாக கடை எடுப்பவருக்கு வேண்டிய Licence, வேறும் வழி முறைகள். செய்து தரப்படும்.
- Running & Established Shops for sale/to buy anywhere in the UK
- Food-Hygiene, Health & Security, Shop owns

No Win No Fee

www.ltta.co.uk

LTTA LTD
Licence Trade Training Academy

தொடர்புகளுக்கு Mr. Ravi
Head office, System House, 19 Pershore Road south, Birmingham B30 3EE
Tel: 07782 223 005

**ABBEY TRAINING. NET**

- OFF Licence/ Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்குமான Personal Licence எடுத்து தருவோம்
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- உங்கள் வியாபார ஸ்தாபனத்துக்கான புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்.
- LIFE IN THE UK - பிரித்தானிய பிரஜா உரிமைக்கான வகுப்புகள்
- எல்லா Course களையும் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களுடன் நடத்துகிறோம்.

தொடர்பு கொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164
38 London Road Tooting SW17 9HP

**RAJA& CO SOLICITORS**
10 Upper Tooting Road, Tooting Bec London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425

We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

**SIVA BUSINESS TRAINING**
எங்களிடம் வாருங்கள்
வென்று தருகின்றோம்
Citzenship Course (Life in UK வகுப்புகள்)
Personal Licence
(For OFF Licence and On Licence)
National Certificate
for Personal Licence Holders (NCPLH)
New Supervisor Course (NDDPS)
* New Premises Licence * Transfer of Licence
* Change of DPS * Night Cafe Licence
Siva 020 8683 6544, 079 0480 6371
Challenge House 616, Mitcham Road, Croydon CR0 3AA


**UNIGLOBE EXCHANGE LIMITED**
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Check Our Rates before you send...
230 B, Northolt Road, South Harrow, HA2 8DU
Call Us at 020 8423 9988
020 8423 7744

**Rasam Gayatri Silks**
Specialists in Wedding Sarees
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
* Deepam * Kolam
* Mangalyam * Suyamvaram
www.rasamsilk.com
Open 7 days a week 11am-8pm
Tel: 020 8552 6060
312, High Street North, Eastham E12 6SA

**LONDON ACCIDENT CLAIM LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XF
Had an accident – Not your fault
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட....
NO WIN - NO FEE
Tel: 020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call free: 0800 032 6798

**SHOP INSURANCE**
COVERSURE INSURANCE SERVICES
Competitive rates for all types of businesses including
Off Licence, Newsagent, Restaurant & Takeaway
Direct access to over 8 major insurers in UK. Same day quotes + cover
Mike Navaratnarajah, Priya Murthy
0870 4585 680
Authorised and Regulated by the Financial Services Authority No:307008

# ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்


COLOMBO HINDU COLLEGE PAST PUPILS ASSOCIATION (UK)
Proudly Presents
அலைபாயுதே 2006
Shri Kalaimamani P. Unnikrishnan
ALAIPAYUTHEY 2006
Harrow
Semi Classical Concert
+ Variety shows by various artistes
6pm Saturday
4th November 2006
Box office No: 020 8428 0124
East London
Niranjan: 0787 640 4354
SW London
Karu: 07830 137 982
Harrow
Senthuran: 07961 22 9993
Sushenthan: 07961 430 263
Thivaharaan: 07813 090 599
TRS Mithiran: 07799 664 555
www.alaipayuthey.co.uk
Elliott Hall
Harrow Arts Centre
Uxbridge Road
Hatch End
Middlesex HA5 4EA

### ஐயா ஒருபேப்பர் காரரே,

இங்கே நடக்கின்ற அக்கிரமங்களைத் தான் கிளறுகிறீர்கள் என்று பார்த்தால் உங்கள் பார்வை தாயகம் வரை போகிறதே. உங்களுடைய இடியப்பக் கதையைத்தான் சொன்னேன் இங்குள்ளவர்கள் அறிய வேண்டிய இது போன்ற அவலங்களைத் தொடர்ந்தும் வெளிக் கொண்டு வாருங்கள்.

— *சாந்தன்*

### தமிழக முதல்வர்

உலகத் தமிழினத் தலைவர் என்று கூறிக் கொண்டு சின்னத்தனங்கள் செய்யும் தமிழக முதல்வரின் உண்மை முகத்தைப் புடம் போட்டுக் காட்டிய சபேசனுக்கு வாழ்த்துக்கள்.

— *பிரபு*

### அண்ணைமாரே, அக்காமாரே

ஊரிலை எத்தனையோ பிரச்சினைகள் கிடக்குது. நீங்கள் என்னண்டால் சாமத்தியச் சடங்கைப் பற்றிப் பட்டி மன்றம் நடத்திக் கொண்டிருக்கிறியள். ஏதாவது பிரயோசனமாச் செய்யுங்கோ. உங்களுக்குப் புண்ணியங் கிடைக்கும்.

— *தர்சினி*

### பேட்டியா? போட்டியா?

பத்திரிகை நடத்துபவர்கள் எவ்வளவு பேரைப் பேட்டி காணுவார்கள் நீங்கள் ஒரு பத்திரிகையாளரையே பேட்டி கண்டிருக்கிறீங்கள். எல்லாத் தொழிலிலையும் போட்டியும் பொறாமையும் இருக்கிற இந்த நாடுகளிலை பத்திரிகையாளஏகள் வித்தியாசமாய் நடப்பது மகிழ்ச்சியைத் தருகிறது

— *மதி*

### எதற்காக அவ்வழியால்

அண்மையில் இலங்கை கடற்படையினருக்கு நடந்த தாக்குலில் இறந்தவர்கள் விடுமுறையில் வீடு செல்வதற்காகச் சென்றவர்கள் என்று கூறினார்கள். ஆனால்யாழ் சண்டைகள் ஆரம்பமாகிய உடனேயே அனைத்துப் படையினரது விடுமுறைகளும் ரத்துச் செய்யப்பட்டதாக சிறீலங்கா அரசு அறிவித்திருந்தது. ஆக பயணித்த கடற்படையினர் எதற்காக அவ் வழியால் வந்தனர் என்னும் கேள்வி எழுகின்றது? மேலும் ஆயுதமற்ற நிராயுதபாணிகளைக் கொன்றதாக சிங்கள ஊடகங்களும் வெளிநாட்டு ஊடகங்களும் கத்துகின்றன. ஆனால் குண்டுவெடித்த இடத்தில் குவிக்கப்பட்டிருக்கும் துப்பாக்கிகள் என்ன திருவிழாவில் வாங்கியவையா?

— *தயாபரன்*

### நீங்களே இப்பிடியெண்டால்

உங்களுக்கென்ன நடந்தது. நல்லாத் தானே பேப்பர் அடிச்சுக் கொண்டிருந்தியள். இப்ப இருந்தாப் போலை சாமிமாருக்கு வால் பிடிக்கத் தொடங்கியிருக்கிறியள். ஊருக்கே புத்தி சொன்ன நீங்களே இப்பிடியெண்டால் நாங்கள் யாரிட்டைப் போய்ச் சொல்லுறது?

— *சிறிதரன்*

### நாகரீக அம்மணிகள்

இழிவுபடுத்தும் ஊடகங்கள் என்ற தலைப்பில் திருமதி பவளமணி பிரகாசம் எழுதிய கட்டுரை பார்த்தேன். ஆனால் பெண்ணியம்? பேசுகின்ற, பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற நாகரீக அம்மணிகளின் கண்களுக்கு இவையெல்லாம் தெரிவதில்லையோ என்று சந்தேகமாயிருக்கிறது

— *தமிழினி*

### அநியாயம்

தமிழர்களின் மீட்பராக வந்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தது அநியாயம் என்று கூக்குரலிட்டவர்கள் சிங்கள உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றி மூச்சுக் கூட விடவில்லையே ஏன்?

— *விதுரன்*

### அங்கையுமா ஒருபேப்பர்

முன்பக்கத்தில நீங்க போட்டோவுக்கு என்ன அர்த்தம்? என்ன ***ஒரு பேப்பர்*** ரை அங்கையும் பாவிக்கலாமோ?

— *சிவக்குமார்*

### பயன்படும் செய்திகள்

தமிழை எங்கள் பிள்ளைகட்கு கற்பிக்க வேண்டுமா என்ற கட்டுரையில் பல விடயங்கள் பயனுள்ளதாக இருந்தது. தொடர்ந்தும் புலம்பெயர் மக்களுக்கு பயன்படும் செய்திகளை பிரசுரிக்க வேண்டி உங்களை வாழ்த்துகிறேன்.

— *அகிலா*

### அட்வைஸ் ஆச்சி

இஞ்ச பாருங்கோ உந்த மாதர் பக்கத்தில அட்வைஸ் பண்ணுற ஆச்சியை கொஞ்சம் அடக்கி வாசிக்கச் சொல்லுங்கோ. அட்வைஸ் பண்ணுறதெண்டு சொல்லிப் போட்டு பழைய குட்டையள கிளறுற மாதிரிக் கிடக்குது.

— *கமலா*

### காணவில்லை

என்ன கனகாலமாய் கே.எஸ் பாலச்சந்திரன் மற்றும் பெட்டிசம் பெருமாள்சாமி போன்றோரின் ஆக்கங்களைக் காணவில்லை. என்ன அவர்கள் லீவில் போய்விட்டார்களா? அல்லது உங்கள் பத்திரிகையில் பாவிக்கும் ஓசியாய் என்றதை அவையளுக்கும் பாவிச்சிட்டீங்களோ தெரியேல்லை.

—*பிரதீப்*

### கொஞ்சம் யோசியுங்கோ!

கொஞ்சநாளாய் உங்கட பேப்பரைப் பார்க்கப் பார்க்க விசராய் வருகுது. அடிக்கடி பக்கங்களை மாற்றுகிறீர்கள்?, எல்லாப்பக்கமும் ஒரே எழுத்தாய் நிறைந்துகிடக்கு. கண்ணுக்குக் குளிர்ச்சியாய் ஒரு படங்களையும் காணேல்லை. சில கட்டுரைகள் நிறைவாகிட்டதா நிறைவாகவில்லையா என்று தெரியாமக் கிடக்கு. . ஓசியாய்க் குடுக்கிறம் தானே தேடிப்பிடிச்சு வாசிக்கட்டும் எண்ட நினைப்போ தெரியேல்ல. எங்களைப்போன்ற வயசுபோனவர்களுக்குக்காக இது கொஞ்சம் கஸ்டமாயிருக்குது. கொஞ்சம் யோசியுங்கோ.

— *வினித்*

### லா போஸ்ட்

றோயல் மெயிலுக்கும் கனடாப் போஸ்டுக்கும் இடையில இஞ்ச பிறான்ஸ்ல இருக்கிற எங்கட லா போஸ்டுக்கும் ஒரு கனக்சன் கொடுத்தீங்கள் என்றால் நாங்களும் ஒரு கடிதம் போட்டு எங்கட ஆசுவாசங்களைத் தெரிவிக்கலாம் செய்வீர்களா?

— *சுசி*

### சுவிஸ் பாங்

உங்கட பேப்பர் இஞ்ச சுவிசிலையும் இப்ப தலைகாட்டத் தொடங்கிற்றுது என்ன சுவிஸ் பாங்கில வங்கிக் கணக்கு ஆரம்பிச்சீட்டீங்க போல கிடக்கு. நல்ல வளர்ச்சி தான். வாழ்க!

— *ஆதவன்*

### அறுவை

உங்கட அறுவைப் பக்கம் உண்மையிலேயே ஒரே அறுவையாத்தான் கிடக்குது. ஏதாவது பாத்துக் கீத்துச் செய்யுங்கோ! வாறதெல்லாத்தையும் போடுறியள் போலக் கிடக்குது. சொல்ல வேணும் எண்டு நினைச்சன் அதான் சொல்லிப்போட்டன். பிழையெண்டால் மன்னியுங்கோ.

— *தவேன்*

### அரசியல்

என்னப்பா உங்கள் பத்திரிகை இப்போது ஒரே அரசியல் மயமாக இருந்து வருது கொஞ்சம் மாத்த முயற்சியுங்களேன். ஆரம்பத்தில் ***ஒரு பேப்பர்*** ரை வாசித்தால் ஒரு ரிலாக்ஸ் தன்மை ஒண்டு வரும் இப்ப இருக்கிறதை விட பிறசர் கூடுது.

— *செல்வராஜா*

### ஒரு பேப்பர்

எமக்கு வரும் கடிதங்கள் பல பெயர் குறிப்பிடாமல் வருவதால் அவற்றை எம்மால் பிரசுரிக்க முடியாமல் உள்ளது. உங்கள் பெயர் வதியும் நாடு என்பவற்றை தவறாமல் குறிப்பிடுங்கள்.

— *ஆசிரியர்*

# கனடாப் போஸ்டில் வந்த மெயில் . . .

*அன்பின் சிவாவிற்கு ...*

என்ன மச்சான் நடக்குது? சுகமாய் இருக்கிறாய் தானே?

நான் போன கிழமை ஆணிவேர் படம் பாத்தனான். இப்பவும் அந்த நினைவுகள் மனசுக்குள்ள நிக்குது மச்சான். எங்கட தமிழ் ஆக்கள் பட்ட கஸ்டமெல்லாம் எவ்வளவு தத்ரூபமா எடுத்திருக்கினம். ஒவ்வொரு நிமிடமும் படம் தானே எண்டு பாத்துக் கொண்டு இருக்க முடியுதில்லை. இது ஏதோ ஒரு தருணத்தில் உண்மையிலேயே நடந்த சம்பவம் எண்டு மனசுக்குள்ள நினைக்கும் பொழுது. இதயமே வெடிச்சிடும் போல இருந்திச்சுது.

நிச்சயமா இந்தப் படத்தை உருவாக்கின கலைஞர்களிற்கு நாம் என்றென்றும் தலை வணங்க வேண்டும் மச்சான். நாம் இவ்வளவு காலமும் செய்யாத ஒன்றை, நிறைவாகவே செய்திருக்கிறார்கள். இப்பொழுது நாமும் அவர்கள் பட்ட கஸ்டங்களில் ஒரு துளியாவது பங்கேற்க வேண்டியது அவசியம். அதாவது, இந்தப் படம் ஆங்கிலத்தில் மொழிமாற்றப்பட்டு அனைத்து வேற்றின மக்களிடமும் போய்ச்சேர வழி செய்ய வேணும்.

அது சரி என்ன முக்கியமான விசயம் கதைக்கவேணும் எண்டு லண்டன் வரச் சொல்லி நிக்கிறாய்? லெட்டரில சொல்லி இருக்கலாம் தானே? நான் வேற யாரிட்ட போய், உன்ட லெட்டரைக் காட்டப் போறன்? எனக்கும் உன்ர பிரச்சினை விளங்குது மச்சான். ஆனா நீயோ ஊரில தான் பொம்பிளை வேணுமெண்டு ஒத்தக்காலில நிக்கிறாய். இப்ப நாட்டு நிலமை றேடியோவில கேக்கிறனி தானே? அதுதான் என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. ஒண்டுக்கும் யோசிச்சுக் கொண்டு இருக்காதை. எல்லா விசயமும் காலா காலத்தில நல்லபடியா நடக்கும். இப்ப அங்கை முகமாலையில சூரன்போர் நடந்திச்சுது, பிறகு கம்பகா, காலியில தீபாவளிப் பட்டாசு வெடிச்சதுகள் கேள்விப்பட்டனி தானே? போற போக்கைப் பாத்தா, நிச்சயம் நீ எதிர்பாத்த மாதிரி கெதியா சுதந்திரமா நாட்டுக்குப் போய் கலியாணம் கட்டிக் கொண்டு வரலாம், சரியே?

வேறு என்ன மச்சான்?

இஞ்ச கனடாவிலயும் குளிர்கால வாழ்க்கை எண்டுறது ஒரு நரக வாழ்க்கை தான். ஆனா என்ன செய்யிறது, அகதியாய் அலைஞ்சு திரிஞ்ச போது, கை தந்து அரவணைச்ச நாட்டில, இதை நாம அனுசரிச்சுப் போகத்தான் வேணும்.

இந்த முறை சமரையும் வடிவாக் கொண்டாட ஏலாமப் போச்சுது. ஊர்ச்சங்கங்களின்ட ஒன்றுகூடல்கள் நடத்தினவையெல்லாம், ஆமை ஓட்டுக்குள்ள தலையை இழுத்த மாதிரி வின்ரருக்கு வீட்டோட முடங்கிப் போயிடுவினம். பிறகு தான் கொஞ்சம் கொஞ்சமா தலையை நீட்டி, பார்பிகியுப் பாட்டி, கிளித்தட்டுப் போட்டி எண்டு வெளிக்கிடுவினம்.


நான் இந்த விசயத்தில ஊர் வேறுபாடு எண்டு ஒண்டும் பாக்கமாட்டன். எல்லா இடமும் போய் நல்லா வெட்டுத்தான். அதோட கோயில் திருவிழாக்களில அன்னதானமும் இருக்குத் தானே. அதனால, சமர் வந்தாலே சாப்பாட்டுக்குப் பிரச்சினை இருக்காது. வின்டருக்கும் ஏதாவது கிறிஸ்மஸ் விழா செய்தா, இந்த ஊர்ச்சங்கங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும். நடிகர் செந்தில் பாய்ஸ் படத்தில, எந்தக் கோயிலில என்ன நேரம் அன்னதானம் எண்டு லிஸ்ட் வைச்சிருக்கிற மாதிரி, நானும் சமருக்கும், வின்டருக்கும் ஒரு லிஸ்ட் ஒண்டு செய்திட்டன் எண்டால் என்ட பாடு அமோகம் தான். நான் இப்பிடியே ஓசிச்சாப்பாடு திண்டே காலத்தை ஓட்டிடுவன். இதையெல்லாம் நான் விட்டுப்போட்டு நான் லண்டன் வருவன் எண்டு நீ நினைக்கிறியே? நீ இஞ்ச வா. நான் எப்பிடி லிஸ்ட் செய்யிறது எண்டு காட்டித்தாறன். இதையே ஒரு தொழிலாத் தொடங்கி, சாப்பாட்டுக்குப் பிரச்சினை இல்லாம இருக்கலாம் விளங்குதே?

வேற என்ன மச்சான் நேரம் போகுது. இஞ்ச வாறதைப் பத்தி யோசி. உன்ட கடிதம் கண்டவுடன் மிச்சம் எழுதுறன். ஓகே. பாய்.

*அன்பின் நண்பன்*
*பவா*

MONEY IN MINUTES TO SRI LANKA

India, Usa, Canada, Australia
Transfers to over 120 Countries



Strong. Safe. Reliable.
MCG
Mike Cooke Group
FAST CASH
WORLDWIDE MONEY TRANSFERS
Open 7 Days

இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

HSBC · Commercial Bank · HNB · People's Bank · Seylan Bank Limited · Sampath Bank · Bank of Ceylon

Head Office : 125 - 127 Bramley Road,
Oakwood, London N14 4UT

Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்

A/C NAME : C.E.C.LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47
BRANCH : HANOVER SQ.

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, OCTOBER 20, 2006, ISSUE 57

## பொய் பிரச்சாரத்தினை முறியடியுங்கள்!

இவ்வாரம் ஹபரணவில் சிறிலங்கா கடற்படையினரின் வாகன அணி மீதும் காலியிலுள்ள 'தக்சினா' கடற்படை கட்டளைத் தளத்திலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை மேற்குலக ஊடகங்கள் சில வன்மையாகக் கண்டித்துள்ளன. குறிப்பாக பிரித்தானியாவில் 'The Times' அமெரிக்காவில் 'Washingtom Times' போன்ற வலதுசாரி நிலைப்பாடுடைய தினசரிகள், படையினர் மீதான இத் தாக்குதல்களை பொருளாதார இலக்குகள், உல்லாசப் பிரயாண மையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதச் செயல்களாக இனங் கண்டிருப்பதுடன் இவை விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்டதாக குறிப்பிட்டு அவர்களை சமாதானத்தில் அக்கறை கொள்ளாத வன்முறையாளர்களாக சித்தரித்துள்ளன.

கடந்த பல வாரங்களாகவே சிறிலங்கா அரசானது தமிழ் பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடாத்தியும், பொருளாதார தடைகளை ஏற்படுத்தியும் முற்று முழுதான இன அழிப்பு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது. சிறிலங்கா படைகள் தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியும் கொன்றொழித்தும் வருகின்றனர். சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்குகூட தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை எவையுமே இந்த ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால் வெறுமனே பொருளாதார நலனை கருத்தில் கொண்டு இவ்விதம் சிறிலங்கா அரசுக்கு ஆதரவான கருத்துக்களை பரிவர்த்தனை செய்து வருகின்றன.

சிறிலங்கா அரசு ஒரு புறம் போர் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுக் கொண்டு அரசதரப்புக்குரிய தனது வளங்களை பாவித்து ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு எதிரான பிரச்சாரத்தை சர்வதேச அரங்கில் முழு அளவில் முன்னெடுத்துள்ளமை இவ் ஊடகங்களினால் வெளியிடப்படும் செய்திகளிலிருந்து தெரிகிறது. ஆனால் இவ்விதமான பிரச்சாரங்களை எதிர்கொள்வதில் புலம் பெயர்ந்த தமிழர்கள் அக்கறை காட்டாதது வேதனைக்குரியது. பதில் கடிதங்களை எழுதி தமிழர் பக்க நியாயங்களை எடுத்துரைப்பதையோ ஊடகங்களினை நோக்கிய கவனயீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலோ எமது இயலாமை வெளிப்பட்டுள்ளது.

இவ்வகையான பொய்ப் பிரச்சாரங்கள் மறுகருத்தின்றி சர்வேதச மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படும்போது அவை தனித்து ஈழத்தமிழரின் போராட்டத்தை மட்டுமல்ல புலம் பெயர்ந்து வாழும் மக்களையிட்டும் தவறான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்திவிடும் அபாயம் உள்ளது. இந்த ஆபத்திலிருந்து விடுபடுவதற்காகவாவது விரைந்து செயலாற்றுங்கள்.

## ஒரு பேப்பர்

*எல்லாருக்கும் வணக்கம்!*

*போனமுறை ஜேர்மன் மொழியில வணக்கம் சொன்னதற்காக ஆறுபேர் அடிக்க வந்திட்டியள் ஜேர்மன் மட்டுமா மொழி எண்டு!*

*ஐயா அவயளுக்கு போனமுறைதான் முதல்ப் பேப்பர் இந்த **ஒரு பேப்பர்** அதாலதான் அப்பிடி ஒரு முயற்சி! இனி எண்டைக்கும் தமிழிலதான் வணக்கம் சொல்லுவம். சரியோ!*

*பொதுவான சில விசயங்களைப் ஒருக்கா சொல்லி விடுறம். அதாவது **ஒரு பேப்பர்** விசயங்கள்!*

*பேப்பர் மாதத்தின்ர முதாலாவது வெள்ளியும் மூண்டாவது வெள்ளியும் தான் வரும். இடையில போய்த் தேடி தயவு செய்து ஏமாந்து போடாதேங்கோ!*

*ஊரில ஏற்கனவே ஆயிரம் பேப்பர் உதுக்குள்ள இன்னொரு பேப்பர் அதுக்குப்பேர் **ஒரு பேப்பர்** என்ன கூத்துக் காட்டுறியள் எண்டு சிலபேர் கேக்கிறியள். எங்கட காதுகளில விழுது!*

*தெளிவாச் சொல்லுறம். நாங்க வாசிச்சதுகள் அறிஞ்சதுகள் ஆயிரம் இருக்கு அதைச் சனத்துக்குச் சொல்ல வேணும் எண்ட ஆசையிலதான் உருவாகினது இந்த **ஒரு பேப்பர்** இதில நீங்கள் யாரும் உங்கட கருத்துக்களை வந்து சொல்லலாம் உங்களுக்கும் கருத்துக்கள் இருக்கும்தானே!*

*அதாவது இது ஒரு மேடை மாதிரி வந்து ஆடுங்கோ பாடுங்கோ கூத்தாடுங்கோ சண்டை பிடிங்கோ பிறகு கடைசில ஒரு முடிவுக்கு வாங்கோ!*

*ஓம்... சில பேருக்கு சில கேள்விகள் வருதாம்!*

*உந்தப் பேப்பரை யார் அடிக்கிறாங்கள்? அவங்கள் எங்கத்தைய ஆக்கள் எண்டு.*

*தயவு செய்து எங்கட நதி மூலம் ரிஷி மூலம் எல்லாம் தேடாதேங்கோ!*

*எனெண்டாத் தேடிப் பிரயோசனம் இல்லை. உங்கட நேரம் தான் கடைசில வீணாப் போகும்.*

*கரும்புச்சாற்றைக் குடி வேரைப் பற்றிக் கவலைப்படாதே எண்டு பெரியாக்கள் சொல்லி இருக்கினம்! (வேறயார் நாங்கதான் ஆக்கள்)*

*அது மாதிரி விசயத்தை மட்டும் பாருங்கோ எங்களைத் தேடாதேங்கோ!*

*நாங்கள் தூணிலும் இருப்பம் துரும்பிலும் இருப்பம் உங்கட வீட்டுத் தும்புக்கட்டையிலும் இருப்பம்!*

*"ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்"*

*இந்த வாசகத்தால லண்டனில முந்தி சிலர் கோவப்பட்டினம். பிறகு கனடாவில. இப்ப கடைசியா ஐரோப்பாவில! அடிக்கவும் வாறியளாம்!*

*உங்களால ஏன் இதை நகைச்சுவையாக எடுக்க முடியேல்லை!. தெரியவில்லை!!! சும்மா பாத்துச் சிரிச்சிட்டுப் போகலாம் தானே!*

*மற்றது எங்களுடன் ஆக்கங்கள் முதல் அனைத்து அளவலாவல்களுக்கும் உங்கள் இலகு தொடர்பு விபரங்களைப் தந்து உதவுங்கோ! (தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல்)*

*ஐயோ! ஒண்டைச் சொல்லோணும் தொலைபேசி எடுத்தா ஏதோ கடன் காரனோட கதைக்கிற மாதிரி கதைக்கிறியள்! பயமாக் கிடக்குது! தயவுசெய்து எங்கள அழ வைக்காதேங்கோ. . .*

*சரி பிறகு சந்திப்போம் என்ன.*

*நன்றி.*

*- **ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# The Great Experiment

Is it possible to force a whole people to submit to enemy occupation by starving it?

That is, certainly, an interesting question. So interesting, indeed the Government of Sri Lanka (GOSL) in close cooperation with the International Community is now engaged in a rigorous scientific experiment in order to obtain a definitive answer.

The laboratory for the experiment is the Tamil Northeast especially the Jaffna Peninsula and the guinea pigs are the two million Tamils living there.

In order to meet the required scientific standards, it was necessary first of all to prepare the laboratory.

That was done in the following way: First, President Rajapakse militarily secured the Sinhalese settlements in the East.

After all, you can't conduct a proper experiment with pets roaming around the laboratory. This was done with determination and sensitivity.

With the laboratory cleaned, the next phase could begin: all entrances and exits were hermetically sealed, in order to eliminate disturbing influences from the world outside.

That was done without difficulty as the entire Northeast is closed off by a highly effective military fence.

So everything was ready for the experiment.

The signal for its beginning was given after the Tamils became restless and rebellious (again).

Tamil infrastructure destroyed, practically no means of production, no work for the workers- an ideal setting for the great "experiment in hunger".

> What are the government of Sri Lanka and the International Community trying to tell the Tamils?

Killing of aid workers, intimidation of Non Governmental Organisations (NGOs) etc were added to the experiment after some observations.

The final phase started, as mentioned, with the closing of the main entry points especially the A9 in August.

The passage between the Northeast and the rest of Sri Lanka is closed in practice.

Once every few days or weeks it is opened for some hours, for appearances' sake, so that some of the sick and dead or dying could get home or reach hospitals.

The crossings are closed "for urgent security reasons". Always, at the right moment, "warnings of an imminent terrorist attack" appears.

Tamil agricultural products destined for export rot at the crossings. Medicines and foodstuffs cannot get in, except for short periods from time to time, also for appearances, whenever somebody important abroad voices some protest. Then comes another "urgent security warning" and the situation is back to normal.

To round off the picture, for most of the day there is no electricity. Even on the hottest days, with temperatures of over 40 degrees centigrade in the shade, there is no electricity for the water supply or other needs.

In the East, a territory much larger than the Jaffna peninsula the situation is quite desperate. There more than ninety percent of the population lives beneath the Tamil "poverty line", which lies of course below the official Sri Lankan "poverty line". (Many Eastern Tamils can only dream of being considered poor in the nearby Sinhalese town of Dambulla)

What are the government of Sri Lanka and the International Community trying to tell the Tamils? The message is clear: You will reach the brink of hunger and even beyond, if you do not surrender. You must remove the LTTE and most importantly: you must be satisfied with a Tamil region consisting of several enclaves, each of which will be utterly dependent on the tender mercies of the Sinhalese.

> How can a population that is hit by hunger, lacking medicaments and equipment for its primitive hospitals and exposed to attacks on land, from sea and from the air, hold out? Will it break?

At the moment, the directors of the scientific experiment are pondering a puzzling question: how on earth do the Tamils still hold out, in spite of everything?

According to all the rules, they should have been broken long ago!

(One of the explanations has to do with the structure of Tamil society. The extended family plays a central role there. As long as one person in the family is working, the relatives, too, do not die of hunger, even if there is widespread malnutrition. Everyone who has any income shares it with all his brothers and sisters, parents, grandparents, cousins and their children. That is a primitive system, but quite effective in such circumstances. It seems that the planners of the experiment did not take this into account)

In order to quicken the process, the whole might of the Sri Lankan forces is now being used (again).

> What and how much is needed to get a population to surrender?

How can a population that is hit by hunger, lacking medicaments and equipment for its primitive hospitals and exposed to attacks on land, sea and from the air, hold out? Will it break? Will it go down on its knees and beg for mercy? Or will it find inhuman strength and stand the test?

In short: What and how much is needed to get a population to surrender?

All the scientists taking part in the experiment – President Rajapakse and his ministers, diplomats of the 'civilised, democratic, liberal' and the extremely rich International Community and not to mention the Noble Indians - are bent over the microscopes and waiting for an answer, which undoubtedly will be an important contribution to the political science of the 'civilised'.

We hope the Nobel Committee is watching.

# வடக்கு - கிழக்கு இணைப்பும் பிரிப்பும்

கரிகாலன்
(ஒரு பேப்பருக்காக)

*'இலங்கையில் 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று ஸ்ரீலங்கா உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.'*

*'வடக்கு கிழக்கின் இணைப்பானது கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை உரிமைகளை பாதிப்பதாகக் கூறி ஜேவிபி கட்சியினரும் மற்றுமொருவரும் தாக்கல் செய்ய வழக்கு ஒன்றின் அடிப்படையிலேயே, இலங்கை தலைமை நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான, 5 நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.'*

*'வடக்கு-கிழக்கு இணைப்புக்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். வடக்கு-கிழக்கு இணைப்பு நீடிக்க வேண்டும் என்று மகிந்த விரும்பினால் அதற்குரிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் அவர் தாக்கல் செய்ய வேண்டும். அத்தகைய சட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும்.'*

*'வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராக சிறிலங்கா உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதன் மூலம் மகிந்த ராஜபக்ச எந்தப் பலனையும் பெறாத நிலையில் எல்லாவற்றையும் இழக்கப் போகிறார்' - கொழும்பு ஆங்கில ஊடகம்*

*'வடக்கு. கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சட்டவிரோதமானதென்றும் செல்லுபடியற்ற தென்றும் தீர்ப்பளித்திருப்பது துரதிர்ஷ்ட வசமானது' இந்தியா கவலை !?*

இவையெல்லாம் செய்திகள்... ஆனால் இதில் சம்பந்தப்பட்ட தமிழ் மக்களின் பார்வை எப்படி இருக்கும்?

80களின் நடுப்பகுதியில் ஆயுதப்போராட்டம் தீவிரமடையத் தொடங்கியது. ஆரம்பத்தில் இலங்கை இனப்பிரச்சினையில் மறைமுகமாகத் தலையிட்ட இந்தியா, இறுதியில் 1987 இல் நேரடியாகத் தலையிட்டது. இது சிங்களத் தலைமைக்கு பெரும் நெருக்கடியாக இருந்தது. 'குள்ளநரி' என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட அப்போதைய அரசுத் தலைவர் ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கு இது பெரும் சவாலாக இருந்தது. ஜே.ஆர் போதி மரத்தின்கீழ் கடும் யோசனையில் ஆழ்ந்தார். திடீரென அவருக்கு ஒரு ஞான யோசனை தோன்றியது. பழைய குப்பை களையெல்லாம் கிளறிக்கொட்டி செல்லரித்துப் போன ஒரு திட்டத்தை வெளியே எடுத்தார். அதுதான் 80 களின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தி பின்னர் செல்லாக்காசாகிப் போன 'மாவட்ட சபை'.

## அதிகாரம் எதுவுமேயற்ற ஒரு மாகாண சபை அமைப்பு இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன?

தமிழ் மக்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கு வதற்காக - அதிகாரப் பரவலாக்கலுக்கு என்று சொல்லப்பட்டு 1980 களின் ஆரம்பத்தில் இலங்கை யில் அறிமுகப்படுத்தப்பட்டதுதான் இந்த மாவட்ட சபைகள். இம் மாவட்டசபைகள் கிராம சபையின் அதிகாரத்தையே கொண்டிருந்தன. ஆனால் அரசுத் தலைவர்களும் அரசின் அடிவருடிகளும் தமிழ் மக்களுக்கு எல்லாவற்றையும் வழங்கி விட்டோம் என்று தம்பட்டமடித்தனர். காலக்கிரமத் தில் மாவட்ட சபைகள் செல்லாக்காசு என்பதை எல்லோரும் விளங்கிக்கொண்டனர்.

ஆனால் இந்த மாவட்டசபை யோசனையை இந்தியாவும் போராளிகளும் ஏற்றுக் கொள்வார் களா? இல்லை!

ஜே.ஆர். மாவட்டசபைத் திட்டத்தை நல்ல ஒரு கராஜ்ஜிலை கொடுத்து ரீகொண்டிசன் செய்தார். அதற்கு கவர்ச்சிகரமான வர்ணம் பூசப்பட்டது. குஞ்சங்கள் கட்டப்பட்டன.

இப்பொழுது இதனுடைய பெயரையும் 'மாகாண சபை' என்று மாற்றினார். இதற்கு முதலமைச்சர், அமைச்சர்கள்... இப்படியெல்லாம் 'கலர்'கள் வழங்கப்பட்டன. ஆயினும் அதிகாரத்தைப் பொறுத்தவரை ஒரு நகரசபையின் அதிகாரம்தான் இதற்கு உண்டு.

மாகாண சபை!! என்ன அருமையான திட்டம்! தமிழ் மக்களின் பிரச்சனைகளெல்லாம் இத்து டன் தீர்ந்துவிடும்! ஆகா!! ஓகோ!!! என்றெல்லாம் அரசின் ஊதுகுழல்களும் சில காக்கை வன்னியர் களும் புகழ்ந்தார்கள்.

போராளிகள் இந்த மாகாண சபைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை! அவர்களுக்கு அதன் உள்ளே என்ன இருக்கிறது என்பது நன்றாகவே தெரிந்திருந்தது!!

ஆனால் பாவம்... இந்தியா மிகப் பெரிய நாடாக இருந்தும் பல இராஜதந்திரிகள் இருந்தும் ஜே.ஆரின் இந்தத்திட்டத்தை நம்பிவிட்டது. ஜேஆரின் வலையில் வீழ்ந்தது.

இதன் வழி உருவானதுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம்.

போராளிகளும் தமிழ்மக்களும் கேட்டது தன்னாட்சி உரிமை. ஆனால் கிடைத்ததோ ஏற க்குறைய ஒரு நகரசபை போன்ற அதிகாரத்தைக் கொண்ட ஒரு அமைப்பு.

தமிழ் மக்களைச் சமாதானப்படுத்துவதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன. சிங்கள மக்களைச் சமாதானப்படுத்துவதற்காக 'தற்காலிகமாக...' 'சில காலத்தின்பின் கிழக்கில் கருத்துக்கணிப்பு...' என்பன இணைக்கப்பட்டன.

உண்மையில் தமிழ் மக்கள் கேட்ட அதிகார ங்கள் எதுவுமேயில்லாத ஒரு அமைப்பு மாகாண சபை.

தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் உள்ள பிணக்கைத் தீர்ப்பதற்கு என்று சொல்லி தமிழ் மக்களைக் கலந்தாலோசிக்காமலேயே உருவாக்கப்பட்டதுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தமும் இந்த மாகாணசபை அமைப்பும்.

இவ்வாறான அதிகாரம் எதுவுமேயற்ற ஒரு மாகாணசபை அமைப்பு இருந்தாலென்ன இல்லா விட்டாலென்ன? தமிழ் மக்களுக்கு எந்தவிதத் திலும் பயனற்ற இந்த அமைப்பு இணைந் திருந்தாலென்ன இணையாதிருந்தாலென்ன தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீரப்போவதில்லை! மாகாண சபை அமைப்பில் நம்பிக்கையில்லாத தமிழ் மக்களுக்கு உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு எந்தவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை!!

தமிழ் மக்களின் தன்னாட்சியை - சுயநிர்ணய உரிமையை நோக்கி புலிகளின் தலைமையில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பயணிப்பார்கள்!!!

*வாழ்வும் வரும்*

*சாவும் வரும்*

*பொறு நீ*

*சில நாள்*

*விடிவும் வரும்*

Excerpt from the Morning Leader Editorial 18 October 2006

# De-merger: Another problem on Mahinda's plate

The Supreme Court ruling on Monday that the merger of the Northern and Eastern Provinces in 1987 was invalid in law would have widespread repercussions in the administrative, political and even diplomatic spheres. Following the Supreme Court decision the North-East Provincial Council which was administered by a governor appointed by the president, will cease to exist. So will the office of the incumbent governor.

There was utter bedlam in the administration of this merged province — already in a chaotic state — with the LTTE having control of the areas under it while government officials and the military having control of the government controlled areas. Even in LTTE controlled areas the government has continued to provide public facilities such as education and health. With the recent escalation of violence and increased hostilities between the two sides, how President Rajapakse will tackle the situation is to be seen.

The Supreme Court decision adds to President Rajapakse's problems. He has on one side the JVP and JHU which precipitated the de-merger problem by petitioning the court against the merger. No doubt, if Rajapakse attempts moves to restore the merger, they will find it a good enough cause to throw him out of power by fair or foul means.

Rajapakse's other problem is that in less than two weeks, peace negotiations with the LTTE are scheduled in Geneva. Powerful foreign nations, the four Co-Chairs —US, EU, Japan and Norway — have been urging that these talks be resumed and India too is in support of the talks. And they have made their support for a merged north and east quite clear when the JVP commenced its demand for a de-merger.

The Co-Chairs in their last statement issued from Brussels while urging the re-commencement of talks made the point that the existing infrastructure in the north and east should not be changed. This implied that they did not want a de-merger of the two provinces.

It will be recalled that this merged province is the baby produced by India in 1987. New Delhi still wants this merger to remain, the only surviving product of their Sri Lankan adventure. The 13th Amendment under which the amalgamation of the two provinces was made was consequent to Indian military intervention. President Jayewardene had his arm twisted by Rajiv Gandhi but the 'Wily Fox' managed to keep the proviso of the amalgamation being subject to de-commissioning of arms and a referendum, both of which did not materialise due to subsequent events.

**New Delhi still wants this merger to remain, the only surviving product of their Sri Lankan adventure.**

New Delhi leaders to whom all parties pay regular pooja would certainly not be pleased with a de-merger. Thus President Rajapakse has to find a way out. His modus operandi, during the 10 months in office has been to promise everything to everyone and do nothing about the promises, but he is now running out of options.

Does the President seriously intend to hold two referenda in the north and east over the de-merger issue? It could only be held courtesy Velupillai Pirapaharan. But will he be willing to do so, particularly in the east? The Eastern Province has almost near equal proportions of Sinhalese, Tamils and Muslims and past election results have consistently shown that pro LTTE parties cannot get an outright majority in a free and fair election.

Perhaps, President Rajapakse can put the ball into the court of the Co-Chairs and ask them to persuade the LTTE Leader to permit a referendum under international supervision. That could put Pirapaharan in a spot but he has shown scant regard for them. Even proscriptions have failed to move him.

Rajapakse's only hope now is the UNP. He has no choice but to ditch the JVP and JHU and go with the UNP which has the support of the Co-Chairs. But he has to make up his mind. He cannot say, 'yes,' to one and all and do nothing about the promises, hoping that all such promises will be gone with the wind.

He was presented with one more opportunity by the UNP on Monday with both the working committee and the parliamentary group agreeing to enter into a MoU on October 23. If the President seizes this lifeline he could still just about overcome the current crisis and steady the ship of state. If on the other hand he fails to do so and instead takes a breakaway group of UNP MPs on the lookout for portfolios, he will only be indulging in patchwork which will come apart sooner rather than later.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
சேயோன் - சாரங்கி
சிறி - சுஜீத்

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
கௌரி - பகீரதி

அச்சு
ஊர்மிளா

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - அனு - கிரி

இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
ஊர்மிளா - முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)

| | |
|---|---|
| லண்டன் | 020 8640 4604 |
| | 020 8286 9327 |
| பாரிஸ் | 01 7289 8165 |
| சுவிஸ் | 043 500 0277 |

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com



'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The view's expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.


# சற்று மாறுதலுக்காக . . . .

## புதியன புகுதல் / பழையன கழிதல்

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

அதை எழுதுவமா, இதை எழுதுவமா என்று வந்து குவியும் சிந்தனை ஒரு கணம். எதை எழுதுவம் என்று ஒன்றும் தோன்றாமல் சூனியமாய் நிற்கும் சிலகணம். யாவற்றையும் தாண்டி பிடரி பிடித்து உந்தித் தள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் நேரும் கணம் உண்டு. நெஞ்சில் பொங்கி, சிந்தையில் குவிந்த, விரயப்படுத்தா விடில் சிந்தி விடுமோ, சிதறி விடுமோ, கொட்டுண்டு விடுமோ என்று குமைந்து, தாள் எடுத்து, பேனா எடுத்து, சிந்தையில் தெறித்ததை கைகளுள் செலுத்தி, பேனாவில் இறக்கி, தாள்களில் பதித்து விட, இது படைப்பிலக்கியம் அல்ல; இது பத்தி (Column) இலக்கியம்.

இதில் ஆகக் கொடுமை என்னவென்றால் 'பத்தி' (Column) என்று நான் எழுதினால், 'பந்தி' (Paragraph) என்று அச்சுக்கோர்த்து விடுகிறார்கள் நண்பர்கள். பத்திரிகை உலகில் பத்தி என்ற ஒரு சொல் இருப்பது அவர்களுக்குத் தெரியாது. பந்தி பிரித்து எழுது என்று பள்ளிக்கூடத்தில் படித்த ஞாபகத்தில் பத்தியை பந்தி என்று கோர்த்து விடுகிறார்கள். நான் இப்பொழுது எழுதிய இந்தப் பந்திக்குப் பிறகாவது பத்தி வேறு பந்தி வேறு என்று புரிந்து கொண்டால் மெத்த மகிழ்ச்சி.

இப்படி இன்னோரன்ன இடர்ப்பாடுகளை புலம் பெயர்ந்த நாடுகளில் நாம் சந்திக்கிறோம். அதாவது 'இரண்டும் கெட்டான்' வாழ்வில் இருந்து நாம் இடர்ப்படுகின்றோம். புலம் பெயர் வாழ்வில் எதிர்காலம் நமக்கு மேலும் என்னென்ன இடர்தரக் காத்திருக்கின்றதோ? எனது நெருங்கிய நண்பர் கனடாவிலிருந்து வாரப் பத்திரிகை ஒன்றினைக் கொண்டு வருகின்றார். ஆசியா தவிர்ந்த அனைத்து தமிழர் வாழிடங்களிலும், அந்த வாரப்பத்திரிகை விற்பனையாகின்றது. இப்போது வருவனவற்றில் மிக முக்கியமான பத்திரிகையாக அதை நான் கருதுகின்றேன்.

நண்பர் எழுதுகின்ற கட்டுரைகள், உரைச் சித்திரங்கள் ஆகியவற்றின் மொழிநடையில் எனக்கு மயக்கம் உண்டு. வசீகரமான ஒரு மொழி நடை. பத்திரிகை உலகிற்கு அது ஒரு புதிய பாணியும் கூட. எளிதாகவும் இலகுவாகவும் எல்லோரையும் சென்றடையும்.

ஆனால் வாக்கியங்களின் இலக்கணமும், சொற்களின் சிதைவுகளும் சிலசமயம் எனக்கு நெருக்கென்கிறது. அவருக்கு நுழைந்து போகத் தெரியாது. நுளைந்துதான் போகத்தான் தெரியும். அதாவது ள, ழ வேறுபாட்டை அவர் கவனத்தில் கொள்கிறாரில்லை. நானும் பல முறை சொல்லி யாயிற்று. சொல்லும் போது ஒப்புக் கொள்கிறார் ஆயினும் தவறு தொடர்கிறது.

இது தவறா என்றொரு கேள்வி எழுகிறது. அவர் எழுதுவது எனக்கு/எல்லோருக்கும் புரிகிறது. பிறகென்ன? மொழியின் செயற்பாடு கருத்தைப் பரிமாறுவதுதானே? நூறு வீதம் பரிமாறப்பட்டு விட்டது. பேந்தென்ன?

அப்படிச் சொன்னால் ஆயிற்றா?

1) சிங்கள இராணுவம் தமிழ்த் தேசத்தைக் கொளுத்துகிறது.

2) சிங்கள இராணுவம் கொழுத்துப் போய்க் கிடக்கிறது.

இரண்டு 'கொளு/ழுத்தல்'களுக்கும் வித்தியாசம் உண்டல்லவா? இல்லையென்பீரா யாரும்?

ஆக ளகர, ழகர வேறுபாடு வேண்டுமல்லவா? அதாவது இலக்கண, சுத்தியுடன் எழுதுவது அவசியமல்லவா?

ஓம் என்று ஒப்புக் கொள்ள மனம் இடம் தரவில்லை. ஏனென்றால் 'செந்தமிழ் பண்டிதராக' நாம் இங்கு பறைந்து கொண்டு திரிய வேண்டும். அதற்கு நமக்கு காலமும் வாழ்வும் இடம் தராது. இலக்கணத் தூய்மை அல்ல: இலக்கண ஒழுங்கு இருக்கலாம்; இருக்க வேண்டும்.

கத்தி கொண்டு வெட்டினான் /கத்திக்கொண்டு வெட்டினான். இரண்டுக்கும் உள்ள பொருள் வேறுபாட்டை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆக, காலத்திற் கேற்ப மொழியை நாம் செப்பனிட வேண்டும். இதனை நாம் செப்பனிடுகின்றோமோ இல்லையோ, காலத்துக்குக் காலம் மொழி தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கும்.

ஒருகணம் உற்று உணர்ந்து பாருங்கள். நான் மேற்சொன்ன கனடாப் பத்திரிகையையும், இப்போது நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கின்ற '**ஒரு பேப்பர்**' பத்திரிகையையும். இந்தப் பத்திரிகையின் மொழியில் எத்துணை மாற்றங்களைக் காண்கிறீர்கள். ஒரு புன்னகையுடன், மாறா வியப்புடன் இந்தப் பத்திரிகைகளை நீங்கள் கையில் எடுக்கின்றீர்கள் அல்லவா? புன்னகையைத்தான் விடுங்களேன். மற்றைய பத்திரிகைகளிலும் பார்க்க ஏதோ வித்தியாசம் இருக்கின்றது என்று உணர்கின்றீர்கள் அல்லவா? 'ஓசி' என்ற சொல் ஒருகணம் உங்களை முகம் சுளிக்க வைத்தாலும், எரிச்சல் வருகிறது என்று நீங்கள் எழுதினாலும் கொடுப்புக்குள்ளிருந்து ஒரு புன்சிரிப்பு வர முயல்கின்றதல்லவா? அதன் காரணம் என்ன? சிந்தியுங்கள் மாற்றம் வேண்டும் மாற வேண்டும். பழைய 'லை' மயில்போல அழகுதான். ஆனால் கணனித் தொழில் நுட்பத்திற்கு அது இடைஞ்சலே! அழகு என்பதற்காக அதனை நாம் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்க முடியுமா?

எழுத்தில், சொல்லில், இலக்கணத்தில் நடையை இன்னும் இன்னுமென மாற்றத்தை வேண்டி நிற்கிறது மொழி. ஐ,ஔ என்னும் வரி வடிவங்களைத் தவிர்ப்போம்.ஏனென்றால் அதன் ஒலிவடிவத்திற்கு வேறு வரிவடிவம் உண்டு. அய்யர் என்போம். அவ்வை என்போம்.

பனையிலிருந்து காவோலையை நாம் களையத்தான் வேண்டும். அது விழுகிறதோ இல்லையோ குருத்தோலை வரத்தான் வேண்டும். இதைத்தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் பவணந்தி முனிவர் சொன்னார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்.

# கந்தசஷ்டி விரதம்

**வாசகன்**
*(ஒரு பேப்பருக்காக)*

தமிழ் மக்களின் வாழ்க்கையில் இறைவனுக்கும் இறைவணக்கத்திற்கும் ஒரு முக்கிய இடம் இருக்கிறது. பண்டைக் காலத்திலிருந்தே இயற்கையில் இறைவனைக் கண்டு வணங்கி வந்த தமிழர்கள் முருகனைத் தங்கள் முழுமுதற் கடவுளாக்கி அவனை வீரத்தின் இருப்பிடமாய் அநியாயத்தையும் அகங்காரத்தையும் களைபவனாய்க் கண்டு வழிபட்டனர்.

இடையிலே தங்களது நலனுக்காய் புகுத்தப் பட்ட இடைச்செருகல்களையும் கிரியைகள் சடங்குகள் என்று யாரோ புகுத்தியவற்றைத் தலையில் வைத்துக் கொண்டாடுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம்.

நாளென் செயும் வினைதான் என்செயும் எனை நாடி வந்த
கோளென் செயும் கொடுங் கூற்றென் செயும் குமரேசன் இரு
தாளும் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே

என்ற பாடலையும் அதன் பொருளையும் மறந்து கோள்கள் கோபிக்கப் போகின்றன. தீங்கு விளைவிக்கப் போகின்றன என்று நம்பி பயந்து, காசையும் நேரத்தையும் கொட்டி பரிகாரம் பரிகாரம் என்று அலைந்து கொண்டிருக்கிறோம்.

அறியாமையும் அகங்காரமும் நீங்குகின்ற கந்தர்சஷ்டி காலத்தில் தமிழ் மக்களின் முழு முதற்கடவுள் பற்றியும் கந்தசஷ்டி விரத மகிமையைப் பற்றியும் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

தமிழ்க் கடவுளான முருகனை நினைத்து அனுஷ்டிக்கப்படுகின்ற விரதங்களில் முதன்மையான விரதமான கந்தசஸ்டி விரதம் ஐப்பசி மாதச் சுக்கில பட்சப் பிரதமை தொடங்கி சஸ்டி வரையுள்ள 6 தினங்களும் அனுஸ்டிக்கப்படுகிறது.

ஆணவத்தின் வடிவமான சூரனையும் கன்மத்தின் வடிவமான சிங்கனையும் மாயையின் வடிவமான தாரகனையும் இறைவன் அழித்தான் என்பது புராணம். எங்கள் ஆன்மாவைக் கட்டியிருக்கின்ற ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் இறைவன் சங்கரிக்கிறான் என்பதே இதன் தத்துவமாகும்.

**விரதமிருப்பதால் ஆன்மீக ரீதியான இந்தப் பலன்களுக்கு அப்பால் விரதமிருக்கும் போது உடலில் இருக்கின்ற நோயுற்ற அல்லது பழுதடைந்தகலங்கள் கரைகின்றன. உடல் ஓய்வடைகிறது, எல்லா உறுப்புக்களுக்கும் அமைதி கிட்டுகிறது, நரம்புத் தளர்ச்சி நீங்குகிறது, உடல் உஸ்ணம் குறைந்து தண்மைகிடைக்கிறது. இரத்தமும் நிணநீரும் தூய்மையாக்கப்படுகின்றது. மனதின் சக்தி, பகுத்தறிகின்ற தன்மை, நினைவாற்றல் என்பன அதிகமாகின்றது என மருத்துவம் கூறுகின்றது.**

இவ்விரத காலத்தில் உபவாசம் இருப்பது உத்தமம் எனினும் வயோதிபர்கள், உடல்நலம் குறைந்தவர்கள் அவரவர் தேகநிலைக்கேற்ப இரவில் இளநீர் அருந்தியும் பால் பழம் உட்கொண்டும், ஒரு வேளை ஆகாரம் உட்கொண்டும் விரதத்தை அனுஸ்டிக்கின்றனர். ஆறாவது நாளான கந்தசஸ்டியன்று பூரண உபவாசம் இருந்து அன்றிரவு விழித்திருந்து காலையில் உணவருந்தித் தம்விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

இக்காலப்பகுதியில் தினமும் கந்தர்சஸ்டி கவசம், கந்தர் அனுபூதி, கந்தபுராணம் ஆகியவற்றைப் பாராயணம் செய்து மனதைத் தூய்மைப் படுத்திக் கொள்ளலாம்.

முழுமுதற் கடவுளான முருகனை நினைத்து விரதம் அனுஸ்டிக்கும் போது மனம் தனித்து விழித்து பசித்து இருந்து அழுக்குகளையும் அசுத்தங்களையும் அகற்றி தூய்மையடைகிறது.

இவ்விரதத்தை அனுஸ்டிப்பதன் மூலம் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்கள் அகற்றப்படுவதுடன் காமம், கோபம், பேராசை, செருக்கு, மயக்கம், பெருமை என்னும் ஆறு குணங்களும் எம்மைவிட்டு அகலுகின்றன.

ஆன்மீகரீதியான இந்தப்பலன்களுக்கு அப்பால் விரதமிருக்கும் போது உடலில் இருக்கின்ற நோயுற்ற அல்லது பழுதடைந்த கலங்கள் கரைகின்றன. உடல் ஓய்வடைகிறது, எல்லா உறுப்புக்களுக்கும் அமைதி கிட்டுகிறது, நரம்புத் தளர்ச்சி நீங்குகிறது, உடல் உஸ்ணம் குறைந்து தண்மை கிடைக்கிறது. இரத்தமும் நிணநீரும் தூய்மையாக்கப்படுகின்றது. மனதின் சக்தி, பகுத்தறிகின்ற தன்மை, நினைவாற்றல் என்பன அதிகமாகின்றது என மருத்துவம் கூறுகின்றது.

எனவே மருத்துவ ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த கந்தர்சஷ்டி விரதத்தை அனுஸ்டித்து எம்மைச் சுற்றியுள்ள அறியாமை அகங்காரம் என்பவற்றை களைந்து உய்வடைவோம்.

*தீயவை புரிந்தாரேனும்*
*குமரவேள் திருமுனை*
*உற்றவ தூயவராகி*
*மேலைத் தொல்கதி அடைவர்*

*- கச்சியப்பர்*

# தீபா'வலி'யும் தமிழரும்



வி. சபேசன்
*(ஒரு பேப்பருக்காக)*

உலகில் வாழும் அனைத்து இனங்களும் பல வகையான விழாக்களை ஆண்டு தோறும் கொண்டாடி வருகின்றன. போரில் வெற்றி பெற்ற நாள், விடுதலை அடைந்த நாள், வருடத்தின் முதல் நாள், கடவுளோ அல்லது கடவுளின் தூதரோ பூமிக்கு வந்ததாக நம்பப்படுகின்ற நாள் என்று மகிழ்ச்சியையும், வெற்றியையும், விடுதலையையும் குறிக்கின்ற பலவிதமான விழாக்களை மனித இனம் கொண்டாடி வருகிறது.

ஆனால் தான் தோற்கடிக்கப்பட்ட, அடிமைப் படுத்தப்பட்ட, இழிவுபடுத்தப்பட்ட ஒரு நாளை மகிழ்ச்சியாக கொண்டாடுகின்ற ஒரு வெட்கம் கெட்ட இனமும் இந்த உலகத்தில் உண்டு. அது வேறு யாரும் அல்ல. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்னே வாளோடு தோன்றிய மூத்த குடி என்று தன்னை அறிமுகம் செய்கின்ற தமிழினம் தான் அது. பொங்கல் போன்ற விழாக்களுக்கு கொடுக்காத முன்னுரிமையை தீபாவளிக்கு கொடுத்து, தன்னுடைய அடிமை சாசனத்தை ஆண்டு தோறும் புதுப்பித்துக் கொண்டிருக்கிற தமிழினமாகிய நாங்கள் தான் அந்த பெருமைக்குரியவர்கள்.

இதோ ! இந்த ஆண்டும் தீபாவளி வந்து விட்டது. தமிழர்கள் புத்தாடை அணிந்து கோயிலுக்கு போகிறார்கள். நேரிலும், தொலைபேசியிலும் 'தீபாவளி வாழ்த்துக்கள்' சொல்லி மகிழ்கிறார்கள். தமிழர் கடைகளில் தீபாவளி சிறப்பு விற்பனை விளம்பரப்படுத்தப்படுகின்றன. தீபாவளி திரைப் படங்கள் அணி வகுக்கின்றன. தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்குகிறன. புத்தக நிறுவனங்கள் தீபாவளி சிறப்பு மலர் வெளியிடுகின்றன. கொண்டாட்டம் களை கட்டுகிறது.

ஆனால் இந்த தீபாவளியின் பின்னணி வரலாறு எத்தனை பேருக்கு தெரியும்? எங்களின் மூதாதையர் அழிக்கப்பட்ட நாளை, தமிழினம் தோற்கடிக்கப்பட்ட நாளை கொண்டாடுகிறோம் என்பது எத்தனை பேருக்கு தெரியும்?

அதைப் பார்ப்பதற்கு முன் தீபாவளியை தமிழினத்திற்குள் திணித்த ஆரியப் பார்ப்பனர்கள் தீபாவளி குறித்து சொல்லுகின்ற கதையை சுருக்கமாகப் பார்ப்போம்.

முன்பொரு காலத்தில் ஒரு அரக்கன் இருந்தானாம். அவன் பூமியைபாயாக சுருட்டி கடலுக்குள் ஒளித்து வைத்துவிட்டானாம். படைப்புத் தொழிலை செய்வதற்கு பூமி இல்லையே என்று கவலைப்பட்ட பிரம்மா விஸ்ணுவிடம் முறையிட்டாராம். விஸ்ணு பன்றியாக மாறி அரக்கனோடு சண்டை போட்டு அவனை கொன்று பூமியை மீட்டாராம். பூமிக்கு தன்னை மீட்ட பன்றியின் மீதே காதல் வந்துவிட்டதாம். பன்றியும் சரியென்று சொல்ல இருவரும் உறவு கொண்டார்களாம். அதனால் ஒரு பிள்ளை பிறந்ததாம். அவன்தான் நரகாசுரன் என்ற அரக்கனாம். அவன் தவம் செய்து தன் தாயைத் தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றானாம். வரம் பெற்ற அரக்கன் எல்லோரையும் கொடுமைப் படுத்தினானாம் கடைசியில் விஸ்ணு கிருஸ்ணனாகவும் பூமாதேவி சத்திய பாமாவாகவும் அவதாரமெடுத்து நராகசுரனோடு போரிட்டார்களாம். கடைசியில் நரகாசுரன் பெற்ற வரத்தின்படி அவனுடைய தாயாகிய சத்தியபாமாவால் கொல்லப்பட்டானாம். அவன் கொல்லப்பட்ட நாள்தான் தீபாவுளியாம்.



*பொம்பிளையள் குளிக்கிற இடத்துக்குப் போய் அவையளின்ரை உடுப்பைக் களவெடுத்தவர் இவர். ஊரிலை இப்படிச் செய்தா அவயளைக் காவாலி எண்டுதான் சொல்லுறவயள். அப்படியெண்டால் . . .*

இப்படி ஒரு ஆபாசமான புராணக் கதையைக் அடிப்படையாகக் கொண்டு இந்த தீபாவளியை ஆரியப்பார்ப்பனியம் தமிழர்களுக்குள் திணித்தது. உருண்டையாக இருக்கின்ற பூமியை எப்படி பாயாக சுருட்டலாம் என்றோ, பூமியிலே இருக்கின்ற கடலுக்குள் எப்படி பூமியையே ஒளித்து வைக்கலாம் என்றோ, பூமியாலும் பன்றியாலும் உறவு கொள்ள முடியுமா என்றோ கேள்விகளை எழுப்ப முடியாதபடி தமிழினத்தை மடமைக்குள் தள்ளியது

ஆனால் தீபாவளி கொண்டாடப்படுவதன் பின்னணி வேறு. இங்கே நராகசுரன் என்று உருவகப்படுத்தப்படுபவன் யார்? புராணங்களில் அசுரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் யார்? இதற்கு பதில் தெரிந்தவர்கள் தீபாவளியை கொண்டாட மாட்டார்கள். தெரிந்த பின்பும் கொண்டாடினால் அவர்கள் சூடு சுரணை உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள்.

பாரத கண்டத்தின் வரலாறு என்பது ஆரிய திராவிடப் போரை அடிப்படையாகக் கொண்டது. திராவிடர்கள் எனப்படுகின்ற தமிழர்கள் ஆண்டு கொண்டிருந்த பெரும் நிலப்பரப்பை வந்தேறு குடிகளான ஆரியர்கள் மெது மெதுவாக ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். நில ஆக்கிரமிப்போடு, மொழி ஆக்கிரமிப்பும், பண்பாட்டு ஆக்கிரமிப்பும் நிகழ்ந்தது. ஆரியர்களின் இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து தமிழர்கள் நீண்ட காலம் வீரப் போர் புரிந்தார்கள். இந்தப் போர்கள்தான் புராணக் கதைகளில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போர்களாக வர்ணிக்கப்படுகின்றன.

சுரபானம் அருந்துகின்ற ஆரியர்கள் சுரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். சுர பானம் அருந்தாத திராவிடர்கள் அசுரர்கள் என்று அழைக்கப் பட்டார்கள். அத்துடன் அசுரர்கள் தெற்கே வாழ்பவர்கள் என்றும் புராணக் கதைகளில் குறிப்பிடப் படுகிறார்கள். கிருஸ்ணனும் சரி அதற்கு முந்தையவனாக சொல்லப்படுகின்ற இராமனும் சரி, அசுரர்களை அழிப்பதற்கு தெற்கு நோக்கி படை எடுத்து வந்ததாகவே ஆரியர்களின் புராணங்கள் சொல்லுகின்றன. அசுரர்கள் கறுப்பாக இருப்பார்கள் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறார்கள். புராணக் கதைகளை ஆரய்ந்த பாரதத்தை சேர்ந்த நடுநிலையான ஆராய்ச்சியாளர்களும், மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்களும் அசுரர்கள் என்று திராவிடர்களையே குறிப்பிடப்படுகிறது என்று கூறி உள்ளார்கள்.

ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த போரைக் கூறுகின்ற கதையே இராமாயணம். அன்று தமிழ் மண்ணை ஆண்ட மன்னன் இராவணனாக உருவகப்படுத்தப்படுகிறான். ஆக்கிரமிப்பு போர் நடத்திய ஆரியர்களின் மன்னனாக இராமன் இருக்கின்றான். தமிழ் மண்ணின் பல பகுதிகளை கைப்பற்றி தமிழ் மன்னர்களை ராமன் வெற்றி கொள்கிறான். கடைசியில் தமிழர்களின் தலைநகரான இலங்கை வரை சென்று பல சூழ்ச்சிகள் செய்து இராவணனையும் கொல்கிறான். இதுதான் இராமாயணக் கதை. இராவணனை பேரரசனாகக் கொண்டே அன்று தமிழர்களின் அனைத்து அரசுகளும் இருந்தன என்பதை இராமாயணத்தை ஆராய்கின்ற போது புரிந்து கொள்ள முடிகிறது. இராவணனின் வீழ்ச்சிக்கு பிறகு சில காலம் கழித்து ஆரிய ஆக்கிரமிப்பை எதிர்த்து போர் புரிந்த தமிழ் மன்னர்களில் ஒருவனே நரகாசுரன். நரகாசுரனும் மற்றைய பல மன்னர்களும் ஆரிய ஆக்கிரமிப்பை எதிர்த்து போர் புரிந்து வீர மரணம் அடைந்தார்கள்.

கடைசியில் தமிழினத்தை வெற்றி கொண்ட ஆரியர்கள் தமிழர்களின் வரலாற்றை திரிவு படுத்தினார்கள். இன்று விடுதலைப் போராளிகளை ஆக்கிரமிப்பாளர்கள் பயங்கரவாதிகள் என்று சொல்வது போன்று ஆரியர்கள் அன்று தமிழின விடுதலைக்காக போரடியவர்களை அரக்கர்கள் என்று சொன்னார்கள். முறுக்கிய மீசையோடு கம்பீரமாக நின்று தமிழ் மண்ணைக் காக்க இறுதிவரை போராடி தன்னுயிரை ஈந்தவர்களுக்கு கொம்புகளும் கோரமான பற்களும் முளைத்து விட்டன.

ஒரு முறை சிந்தித்துப் பாருங்கள்! சிங்களப் படைகள் யாழ் நகரைக் கைப்பற்றிய நாளை நாம் கொண்டாடுவோமா? நிச்சயமாகக் கொண்டாடுவோம், சிங்களம் தமிழினத்தை முழுமையாக வெற்றி கொண்டால். அப்பொழுது எங்களின் விடுதலைப் போரளிகளுக்கும் கொம்புகளும், கோரமான பற்களும் முளைக்கும். வெற்றி பெற்றவன் திணிப்பதே வரலாறு என்று ஆகின்றது. தோற்றுப் போனவனின் வரலாறு அவனுடனேயே புதைகுழிக்குள் புதைக்கப் படுகிறது. எமது தமிழ் மன்னர்கள் அன்று தோற்றுப் போனார்கள். அதனால் அரக்கர்கள் ஆகி விட்டார்கள்.

இப்படி அரக்கன் ஆக்கப்பட்டு விட்ட ஒரு விடுதலை வீரனின் நினைவுநாளை நாம் மகிழ்ச்சியாகத் தீபாவளி என்று கொண்டாடுகிறோம். ஆரியர்கள் தமிழினத்தை வென்றது மாத்திரம் அன்றி, வென்ற நாளை தமிழர்களையே கொண்டாட வைத்து விட்டார்கள். இதை உணர்ந்து தமிழினம் இந்த தீபாவளியை கொண்டாடுவதை நிறுத்த வேண்டும். இங்கே இன்னும் ஒன்றையும் குறிப்பிடுதல் பொருத்தமாக இருக்கும். இன்றைய நாகரீக உலகில் யாருடைய இறப்பும் கொண்டாடப்படுவதில்லை. எம்மை ஆயிரக்கணக்கில் கொன்றொழித்த எதிரிகள் கொல்லப்பட்ட நாளை நாங்கள் யாரும் கொண்டாடுவதில்லை. கோடிக் கணக்கில் மனிதர்களை கொன்ற கிட்லரின் இறப்பையும் யாரும் கொண்டாடுவதில்லை. இப்படி யாராக இருந்தாலும், ஒரு இறப்பு கொண்டாடப்படுவதில்லை. ஆனால் நாம் எமக்காக உயிரை ஈந்த ஒரு மன்னனின் நாளை தீபாவளி என்று மகிழ்ச்சியாக கொண்டாடுகிறோம். இந்த நிலை மாறும் நாளே உண்மையில் தமிழினம் விடுதலை அடைந்த நாளாக இருக்கும்.

*நல்ல மாட்டுக்கு*
*ஒரு சூடாம் - சுயம்*
*மறுக்கும் மாந்தர்க்கு*
*மானம் ஓர் கேடாம்*

# ஒரு பேப்பரைக் கொளுத்துவோம்!

## குட்டிச் சாத்தான்கள் கும்மியடிக்கின்றன

ஒரு பேப்பரில் ஆஞ்சநேய பக்தர் ஒருவரின் கடிதம் கண்டு அதிர்ச்சி. ஒரு பேப்பரின் ஆசிரியர் குழு மாறிவிட்டதோ என்று ஒரு பேப்பரைப் புரட்டிப் பார்த்தேன். அதே ஆட்கள் தான். ஒரு பேப்பர் காசை வாங்கிக் கொண்டு இப்பிடி ஒரு 'அட்வேட்' டைப் போட்டால் அது பரவாயில்லை. ஆஞ்சநேய பக்தரின் முழுக் கடிதத்தையும் அப்பிடியே போட்டு விடுகின்றீர்களே! ஆரையா நீங்கள்? பகுத்தறிவு அது இதுவெண்டு பல்லவி பாடிக் கொண்டு திரிவாரே உங்கள் சேயோன்! அவருமா இதைப் போட அனுமதித்தார்? உங்களுக்கு மண்டையில் போடத்தான் வேண்டும்.

உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? மர மண்டைகள் நீங்கள்! உங்களுக்கு இதெல்லாம் எங்கை விளங்கப்போகுது! எமது ஈழத்தை முதலில் எரித்தவனே இந்த ஆஞ்சநேயன் தான். அதன் பிறகு தான் இந்தச் சிங்கள நாய்கள் எங்கள் ஈழத்தை எரிக்கத் தொடங்கினார்கள். ஆரிய குலத் தலைவன் இராமனின் அடிவருடியான ஆஞ்சநேயன் திராவிட குலத் தலைவன் இராவணனுக்கு எதிராக. இராவணனின் நாடான அப்போதைய ஈழத்தை எரித்தான். இதைத்தான் இராமாயணம் சொல்கின்றது.

உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? உங்களுக் கெங்கே தெரியப் போகுது. இந்தியாவில் இலட்சக் கணக்கில் இராமர் கோயில்கள் இருக்கின்றன. ஆனால் எங்களுடைய ஈழத்தில் ஒரு இராமர் கோயிலை நீங்கள் கட்ட மாட்டீர்கள். அவ்வளவு ரோசமுள்ளவர்கள் ஈழத்தமிழர். இப்ப என்னடா வென்றால் ஒரு அடிவருடிக் கூட்டம் ஆஞ்சநேயர் அது இதுவெண்டு வெளிக்கிட்டிருக்குதுகள். யாழ்ப்பாணம் மருதனாமடம் சந்திக்கு கிட்டவும் ஒரு ஆஞ்சநேயர் கோயில் எழும்பியிருக்கிறது.

நமது தலைவரும் மக்களின் மர உணர்வுகளை மதிக்க வேண்டும் என்பதற்காக பேசாமலிருக்கின்றார். அவர் இப்படிப் பேசாமல் இருப்பதைப் பார்த்து, இந்தக் குட்டிச் சாத்தான்கள் கும்மியடிக்கின்றன. இந்தக் குட்டிச் சாத்தான்களை ஓட ஓட விரட்டியடிக்க எங்களுக்கு 'பெரியார்'கள்? நிறையப் பேர் தேவை. விநாயக சதுர்த்தியண்டு பிள்ளையார் சிலைக்கு செருப்பு மாலை போட்டு, ஊர்வலமாகக் கொண்டு திரிந்து, நடுச்சந்தியில் பிள்ளையார் சிலையைப் போட்டு உடைத்தார் பெரியார். கறுப்புநிறம் அபசகுனம் என்று ஆரியர் சொல்வதைக் கேட்டு, பெரியார் கறுப்புச் சட்டை அணிந்து கொண்டு திரிந்தார். அப்பிடித்தான் இருக்க வேண்டும்.

இந்த ஆஞ்சநேயர் பற்றி சேயோன் முந்தி ஒருக்கா எழுதியிருக்கிறாரே. அதுக்குப் பிறகுதான் நான் இந்த ஆஞ்சநேயர் பற்றி அறிய வெளிக்கிட்டது. ஒரு பேப்பரின்ர கவரிலை நரகாசுரனுக்கு வீரவணக்கம் எண்டு போனமுறை தீபாவளிக்குள்ளை போட்டீர்களே! அதையெல்லாம் மறந்தா இப்போது ஒரு அடிவருடிக் குருடனின் கடிதத்தைப் போட்டிருக்கிறீர்கள்.

எனக்கு வாற பயங்கரக் கோபத்திலை எழுதக் கூட முடியாமல் கிடக்கு. ஒண்டு சொல்லிப் போட்டன். இதுதான் கடைசி எச்சரிக்கை. இனி இப்பிடி ஆஞ்சநேய பக்தன் அவன் இவன் எண்டு கோவேறு கழுதைகளின்ரை கடிதம் ஏதும் ஒரு பேப்பரிலை கண்டனோ, ஒரு பேப்பரை அப்பிடியே கட்டாக தூக்கிக் கொண்டு வந்து நடுறோட்டிலை வைச்சுக் கொளுத்துவன். பெரியார் மீது சத்தியம். இதுதான் கடைசி எச்சரிக்கை. இதையும் மீறி நீங்கள் அப்பிடி ஏதும் போட்டீங்கள் எண்டால், உங்கன்ரை அலுவலகம் இருக்கிற இடம் எனக்குத் தெரியும். அலுவலகத்துக்கை புகுந்து அவ்வளவத்தையும் கொளுத்திப் போட்டுத்தான் வருவன். விளங்கிச்சுதோ?

*- அரக்கன்*

# சிந்திப்போம் செயற்படுவோம்

எந்த நாட்டிலிலும் எக்காலத்திலும் கண்டிராத காட்டுமிராண்டித்தனமான அரசபயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக எம்முடைய தாயக மக்கள் தினமும் அனுபவித்து வரும் துயரங்களையும் துன்பங்களையும் இன்னல்களையும், இழப்புக்களையும், இடர்களையும், வேதனைகளையும் கண்டு சகல புலம் பெயர்ந்து வாழும் மக்களாகிய நாங்கள் எம்மிடையே உள்ள எல்லா வேறுபாடுகளையும் மறந்து பலவிதமான சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்துத் தாயகத்தில் நடைபெறும் அராஜகத்தையும், கொடுமைகளையும், மனித உரிமை மீறல்களையும் மேற்குலக நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்தி வருகிறோம்.

ஆனால் அதேவேளை இன்னொரு வகையில் மறைமுகமாக ஸ்ரீலங்கா அரசுக்கு அன்னியசெலாவணியை ஈட்டிக்கொடுக்க உதவுகின்றோம். ஒத்துழைப்பு அளிக்கின்றோம் என்பதை உணரவேண்டும். இவ்விதமாக ஸ்ரீலங்கா அரசுக்குச் சென்றடையும் பணம் எம் மக்களை அழித்தொழிப்பதற்குரிய கொடிய யுத்த தளபாடங்களையும், ஆயுதங்களையும் இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே இயன்றளவில் ஸ்ரீலங்காவிலிருந்து இறக்குமதியாகும் நுகர்வுப் பொருட்களான குளிர்பானங்கள், குடிபானங்கள் (மதுபானவகைகள்) மரக்கறி வகைகள், மா வகைகள் முதலியவற்றைப் பாவிக்காமல் தவிர்ப்பதன் மூலம் அரசாங்கத்திற்குச் சென்றடையும் அன்னிய செலாவணியை மட்டுப்படுத்தவும். அதேவேளையில் எமது எதிர்ப்பை தெரிவிக்கவும் முடியும்.

மேலும் அதிக தொகையான அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் ஸ்தாபனம் ஸ்ரீலங்கா விமான சேவை (Sri Lankan Airlines) இந்த விமான சேவை நிறுவனத்திற்கு நடாத்தப்படும் விமான சேவை மூலம் எமது பிரயாணங்களை மேற்கொள்வதினால் பல கோடி ரூபாய்கள் அன்னியச் செலாவணி சென்றடைகிறது. ஆகவே Sri Lankan Airlines இல் பிரயாணம் செய்வதைத் தவிர்த்து மற்றைய உலக நாடுகளினால் உலகை முழுவதும் சேவையாற்றும் விமான சேவைகளைப் பயன்படுத்த நாங்கள் சங்கல்பம் எடுப்போமாக.

ஸ்ரீலங்காவிலிருந்து இறக்குமதியாகும் நுகர்வுப் பொருட்களுக்கு ஈடாக தாய்லாந்து, தென்னமெரிக்கா, ஆபிரிக்கா நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மரக்கறி வகைகள் கேரளாவிலிருந்து இறக்குமதியாகும் மா வகைகளைப் பாவிப்பதற்கு முன் வருவோமாக.

இந்த விதமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மொத்த இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள எம் தமிழ் உறவுகளும், மற்றும் சில்லறை வியாபார ஸ்தாபன உரிமையாளர்களும், இவ்விஷயத்தில் ஒத்துழைக்கும்படி மிகவும் தாழ்மையாகவும் பணிவுடனும் வேண்டிக் கொள்கிறோம்.

*- தமிழ் உணர்வாளன்*

# அலைக்காற்றுக் கழகத்தின் நாடக விழா!





லண்டன் தமிழர் நல வாழ்வு நிறுவனத்தின் வடக்கு கிழக்கு அவசர மருத்துவ நிதிக்காக தமிழ் அலைக்காற்று கலைக்கழகம் வழங்கும் நாடகவிழா 2006 எதிர்வரும் நவம்பர் மாதம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.30க்கு Ruislip வின்ஸ்ரன் சேர்ச்சில் மண்டபத்தில் நடைபெற உள்ளது. தமிழ் நாடக உலகில் தமக்கென ஒரு தனியிடத்தை தக்கவைத்து கடந்த 28 வருடங்களாக தொடர்ச்சியான நாடக மேடையேற்றங்களை தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் நடாத்தி வந்த தமிழ் அலைக்காற்று கலைக் கழகத்தின் மூன்று நாடகங்களும் லண்டன் தமிழ் நாடகப் பள்ளியின் ஒரு நாடகமும் அன்றய தினம் மேடையேற உள்ளன.

இலங்கையில் படமாக்கப்பட்ட குறுந்திரைப்படம் ஒன்றும் அங்கு காண்பிக்கப்பட உள்ளது. லண்டன் அலைக்காற்று கலைக்கழகத்தால் கடந்த மூன்று ஆண்டுகளாக நடாத்தி வரும் தமிழ் நாடகப் பள்ளியில் இருந்து பல இளம் தமிழ் மாணவர்கள் சிறந்த கலைஞர்களாக உருப் பெற்று வருவதுடன் அவர்களின் கடந்த கால மேடையேற்றங்கள் லண்டனில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன.

## இன்றைய தத்துவம்

என்னதான் பெரிய வீரனா இருந்தாலும்
வெயில் அடிச்சா திருப்பி அடிக்க முடியாது.

கங்கை ஆத்துல மீன் பிடிக்கலாம்
காவிரி ஆத்துல மீன் பிடிக்கலாம்
ஆனா அய்யர் ஆத்துல மீன் பிடிக்க முடியுமா?

என்னதான் நாய் நன்றி உள்ளதா இருந்தாலும்
அதாலே தாங்கியூ சொல்ல முடியாது

பல்லு வலின்னா பல்லைப் புடுங்கலாம்.
ஆனா கண் வலின்னா
கண்ணைப் புடுங்க முடியுமா?

**TRICO** - *The name you can trust*

**Door to Door Service**
Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
***Australia, Canada, Chennai, Bangalore, Cochin and Calcutta***

*Two more collection points:*
***Glasgow and South West London***
Regular weekly savings means the fastest delivery to Sri Lanka.

உங்கள் வசதிக்காக **Tooting** இல்
***Collecting point!***

*Contact* **Vimal**
Tel: **020 8672 5551**
Fax: **020 8889 5445**
Email: tricont@btclick.com

**A - Lanka**
*171 Tooting High Street, London SW17*

**HOT NEWS** இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

***Trico International Shipping Ltd.***
Unit 4,
Bittern Place,
Coburg Road,
Wood Green, London N22 6TP

## குறொலியில் தமிழ் கல்விக் கூடம் ஆரம்பம்













லண்டன் குறொலி நகரத்தில் தமிழ் கல்விக்கூட அங்குரார்ப்பண விழா நடைபெற்றது.

சனிக்கிழமை (14.10.06) மாலை 6.30 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமானது.

ஆசிரியர்களுக்கான கௌரவிப்பும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மண்டபம் நிறைந்த மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

## ஹரோவில் மூத்தோர் ஒன்று கூடும் நிலையம்



ஹரோ தெற்கு பகுதியில் அமைந்துள்ள ரொக்ஷத் (Roxeth) விளையாட்டு மைதான பார்வையாளர் மண்டபத்தில் மூத்த தமிழ் மக்கள் ஒன்றுகூடுவதற்கான வாய்ப்பை ஹரோ தமிழ்ச் சங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்நிலையத்துக்கான ஆரம்பநிகழ்வு கடந்த 9ம் திகதி திங்கட்கிழமை மேற்படி மண்டபத்தில் நடைபெற்றது. காலை 11மணிக்கு ஆரம்பமான இவ்விழாவில் ஹரோ உள்ளூராட்சி சபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. நவீன் ஷா பிரதம விருந்தினராக கலந்து கொணடார். உள்ளூராட்சி சபை உறுப்பினர்களான திரு. தயா இடைக்காடர், திரு. ராஜ் ரே, Weldon Park பாடசாலை அதிபர் திரு. ஸ்மைல் கோட்டியர், தமிழ் தொலைகாட்சி இணைய அதிகாரி திரு. சொ.கருணைலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

ஹரோ தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. சிறி இராமநாதனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, திருமதி. குணா வேலுப்பிள்ளை, சங்கத்தின் குறிக்கோள்களை எடுத்துக் கூறினார். மூத்த பிரஜைகளின் தேவைகளை அறிந்து மேலதிகாரிகள் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட அவர், முதுமைப் பருவத்தில் தனிமையைத் தவிர்க்கவும், மற்றவர்களுடன் கூடிப் பேசி, மகிழ்ந்து விளையாடவும், யோகாசனம் மற்றும் சமய கலாச்சார நிகழ்வுகளில் ஈடுபடவும் வாய்ப்புக்கள் செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப் போவதாக உறுதி கூறினார்.

திரு. தயா இடைக்காடர் தனது தாயாரையும் இச்சங்கத்தில் உறுப்பினராக சேர்த்துக் கொண்டதுடன் தனது தேர்தல் வாக்குறுதி ஒன்று நிறைவேற்றப்படுவதில் தான் மகிழ்வடைவதாகவும் குறிப்பிட்டார். திருமதி கமலா சண்முகநாதனின் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.

## மகாஜனா மாலை 2006

ஒக்ரோபர் 7, சனிக்கிழமை மாலை 5.30 க்கு சற்றன், சீகொம்ப் அரங்கில் (Sutton Secombe Theatre) பிரித்தானியா பழையமாணவர் சங்கத்தால் மகாஜனா மாலை 2006 செவ்வனே நிகழ்த்தப்பட்டது.

மிகச் சரியாக 5.30 மணிக்கு தவில் நாதசுரக் கச்சேரி ஆரம்பமானது ஈழத்திலிருந்து வருகை தந்திருந்த மகாஜனன்களான அளவெட்டி கேதீஸ்வரன், சங்கர் தட்சிணாமூர்த்தி (தவில்மேதை தட்சிணாமூர்த்தியின் மைந்தன்) ஆகியோரின் தவில் நாதசுரக் கச்சேரி, மிகச் சிறப்பாக இடம்பெற்றது. அதன் போது அரங்கின் பாதியளவு நிறைந்த சனம் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் நிறைந்து வழியத் தொடங்கியது. மகாஜனன்கள் பெற்றோர்களாக இருக்க அவர்களின் பிள்ளைகளின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

நான்கு நாடகங்கள் இவ்வரங்கில் மேடையேறியமை குறிப்பிடத்தக்கது. மகாஜனன்கள் மா.தியாகேஸ்வரனின் 'சோக்கிரட்டீஸ்' முதலில் அரங்கை மகிழ்ச்சிக்குட்படுத்தியது. அதன் பிறகு, க.பாலேந்திரா நெறியாள்கையில் மகாஜனன்களின் நடிப்பில் உருவான 'சர்ச்சை' நாடகம் மேடையேறியது. அதன் பின்னர் மகாஜனன் மாவை நித்தியானந்தன் எழுதிய 'ஐயா பென்சன் கேட்கிறார்' நாடகத்தை மகாஜனன் அ.இரவி நெறியாள்கை செய்ய மகாஜனன்கள் நடித்திருந்தனர். அரங்கத்தினரின் மகிழ்ச்சியை அள்ளிக் கொண்டு போனது இந்நாடகம். அதையடுத்து க.பாலேந்திரா நெறியாள்கையில் மகாஜனன்கள் பங்கேற்ற 'பிரத்தியேகக் காட்சி' நாடகம் இடம்பெற்றது. இறுதி நிகழ்வாக, மகாகவி, சேரன் போன்ற மகாஜனன்களின் பாடல்களை மகாஜனன் மா.சத்தியமூர்த்தியும் பாட கான சாகரம் நிகழ்ச்சி இடம்பெற்றது. அறுசுவை உணவு உண்ட திருப்தியை மகாஜனா மாலை 2006 தந்ததாக விழாவிற்கு வந்தோர் பேசிக் கொண்டனர்.

## நம் காற்று

நம் காற்று என்பது யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் ஐக்கிய இராச்சிய ஒன்றியத்தின் கூட்டு முயற்சியில் உருவான ஓர் கன்னி கலை கலாச்சார நிகழ்வு.

இந்நிகழ்வின் முக்கிய குறிக்கோள் எம் பாடசாலைக்கும், எம் தாய்நாட்டில் பாதிக்கப்பட்டோருக்கும் உதவும் நோக்காக உருவாக்கப்பட்டது.

கடந்து சென்ற காலங்களில் எமது ஒன்றியம் பலதரப்பட்ட நிகழ்வுகளை உருவாக்கி செயற்படுத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளது.

அவையாவன 1. Cricket 20 x Twenty 2. நம் காற்று (கலாச்சார நிகழ்வு) 3. Jolly Star Night

இவ்பலதரப்பட்ட நிகழ்வுகளினால் எம் மக்களுக்காக ஆற்றியுள்ள பணிகள்

* போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு கல்வி பயிலும் வசதி
* சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட சிறார் காப்பகம்
* மருத்துவ வசதிகள் (மருந்துப் பொருட்கள்)
* 200,000 Kg மேற்பட்ட உடைகள், மருத்துவ உபகரணங்கள்

ஒன்றியத்தின் கன்னி முயற்சியான நம் காற்று கலை நிகழ்வு 15.10.06 அன்று Winston Churchill இல் மாலை 5 மணிக்கு இனிதே அரங்கேறியது. இக்கலை நிகழ்வில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்.

* TTN இன் படலைக்கு படலை
* புல்லாங்குழல் கச்சேரி
* வாத்திய இசை மஞ்சரி
* பரதநாட்டியம்
* இசைக் கச்சேரி
* நடன நிகழ்வு

நம் காற்றின் சிறப்பு விருந்தினராக திரு.செல்வரட்ணம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இனி வரும் காலங்களில் எமது நம் காற்று படலைக்கு படலையுடன் இணைந்து உங்கள் படலையில் வீசும்.

Nathan & Co

Properties
Crime
Immigration
&
Matrimonial

with best compliments

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

Tel: 020 8542 1805

106 Kingston Road
Wimbeldon,
London SW19 1LX

# Writing is on the wall and it is in red

D.Sivaram

An outsider in the Sinhala south would get the impression that the JVP is the only organisation politically active in this part of the world.

Eye-catching JVP posters announcing their public meetings and political tutorials and banners denouncing the western imperialism of Bush and Blair can be seen in all the main towns and villages of the south. One often finds a crowd at the JVP offices in the small towns listening to heated debates about Marxism etc.

It is not uncommon these days for one to come across educated young men in the main Muslim towns of the Amparai district who seem quite impressed by the JVP's alacrity in helping the poor people. Some of them are not just impressed but are beginning to learn the JVP's political philosophy.

Yet, the seriousness of the situation did not dawn on me until I ran into a young Muslim acquaintance recently at a 'soup shop' in Akkaraipattu. He, already a secret convert to the JVP's cause, told me that many young men like him are disgusted by the crass opportunism of Muslim politicians who use Islam to feather their own nests and care not for the poor.

The tsunami, no doubt did create a political vacuum among the Muslims in the east. The JVP shrewdly filled this void. And no mainstream political party could match the JVP's organizational skills in these parts of the country.

People cannot live by ethnic politics alone. There are many pressing social and economic issues which the average money making politician is not intellectually or ideologically equipped to handle.

A Muslim farmer is more worried about getting a good price for his rice than splitting hairs over Wahabi fundamentalism or Sufi mysticism.

The JVP's message of social emancipation strikes a chord with the poor and marginalized classes. The party gets things done. It is not corrupt. There is no nepotism in the ranks. JVP MPs are not moneyed thugs. Its leaders are ordinary men and women. They can easily relate to the sentiments of the man or woman in the street.

The number of people who think the JVP is the right political choice is growing steadily.

Wishful thinkers and armchair pundits in Colombo and the West can say a thousand things to support their belief that the JVP is losing support. I certainly see it growing silently in the east, in the plantations and in many areas of the south.

> People cannot live by ethnic politics alone. There are many pressing social and economic issues which the average money making politician is not intellectually or ideologically equipped to handle.

I see many Tamil youth in the Central Province today who think they should throw in their lot with the JVP to save the plantation community from the clutches of its incorrigibly crooked political and trade union leadership.

How is it possible that the JVP that is opposed tooth and nail to devolving any power to the Tamils and the Muslims could make this bold attempt in spreading its influence among them? Why is it getting a response after all?

It is a fact that the JVP is determined to prevent President Rajapakse from striking any sort of peace deal with the Tigers. For they know that if he does, he will be able to retrieve his party from the crisis in which it has been sinking since the formation of the UPFA. We all know that they want to cleave the SLFP and the UNP until they are totally and irredeemably engulfed in a terminal decay. Thus the JVP stands to gain by blocking any move by Rajapakse to talk peace with the Tigers.

The point here is that the JVP's staunch opposition to federalism is not merely tactical - the spanner they keep throwing in the works. It is deeply rooted in their political philosophy. It springs from Rohana Wijeweera's rigidly Marxist Leninist interpretation of Sri Lanka's history and society, enunciated in a long report to the JVP central committee on April 15 1986.

Wijeweera says that the national question should be resolved to stop Sri Lanka from becoming "a slave camp of American Imperialism".

"The imperialist camp, led by American imperialism, has managed to increasingly reinforce its base in Sri Lanka using the crisis spawned by the national question. They have managed to greatly tighten their grasp economically, politically and militarily".

Also, the JVP says that all nationalities in Sri Lanka are equal. The JVP recognizes that there are Sinhala, Tamil and Muslim nationalities in Sri Lanka and that no nationality should be privileged over the other. This message sinks into the minds of the Tamil and the Muslim youth who are disgruntled by the social deprivation to which they have been subjected for many long years, with no light at the end of the social tunnel.

This is what makes it attractive to the JVP's potential recruits among the Muslims and the Tamils in the plantations. Their social deprivation makes them eager to change the system. They think the system is exploitative because it has been made servile to US imperialism. Increasingly, as these youth gain greater insight into the teachings of Marx, Lenin and Wijeweera, they come to believe that only US imperialism stands to profit from the ethnic conflict - that American capital is promoting the conflict to perpetuate the system of neo-colonial exploitation here.

This is not hearsay that one gathers from conversations with disgruntled youth in Muslim soup shops in the east and in the watering holes of the Sinhala south or in cafes in Tamil towns in the hills. This is the reality today.

*The writing is on the wall, and it is in red.*

INTERVIEW

# The talks will have no meaning – Eelaventhan

*Our staff reporters met TNA parliamentarian Mr.M.K.Elaventhan, who is on a visit to England, at "Oru Paper" office on Tuesday 17th October.*

**The Sri Lankan Supreme Court's decision on the de-merger of North-East shocked some political observers and the Tamils in general. We would like to know your reaction on this judgement.**

The decision of the Supreme court has not at all shocked me, for the simple reason, that the independent judiciary that we learnt in our text books, has lost its meaning. You often say that there is a need to re-learn and unlearn many things that we learnt when we were young.

As a parliamentarian of the TNA we were made aware that the move of the JVP and Hela Urumaia to de-merger North & East would be backed by the Sri Lanka govt., for the simple reason that they wouldn't act against Sinhala fanaticism. But we the Tamils condemn in the strongest language the decision of the supreme court to de-merge the North and East provinces.

**Like the PTOMS, now the 19 year-long merger of Tamil provinces is going to be discontinued. It clearly indicates that the unitary constitution of Sri Lanka cannot safeguard the legitimate rights of the Tamils. In this context where the current peace talks are going to lead us?**

The Indo-Ceylon agreement was reached 19 years ago, on July 29th, 1987. Now it is being dishonoured. For the Tamils to expect justice or fair-play in a unitary constitution is the worst form of self deception. In a "multi-ethnic and a multi-lingual plural society" a unitary constitution cannot succeed. The Sri Lankans are aiming at cultural genocide, physical liquidation, and economic strangulation. Why is the world bodies to observing studied silence when we are facing genocide. A UN charter justifies 3rd part intervention when there is clear evidence of genocide. We are appealing the world bodies to break their silence and come to the rescue of the Eelam Tamils, before we are totally finished from the face of the earth with the clear vision that the peace talks will not serve any purpose, though we may go through the exercise.

**How are the international community and India going to react?**


As I said earlier the IC can not be mere observers when there is open violations of Human Rights by the govt. of Sri Lanka, when people are starving to death, even when INGO's not allowed to function and even brutally killed, how could the world remain silent?

The Indo-Ceylon agreement was reached with the clear and accepted understanding, recognising that the Northern and Eastern provinces as areas of historical habitation of Tamil speaking people, who have all the times hitherto lived together in this territory lived together with other ethnic groups. Here, there is a clear indication of tiny little island of Sri Lanka pooh-poohing the Indian government by discarding the agreement. Should the mighty India allow the tiny island to dictate terms to her? We are confident that India will make amends and rise to the occasion, save the Tamils and preserve her self-honour.

**There are people among us, the Tamils, who still feel that a federal solution would be the ideal solution for the conflict in Sri Lanka. No doubt that yesterday's judgement was a serious blow for this belief. Don't you think that this is the time we all mass around and demand independent Tamil Eelam?**

It is true that there are still people who believe in federal system to solve the problem. The late great leader, S.J.V. Chelvanayagam, in his last will to the Tamils, pronounced in parliament on Nov. 1996, "We started the federal movement at one time to obtain the lost rights of the Tamil-speaking people and now we have found that through federalism we cannot achieve our objective and we have come to the conclusion that we must separate. Our party is today moving with the idea of establishing a separate state". Hence it is high time we started making endeavour to get an independent state for the Tamil-speaking people.


Tamsons
Accountancy & Tax Consultancy Ltd.




* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent. BR2 9QR
Tel: 020 8313 0800

EXCERPTS FROM THE REDIFF INTERVIEW

# 'India will have to recognize LTTE'

*Managing Editor of Rediff **Sheela Bhatt** interviewd N. Vithyathara, editor of Uthayan in Colombo recently. We reproduce the excerpts of the interview for the benefit of our readers..*

**What triggered the current phase of violence?**

In the last election of November 2005, the Tamils by not participating allowed the Sinhalese to choose their leader to solve our problem. The Sinhalese have chosen a man who has the Sinhalese chauvinist hardline. He is not handling the peace process in a proper manner.

**What were your expectations from President Rajpakse?**

He should have adhered to the ceasefire agreement and should have started political negations with the LTTE directly.

**But he has repeatedly asserted his willingness to talk directly with the LTTE...**

But on the ground he is not moving at all.

**He has invited Prabhakaran to Colombo. What else can you ask for?**

That's the point! We said if he is ready, then the president should go to meet him. When I met President Rajpakse I asked him if you are ready to meet Prabhakaran. He said, "yes." But he says he is not ready to go to Vavuniya.

**Does he feel a security threat?**

Yeah, he says he can't go now. The real issue is that his agenda is planned by the military leadership. They want to put the LTTE in a tight corner and they want to go to war. That is the Sinhalese chauvinist line.

He has to satisfy his vote bank that elected him. He is led by hawkish forces like the Janatha Vimukthi Peramuna and the Jathika Hela Urumaya. He had a chance of bringing peace but President Rajpakse has missed the bus.

Read Prabhakaran's Martyrs Day's speech given after the president's election. The LTTE chief was ready to do something. I know it because my managing editor E Saravanpavan and I were the go-between between them.

**How does the Tamil community view President Rajpakse?**

He does not have far-sighted aims. He thinks he can control the LTTE with military power. He does not understand the reality at all. That's his problem. The LTTE is not at all like it was in 2000. The LTTE has shown that they have acquired more power than before.

**When did you meet Prabhakaran the last time?**

Recently, when we took President Rajpakse's message to him.

**What is going on in his mind?**

He is committed to his cause. He wants a separate land for Tamils. He is not ready to settle for less than that.

**When you met Prabhakaran to convey President Rajpakse's proposal, what was his response?**

Prabhakaran said if the Sri Lankan government has the guts to throw Norway out and talk to him directly, then it should do so openly and not clandestinely. If the government thinks we can talk only through Norway, then we have a chance to talk about peace if the government fulfils certain things. Like stopping the paramilitary actions and the militarisation of Tamil areas.

**Don't you think Prabakaran, who lives in the jungles, is unaware of the changed world realities?**

Every day hundreds of people meet him, particularly expatriate Tamils. He has contacts with hundreds of people.

**Prabakaran must have realised that he can't win the hearts of Indians when the Indians themselves are victims of terrorism. India is in no position to support his violent methods. Does he understand this clearly?**

I will give a different answer. My assessment is that the problem in Sri Lanka is between the Tamils of Sri Lanka and the Sinhalese of Sri Lanka. India should know that if there is a settlement it should be with both parties. So the so-called agreement of Sri Lanka's Tamil problem should have been signed by ( *in July 1987*) Sinhalese representative President J R Jayewardene and a representative of the Tamils.

Rajiv Gandhi signed on behalf of us! He thought he is an eligible, elected representative of the Tamils. If it is true that the LTTE killed Rajiv Gandhi, they have killed our representative, not your prime minister.

How come Rajiv thought of signing on behalf of the Tamils? We were fighting, we were dying every day. What right did he have to sign on our behalf? How can he put a solution in our hands? So he had to bear the consequences.

He may be your leader but he signed the Sri Lanka accord as the Sri Lankan Tamils' representative. You have to look at it that way.

**Don't you think the world has changed, and that the LTTE is now condemned more than ever before?**

We have our target and we are moving. We can't dance to other's tunes. The world is changing but the world is not giving us anything. Ours is a fight for freedom. Prabhakaran has vast knowledge of globalisation. He is moving ahead to achieve his targets. Please compare his work in the 1980s and 1990s. Two-thirds of the Tamil area is under his control, he has a separate judiciary, he has a separate army and police.

**Isn't he losing his case on the world stage?**

General Musharraf came to power after an army coup. After sometime India recognised him. Like that, in the future, India will have to recognise us, that is the confidence we have.


**India has clearly stated that it believes in the sovereignty of Sri Lanka and is not in favour of any division. Don't you take this seriously?**

One day India will accept a reality that Tamils have a separate entity and they should have special rights.

AN APPRECIATION

**Demise of a Great Scholar and a Veteran Tamil writer:**

## ALOSIOUS JEYARAJ CANAGARATNA



It is with immense sadness we record the death of A J Canagaratna popularly known as AJ, the distinguished Tamil veteran writer, scholar and translator who had done much to bring world literature to a whole range of people and groups in Sri Lanka, including university students, social workers, political activists and militant movements. He died on 10 October 2006 at the age of 72 as a bachelor in Colombo several days after he was taken to hospital following illness. He had a distinguished career as a journalist. He took pleasure in all things around him. The TIC came to know AJ closely when he was an editorial staff of the Saturday Review, which was supported by the TIC. He was an extremely simple, quiet and unassuming person, but an outspoken critic. No story of the Saturday Review would be complete without the touch of A J Canagaratna, the self effacing man who provided continuity between the two editors – S Sivanayagam and Gamini Navaratna.


AJ was one of the kindest and gentlest persons we have known. In a life dedicated to helping others, AJ not only touched the lives of thousands of people but also had a profound effect on all who knew him, whether they knew him well or just briefly.

Sri Lanka and we who knew him will miss AJ.

*- Tamil Information Centre*

AN APPRECIATION

## Dr. V. Kunanandam



As if the sufferings of the Tamils in Sri Lanka were not enough, fate dealt them a big blow in August, in the form of the loss of Dr.Kunanandam. Those of us who escaped to be abroad have lost almost the only one of us who had the guts and commitment to give up the cushy and safe life in the west, to return to Jaffna to serve our kith and kin.

Kunanandam was unique in DOING things rather than getting a name for it. He was quietly efficient and did not bother to seek recognition. That was the way he was at Hartley too where he studied from 1955 to 1964. We all knew Kunanandam as a helpful and kind senior who showed an interest in research, and wanted to emulate him. When I last met him, in Jaffna in 2003, I could see he had dedicated his life to providing better medical care for the Tamil population and better medical education to the ever-suffering Jaffna medical undergraduates and postgraduates.

Kunanandam was Visiting Professor of Surgery and Honorary Consultant Surgeon at the Jaffna General (Teaching) Hospital from 1997 and held the Faculty of Medicine together. He was responsible for obtaining the CT scanners for the hospital and continued his research even in those difficult circumstances.

Kunanandam in his final year was responsible for setting up the Eastern University in Batticaloa, the new Faculty for Medical/Health Sciences and was in fact Acting Dean of that Faculty. He was made a member of the University Grants Commission in March 2006, but a sudden illness struck him soon thereafter, and he passed away peacefully on 6th August 2006 in Southampton, UK.

He leaves his wife, Selvarani, a daughter Thushitha, and a son, Suren.

*- V Vasanthakumar*
*(www.hartlycollege.org)*

Customs Clearance
For any Country including Sri Lanka, India, China, Thailand, America

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

SCANWELL FREIGHT SERVICES LTD
Air Freight Clearance / Sea Freight Clearance

மரக்கறி வகைகள் மீன் வகைகள் பழங்கள் உடுப்புகள் மற்றும்
எல்லா விதப்பொருட்களும் இறக்குமதி செய்பவர்களுக்கு Clearance
செய்கின்றோம்




Unit 3 Airlink Industrial Estate
Spitfireway (Off Southall Lane)
Heston, Middlesex TW5 9NR

Contact: VAITHI (வைத்தி)
Tel: 020 8569 1000 / Mob: 07956 337 520
Fax: 020 8561 1800 / Email: info@scanwell.co.uk

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02.09.1931

மறைவு
04.10.2005

## திருமதி ஆத்தைப்பிள்ளை சோமசுந்தரம்

மறக்க முடியவில்லை உன் மலர் முகத்தை
கேட்க முடியவில்லை உன் கொஞ்சு மொழியை
நம்ப முடியவில்லை உன் திடீர் மறைவை
நினைக்க முடியவில்லை உன் நிரந்தர இழப்பை
நிறுத்த முடியவில்லை கசிந்தொழுகும் கண்ணீரை
அழிக்க முடியவில்லை உன்னோடு வாழ்ந்த நினைவுகளை

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள், பேரன், பேத்திகள்
மற்றும் உற்றார் உறவினர்.

தகவல்:
சிவசுப்பிரமணியம் சோமசுந்தரம்
Eastham 020 8471 3629


## இலவச பரதநாட்டிய சங்கீத வகுப்புகள்

**சனிக்கிழமைகளில் 1.30pm-4.30pm**

புதிதாகச் சேரும் மாணவர்களுக்கு, குறொய்டன் சிவகுமாரன் தமிழ் பாடசாலையில் நடன, சங்கீத வகுப்புகள் இலவசமாக கற்பிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட அளவு இடங்களே இருப்பதால் முன் கூட்டியே பதிவு செய்து கொள்வது நல்லது. சனிக்கிழமைகளில் காலை 10 மணி முதல் நேரிலும் வரலாம். email அல்லது தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்ளலாம்.

Key Stage 1, 2, 11+, Key Stage 3, மற்றும் GCSE (O/L & A/L) வகுப்புகளும் (Maths, English & Science) காலை 10 மணி முதல் 12 வரை சனி நாட்களில் நடைபெறுகின்றன.

11+ வகுப்புகள் வெள்ளிக்கிழமைகளிலும் 5.30 pm - 7.30 pm நடைபெறுகிறது.

**சிவகுமாரன் தமிழ்பாடசாலை**

**Selhurst Boys School**

The Cresent (Off White Horse Rod), Croydon CR0 2HN

**07958 408 280** / info@tamiled.co.uk

Bus No: 50 & 468

Tamil Educational and Cultural Association


TECA

local network fund for children and young people



## அதிநவீன வசதிகளுடன் சொகுசு தொடர் மாடிக்கட்டடம் விற்பனைக்கு

## *Luxury Apartments in Wellewatte, Colombo*



*Sri Lanka Office*
*Provisix International (Pvt) Ltd*
*No. 6, I.B.C. Road*
*Colombo 06, Sri Lanka*
*Tel : ++ 94 714528484*
*e-mail : m.somasundaram@provisix.com*

*Canada Contact*
*Tel : ++ 1 514 8928804 (After 4pm & weekend)*

*Australia Contact*
*Tel : ++ 61 2 98963521*
*++ 61 4 22471129*

*Provisix Limited - United Kingdom*
*458, Alexandra Avenue*
*Harrow, Middlesex, HA2 9TL*
*United Kingdom*
*Tel : ++ 44 2088683646*
*Fax : ++ 44 2088683666*
*Mobile : ++ 44 7715323010*
*++44 7774455156*
*e-mail : provisix@provisix.com*

- *3 Bedrooms & 2 Bathrooms*
- *2 Bedrooms & 2 Bathrooms*
- *1 Bedroom & 1 Bathroom*
- *Imported high quality fittings & glazed tiles for Bathrooms*
- *Hot water geyser*
- *Ground floor reserved car park*
- *Roof top garden*
- *A/C provision in all rooms*
- *Rust proof powder coated window*
- *Elevator to all floors*
- *Stand by generator*
- *Modern fire protection system*
- *Garbage shoot in every floor*
- *Intercom security system*
- *Mahogany cabinets Pantry with granite work top*
- *Provision for washing machine connection*
- *Telephone and television outlets*
- *Fully secured 8 feet parapet wall right around*

TO BAMBALAPITIYA
Commercial Bank
Supper Market
Moor Rd
Super Market
Delmon Hospital
Arethusa Lane
Hotel Sapphire
St. Lawrence Church
I.B.C Rd
N.D.B Bank
36th Lane
GALLE ROAD (WELLAWATTA)
TO DEHIWELA

இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



*3 Bedrooms from 84 laks*
*2 Bedrooms from 73 laks*
*1 Bedroom from 43 laks*

***Only selected units Available***

*For call back:*
*please e-mail us*

# திருப்பிக் கொடுக்கப்படும் அவலம்!

**வி. சபேசன்**
*( ஒரு பேப்பருக்காக )*

மாவிலாறு, சம்பூர் போன்ற பகுதிகளை விட்டு விடுதலைப் புலிகள் தந்திரோபாயமாக பின்னகர்ந்ததை வைத்து, விடுதலைப்புலிகள் பலவீனமாகி விட்டார்கள் என்று பரப்புரை மேற்கொண்டு வந்தவர்களின் தலையில் ஓங்கிக் குட்டுவது போன்று கடந்த இருவார நிகழ்வுகள் நடந்தன.

07.10.06 அன்று சிறிலங்கா இராணுவம் வாகரையை நோக்கி மும்முனைகளில் இருந்து ஒரு வலிந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. முப்படையினரும் ஈடுபட்ட இந்த இராணுவ நடவடிக்கையில் கருணா குழுவும் ஈடுபடுத்தப்பட்டது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பனிச்சங்கேணி வரை முன்னேறிய சிறிலங்கா இராணுவம் கடைசியில் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்தாக்குதலைச் சமாளிக்க முடியாது பெரும் இழப்புக்களோடு பழைய இடங்களுக்கு பின் வாங்கி ஓடியது.

இச் சண்டையில் 50 இற்கும் மேற்பட்ட சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டனர். குறைந்தது 15 கருணா குழுவினரும் கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளால் 10 சிறிலங்கா இராணுவத்தினரின் உடல்களும் 5 கருணா குழுவினரின் உடல்களும் கைப்பற்றப்பட்டன. அத்துடன் ஒரு படையினன் உயிருடன் சிறை பிடிக்கப்பட்டான்.

இச் சண்டையின் போது விடுதலைப் புலிகளால் பெரும் தொகையான ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டு வாகரையில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

கிழக்கில் அடிவாங்கிய சிறிலங்கா இராணுவம் நான்கு நாட்கள் கழித்து வடக்கில் முகமாலை, கிளாலி பகுதியில் பெரும் படை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தது. 11.10.06 அன்று அதிகாலை 6 மணியளவில் கிளாலி, முகமாலை, நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் இருந்து இந்த பாரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. செறிவான ஆட்லறி, பல்குழல் பீரங்கி எறிகணை வீச்சுக்களோடு டாங்கிகள், கனரக ஆயுதங்கள் சகிதம் சிறிலங்கா இராணுவத்தின் முப்படைகளும் இச் சண்டையில் ஈடுபடுத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளால் நாகர்கோவிலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட முன்னேற்ற முயற்சி உடனடியாக முறியடிக்கப்பட்டது. முகமாலை, கிளாலி முன்னரங்க நிலைகளின் ஊடாக முன்னேறிய படையினரை விடுதலைப்புலிகள் சிறிது தூரம் முன்னேற அனுமதித்தனர். குறிப்பிட்ட தூரம் வந்ததும் முன்னேறிய படையினரை சுற்றி வளைத்து கடும் தாக்குதலை தொடுத்தனர். விடுதலைப் புலிகளின் சுற்றி வளைப்புக்குள் சிக்குப்பட்ட சிறிலங்கா படையினர் பேரழிவை சந்தித்தனர். 200இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். 300இற்கும் மேற்பட்ட படையினர் காயம் அடைந்தனர். இப்படி பேரழிவை சந்தித்த சிறிலங்காப் படையினர் இறந்த படையினரின் பல உடல்களையும் விட்டுவிட்டு மீண்டும் பழைய நிலைகளுக்கே பின்வாங்கினர். சமர் களத்தில் கிடந்த சிறிலங்கா படையினரின் 75 உடல்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றியதோடு, காயம் அடைந்திருந்த ஒரு படையினனும் கைது செய்யப்பட்டான். இரு நாட்கள் கழித்து மேலும் 40இற்கும் மேற்பட்ட படையினரின் உருக்குலைந்த சடலங்கள் மீட்கப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இதை விட மேலும் சில சடலங்கள் கண்ணிவெடி வயல்களுக்குள் சிக்கி மீட்க முடியாதபடி இருக்கின்றன. இச் சண்டையிலும் பெரும் தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

**ஒரு முழுமையான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் சிறிலங்காவின் படையணிகள் அனைத்து விதமான தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்**

முகமாலை, கிளாலி சமர் சிறிலங்காப் படைகளுக்கு இன்னும் ஒரு தீச்சுவாலையாக அமைந்தது. இச் சமரில் சிறிலங்காவின் இராணுவத்தின் புகழ் பெற்ற அணியாகிய 'கெமுனு வாச்' சின்னாபின்னம் ஆகியது. முகமாலை, கிளாலியில் விடுதலைப்புலிகள் கொடுத்த பதிலடியானது இன்னும் சில மாதங்களுக்கு சிறிலங்கா இராணுவத்தை இது போன்ற ஒரு நடவடிக்கையை நடத்த முடியாத அளவிற்கு முடக்கிப் போட்டுள்ளது.

இப்படி தமிழீழத்தின் கிழக்கிலும், வடக்கிலும் சிறிலங்கா இராணுவம் பெரும் தோல்விகளை சந்தித்து சில நாட்களில் தமிழீழத்திற்கு வெளியிலும் சிறிலங்கா படைகள் அழிவுகளை சந்தித்தன.

16.10.06 அன்று பிற்பகல் 1.45 மணியளவில் மாத்தளை மாவட்டத்தில் உள்ள திகம்பத்தனை என்ற இடத்தில் வைத்து சிறிலங்கா கடற்படை தொடரணி மீது பாரிய குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 100இற்கும் மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர். 340 கடற்படையிருடன் கூடிய 24 பேருந்துகளில் 13 பேருந்துகள் இத் தாக்குதலில் சிக்கி சிதறின. சிறிலங்காவின் பாதுகாப்பு தரப்பு 99 கடற்படையினர் பலியாகி உள்ளதாகவும் 120இற்கு மேற்பட்டோர் காயமடைந்து உள்ளதாகவும் தெரிவித்துள்ளது. கடற்படையினர் அனுமதிக்கப்பட்ட மருத்துவமனைகளில் இருந்து வெளிவருகின்ற செய்திகளின் படி 150 கடற்படையினர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இது ஒரு தற்கொலைத் தாக்குதல் என்றும், இதை விடுதலைப்புலிகளே நடத்தி இருக்க வேண்டும் என்றும் சிறிலங்கா பாதுகாப்பு தரப்பு கூறி உள்ளது.

தாக்குதல் நடந்த திகம்பத்தனை என்ற பகுதி திருகோணமலை இராணுவ தளங்களுக்கு செல்லுகின்ற படையணிகளும், அங்கிருந்து வருகின்ற படையணிகளும் தரித்து நின்று இளைப்பாறி செல்லுகின்ற இடமாக உள்ளது. சம்பவம் நடந்த பொழுது திருகோணமலை கடற்படைத் தளத்தில் இருந்து விடுமுறையில் சென்றுகொண்டிருந்த ஒரு கடற்படைத் தொடரணியோடு திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு சென்றுகொண்டிருந்த கடற்படையினரின் ஒரு தொடரணியும் அங்கு நின்றுள்ளன. அப்பொழுதே குண்டுகள் நிரப்பப்பட்ட ஒரு பாரவூர்தி இக் கடற்படைத் தொடரணிகள் மீது மோதியதாக தெரியவருகிறது.

இத் தாக்குதல் தமிழீழத்திற்கு அப்பால் பொலநறுவை மாவட்டத்தையும் தாண்டி மாத்தளை மாவட்டத்தில் நடந்ததானது சிறிலங்கா அரசை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஒரே தடவையில் மிக அதிகமான கடற்படையினர் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும். ஒரு தரைப்படை வீரனை உருவாக்குவதை விட கடற்படை வீரனை உருவாக்குவது என்பது, மிகப் பெரும் செலவுகளைக் கொண்டது. ஒரு கடற்படையில் இணைவதற்கு கல்வித் தகமையும் அதிகமாக இருக்க வேண்டும். அந்த வகையில் சிறிலங்கா அரசுக்கு கடற்படையினர் கொல்லப்படுவது என்பது மிகப் பெரிய இழப்பாகும்.

**முகமாலை, கிளாலியில் விடுதலைப் புலிகள் கொடுத்த பதிலடியானது இன்னும் சில மாதங்களுக்கு சிறிலங்கா இராணுவத்தை இது போன்ற ஒரு நடவடிக்கையை நடத்த முடியாத அளவிற்கு முடக்கிப் போட்டுள்ளது.**

திகம்பத்தனையில் கடற்படையினர் நூற்றுக் கணக்கில் சிதறடிக்கப்பட்ட அன்று கிபிர் விமானம் ஒன்று மர்மமான முறையில் நீர்கொழும்பு வாவியில் விழுந்தது. இதை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியிருக்கக் கூடும் என்ற கருத்து சில ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா வான் படையின் பெரும் நம்பிக்கை நட்சத்திரமான கிபிர் விமானம் இப்படி திடீரென விழுந்தது சிறிலங்கா அரசை திகைக்க வைத்தது.


இப்படி திகம்பத்தனையிலும் நீர்கொழும்பிலும் ஒரே நாளில் அடுத்தடுத்து அதிர்ச்சிகளை சந்தித்த சிறிலங்கா அரசுக்கு 3 நாட்கள் கழித்து வேறொரு அதிர்ச்சி காத்திருந்தது.

19.10.06 அன்று காலை 7 மணியளவில் காலியில் உள்ள 'டக்சினா' கடற்படைத்தளம் மீது படகுகளில் வந்தவர்கள் திடீர் அதிரடித் தாக்குதலை நடத்தினர். கடலில் இருந்தபடி சில படகுகள் தாக்குதல் நடத்திய அதே வேளை, வேறு சில படகுகளில் வந்தவர்கள் தரையிறங்கி கடற்படைத்தளத்திற்குள் உள் நுளைந்து தாக்குதல் நடத்தினர். அத்துடன் இரு படகுகள் கடற்படைத்தளத்தில் இருந்த இரு கடற்கலன்களின் மீது மோதி வெடித்ததாகவும் தெரிய வருகிறது. இரு மணித்தியாலங்கள் இரு தரப்பிற்கும் கடும் மோதல்கள் நிகழ்ந்தன. இம் மோதல்களை அடுத்து காலி பகுதியில் இருந்த சிங்கள மக்கள் அகதிகளாக பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறினர்.

கடற்படைத்தளம் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதலில் ஏற்பட்ட சரியான சேத விபரங்கள் தெரியவரவில்லை. சிறிலங்கா பாதுகாப்பு தரப்பு 2 சுற்றுக்காவல் கலன்கள் கடும் சேதத்திற்கு உள்ளானதாகவும் மற்றொன்று சிறிய சேதம் அடைந்ததாகவும் அறிவித்துள்ளது. 3 கடற்படையினர் வரை கொல்லப்பட்டும் 11 பேர் காயமடைந்தும் உள்ளதாகவும் சிறிலங்காவின் பாதுகாப்பு தரப்பு மேலும் தெரிவித்துள்ளது. ஆயினும் பல கடற்படையினர் கொல்லப்பட்டும், பல கடற்கலன்கள் சேதமாக்கப்பட்டும், மூழ்கடிக்கப்பட்டும் உள்ளன என்று நம்பகரமாக தெரிய வருகிறது. சிறிலங்கா கடற்படையின் 1 எரிவாயுக் கப்பல், 2 டோராக்கள், 2 சுற்றுக்காவல் படகுகள் என்பன முற்று முழுதாக அழிக்கப்பட்டுள்ளதாக செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. கடற்படைத் தளத்தினுள் நுளைந்து தாக்குதல் நடத்தியவர்கள் தாக்குதலை முடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் சில செய்திகள் கூறுகின்றன.

காலி மாவட்டம் சிறிலங்காவிற்கு பெரும் வருவாயை ஈட்டிக் கொடுக்கும் ஒரு சுற்றுலாப் பிரதேசம் என்பதால், சிறிலங்கா அரசு நடந்த சம்பவத்தை குறைத்துக் காட்டவே முற்படுகிறது. மோதல் நடந்த பகுதிக்குள் ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. ஆயினும் கடற்படைத்தளத்தில் இருந்து கிளம்பிய புகை மண்டலம் பல மைல்கள் தூரம் தாண்டியும் நீண்ட நேரம் தெரிந்து கொண்டிருந்தது, சிறிலங்கா கடற்படைக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை பறை சாற்றியது. டக்சினா கடற்படைத்தளம் மீது நடத்தப்பட்டுள்ள இந்த அதிரடித் தாக்குதல் சிறிலங்காவிற்கு ஏற்பட்டுள்ள மற்றொரு 'கட்டுநாயகக' என்று சில ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களில் சிறிலங்காவின் முப்படைகளையும் சேர்ந்த 450இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும், 900 இற்கும் மேற்பட்ட படையினர் காயம் அடைந்தும் உள்ளனர். வாகரையிலும், முகாமாலையிலும் மரபுவழிச் சண்டையில் விடுதலைப் புலிகள் சிறிலங்கா படைகளுக்கு பெரும் அழிவினைக் கொடுத்தனர். திகம்பத்தனையில் குண்டுத் தாக்குதலில் கடற்படையினர் சிதறடிக்கப்பட்டனர். காலியில் கடற்படைத் தளம் மீது அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒரு முழுமையான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் சிறிலங்காவின் படையணிகள் அனைத்து விதமான தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி வரும் என்பது மட்டும் அன்றி, அந்தத் தாக்குதல்கள் தமிழீழத்தில் மட்டும் அல்லாது சிறிலங்காவின் அனைத்து பகுதிகளிலும் நடைபெறும் என்பதையே கடந்த இரு வார நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன.


ஸ்ரீ முருகன் ஜோதிட நிலையம்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம்
திரு துளசி ராமன் சாஸ்திரி

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம், ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார்.

வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சினை தீர, திருமணப் பிரச்சனை தீர, தொழில் முடக்கப், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும்.

இவரை ஒருமுறை சந்தித்துப் பாருங்கள்.
பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து

பேசப்படும் மொழிகள்: தமிழ், மலையாளம்.

Opening Hours: 8am - 8pm (7 days a week)


71 St John's Road
Wembley Middx HA9 7JG
(Opposite Wembley Central Railway Station)
Tel: 020 8795 1089

# தமிழரை பணிய வைக்கும் பயங்கர அழுத்தம்

**உமா மகாலிங்கம்**
*( ஒரு பேப்பருக்காக )*

இலங்கையின் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் கடந்த சில வாரங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தை களின் பலனாக, இரு கட்சிகளுக்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவேறும் சாத்தியக் கூறுகள் அதிகபட்சம் இருப்பதை அங்கிருந்துவரும் செய்திகள் அறியத் தருகின்றன. இலங்கையின் தேசிய அபிவிருத்தியைப் பாதிக்கும் சகல திட்டங்களிலும் எதிர்க் கட்சியாக இயங்கும் ஐ.தே.க. அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்குமென எதிர்பார்க்கப் படுகிறது. இவ்விருகட்சிகளின் உள்நோக்கம் எதுவாக விருப்பினும், தென்னிலங்கை மக்களின் செல்வாக்கை கவர்ந்துவரும் ஜ.வி.பெ, ஜா.ஹெ.உறுமய போன்ற இனவாதக் கட்சிகளை புறந்தள்ளும் ஒரு கூட்டு நடவடிக்கையாகவே இதன் இணக்கத்தை அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எந்தவொரு சிங்களக் கட்சியும், தமிழ் மக்களின் அபிலாசைகளை இதயசுத்தியுடன் அணுகவில்லை என்பதே உண்மை. தமிழ் மக்களுக்கும் சம அந்தஸ்து எனக் கொள்கைப் பிரகடனம் விடுத்த வந்த சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்களே, புதியதோர் அரசியல் யாப்பை உருவாக்கு வதற்கு பொறுப்பாகவிருந்த நேரத்தில், சோல்பரி அரசியல் சாசனத்தின் 29வது சரத்தில், சிறுபான்மை இனத்துக்கு பாதுகாப்பு வழங்கிய சலுகையைக் கூட, புதிய யாப்பில் நீக்கிவிட்ட சாதுர்யத்தை தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

எனவே, சிங்களக் கட்சிகளிடையே காணப்படும் இணக்கம், புரிந்துணர்வு, தமிழ் மக்களை நசுக்க எடுக்கும் மேலும் ஒருபடியாகவே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

> தமிழரின் தார்மீக ஆதரவைப் பெறத் தவறிய காரணத்தினால் சிறியதொரு இலங்கைத் தீவு சீரழிந்து கிடக்கின்றது

மகிந்த சிந்தனை அடிப்படையில், அரசுக்கு ஆதரவு தரும் ஜ.வி.பெ, ஜா.ஹெ.உறுமய போன்ற இனவாதக் கட்சிகள், நோர்வே நாட்டுக்கெதிராக எழுப்பும் கடும் கண்டனம், பேரணிகள் இணைத்தலைமை நாடுகளை அதிருப்தி கொள்ள வைத்திருக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு. ஆகவே, ஜெனிவாவில் ஒழுங்கு செய்யப்படும் பேச்சுவார்த் தைக்கு இலங்கை அரசைப் பணியவைக்க, திரைமறைவில் நடைபெற்ற அரசியல் நகர்வாகக் கூட கருத இடமுண்டு. இணைத் தலைமை நாடுகளின் இத்தீர்மானத்தை தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு நிர்ப்பந்தம், தமிழ் மக்கள் படும் தாங்கொணாத நிலைமைகள் இட்டுச் சென்றுள்ளதை ஆய்வாளர்கள் அறிவார்கள். புலிகளின் இணக்கத்தை எதிர்பாராத இலங்கை அரசாங்கம், பேச்சுவார்த்தையைக் குழப்பக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி வருவது தொடரும் யுத்த நடவடிக்கைகள் மூலம் அறியலாம்.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணக் கூடிய ஈழத்தமிழர் பிரச்சினைகளை விஸ்வரூபமாக்கி, சர்வதேச மட்டத்துக்கு கொண்டு சென்ற சாதனை, மாறி மாறி ஆட்சியிலமர்ந்த சிங்களக் கட்சிகளையே சாரும். இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில், இதய சுத்தியுடனும் பரஸ்பர நம்பிக்கையுடனும், நாணயத்துடனும் அணுகாத தற்குறைவுதான் இன்று தமிழீழம் கேட்கும் நிலைக்கு தமிழ் மக்களை தள்ளிவிட்டது. தமிழரின் தார்மீக ஆதரவைப் பெறத் தவறிய காரணத்தினால் சிறியதொரு இலங்கைத் தீவு சீரழிந்து கிடக்கின்றது. சதுப்பு நிலமாகக் கிடந்த சிங்கப்பூர், அங்கு வாழும் பல்லின மக்களுக்கு சமத்துவம் கொடுத்து மதித்த காரணத்தினால், சகல வளங்களுடன் வாழும் உல்லாசபுரியாக மாறியது நல்லதொரு உதாரணம்.

பொருளாதாரச் சீரழிவு, நாளாந்தம் நடைபெறும் படுகொலைகள், ஆள் கடத்தல்கள், வழிப்பறிகள் நாட்டின் நலிந்துபோன சமூகக் கட்டுப்பாட்டை எடுத்துக்கூறுகின்றன. உலகின் இருபெரும் வல்லரசுகளாக தலைதூக்கிய அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளே, பரஸ்பர இணக்கத்துடன் பேரழிவு தரக்கூடிய ஆயுதங்களை அழித்ததோடு, அதில் செலவிடும் பணவிரயத்தைக் கட்டுப்படுத்திய உதாரணத்தைக் கூட கண்டு கொள்ளாமல் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவக்கூடிய பெருந்தொகைப் பணத்தை, தமிழ் இனத்தை அழிப்பதற்கே செலவிடும் மூர்க்கத்தனம் முடிவிற்கே வராதா?

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள், ஆயுதக் கொள்வனவுகள் அனைத்தும் இராணுவ மயமான ஆட்சிக்கே சாதகமாக நகர்ந்து செல்வதை அவதானிகள் கூறத் தயங்கவில்லை. சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவிருக்கும் இவ்வேளையில், முகமாலைப் பகுதியில் கடும் சமர் உக்கிரமாக நடைபெறுவதாகவும், அழிவுகள் உயிரிழப்புகள் அத்துமீறிப் போவதையும் செய்திகள் கூறுகின்றன. அங்கு நடைபெறும் தாக்குதல்களுக்கு பரஸ்பரம் இருசாராரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டினாலும், வலிந்த ஒரு தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்த்து வருவதை சம்பூர் ஆக்கிரமிப்பு எடுத்துக் காட்டும்.

இலங்கை இராவணுவத்துக்கு அளிக்கப் பட்டுள்ள கட்டுப்பாடற்ற அதிகாரமும், தடுத்து நிறுத்த முடியாத ஒட்டுக் குழுக்களின் ஆள்கடத்தல்களும், படுகொலைகளும் நீடிக்குமானால் இலங்கையின் ஜனநாயக ஆட்சிமுறைக்கே அபாயம் ஏற்பட வாய்ப்புண்டு. இதுவரை நடைபெற்ற எத்தனையோ ஆள்கடத்தல்களும், படுகொலைகளும், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், குறிப்பாக அதிஉயர் பாதுகாப்பு வலயங்களிலும் தான் சம்பவித்துள்ளன. இச்சம்பவங்கள் பற்றிய விசாரணைகளோ, பெறுபேறுகளோ இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பாதிக்கப் பட்டவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற முத்திரை பதிக்கப்பட்டுள்ளது. அண்மைச் செய்திகள் கூறுவதுபடி சிங்கள இனத்தைச் சார்ந்தவர்களும் சிலர் பாதிக்கப் பட்டுள்ளனர். எனவே, நாட்டின் சட்ட திட்டங்கள் மதிக்கப்படாத பட்சத்தில், மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் பெருகிவருவது தடுக்க முடியாமல் போய்விடும்.

ஈழத்தின் வடக்கிலும், கிழக்கிலும் அரசாங்கப் படைகளினால் அரங்கேற்றப்படும் உணவுத் தட்டுப்பாடு, போக்குவரத்துத் தடை, கடற்றொழில் மறுப்பு, விவசாய மறுப்பு, ஆள்கடத்தல், நாளாந்தம் நடைபெறும் படுகொலைகள், பகிரங்கமாகச் சிறைப்பிடிக்கும் சிறார்கள், தமிழ் மக்களைப் பணியவைக்க எடுக்கும் பயங்கர அழுத்தங்கள் இழந்த தாயகத்தைத் திரும்பப் பெறவும், அந்த மண்ணில் சுய கௌரவத்துடன் வாழவும், தம்மால் இழக்கக் கூடாததையெல்லாம் இழந்து விட்ட தமிழ் மக்கள் இனிமேலும் பணிவார்கள் என்ற நப்பாசையை அரசாங்கம் முன்னெடுப்பதில் அர்த்தமில்லை. தனியொரு தமிழன் ஈழத்தில் இருக்கும்வரை தணிந்துவிடப் போவதில்லை தமிழீழத் தாகம். சம்பூரைப் பிடிக்கலாம், முகமாலையில் முன்னேற முயற்சிக்கலாம், அம்பாறையில் அத்துமீறி ஆளணிகளை ஊடுருவலாம், தமிழ் மக்களின் இதயங்களைப் பிடிக்காமல் எதுவுமே வெற்றி பெறப்போவதில்லை. சிந்திக்குமா சிங்கள அரசு.


ONLY
£499
BROKER FEE



FOR ALL SUB PRIME MORTGAGE LOANS UPTO £250,000

MORTGAGES FOR WORK-PERMIT HOLDERS
(Subject to status)

இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



NO HIDDEN CHARGES

Free Valuation for Mortgages & Re-mortgages

மறைமுகமான கட்டணம் எதுவும் இல்லை.

முதன் முறை வீடு வாங்குபவர்களுக்கும் Re-mortgages செய்பவர்களுக்கும 100% Mortgage செய்து தரப்படும்.

வாடகைக்கு விடும் நோக்குடன் வீடு வாங்க விரும்புகின்றீர்களா?

உங்களுக்கு 90% Mortgage செய்து தரப்படும்.

உங்கள் சகலவிதமான கடன் பிரச்சினைகளுக்கும் எம்மிடம் தீர்வு உண்டு

உடன் அழையுங்கள்
ANYLOANUK
08000 470 158

நீங்கள் எமது அலுவலகத்திற்கு வரத் தேவையில்லை.
நாங்களே உங்கள் வீடு தேடி வந்து சகல
ஆலோசனைகளும், விண்ணப்பப்படிவங்கள்
நிரப்புவதற்கும் உதவி செய்வோம்.

Your Home may be at risk if you do not keep up the repayments on a mortgage or any loan secured on it all loans are subject to status & affordability.

## நெஞ்சு பொறுக்குதில்லையே...

எழுதுபவர் வித்தகன்

# கொழும்(ப்)பில சனம்

வெயிலுக்குள்ளையும் குளிருக்குள்ளையும் நிண்டு ராப்பகலாத் தும்படிச்ச களைப்பு மாற ஊரிலை போய்க் கொஞ்ச நாள் சந்தோசமா நிண்டு போட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டன். அது என்னடா எண்டால் நான் வெளிக்கிட முதல் 'சனியன்' போய்க் குந்திக் கொண்டிருக்குது.

நான் போய்க் கட்டுநாயக்காவிலை இறங்க முதலே அங்கை பாதையை மூடி வைச்சுக் கொண்டு விண்ணாணங் கதைச்சுக் கொண்டிருக்கிறாங்கள்.

பிறகென்ன செய்யுறது? சரி யாழ்ப்பாணத்துக்குத்தான் போக முடியேல்லை. 'குட்டி யாழ்ப்பாணம்' எண்டு சொல்லிற வெள்ளவத்தையிலை போய் தெரிஞ்ச சினேகிதப் பெடியனோடை தங்குவம் எண்டு போட்டு வெளிக்கிட்டன்.

என்ரை ராசா! சத்தியமாச் சொல்லுறன். ஆராவது கண்ணைக் கட்டிப் போட்டுக் கொண்டு போய் இறக்கி விட்டிருந்தால் சிங்கப்பூரிலை கொண்டு வந்து விட்டிட்டாங்கள் எண்டுதான் நினைச்சிருப்பன். எல்லாம் ஒரே தொடர் மாடி மயம். என்ரை சினேகிதனும் ஒரு தொடர் மாடி வீட்டிலை தான் இருக்கிறான். ஆரோ இஞ்சை இருக்கிற சொந்தக்காறற்றை வீடாம். வீட்டைப் 'பாத்துக்' கொள்ளுறதுக்காண்டி மாசம் 25000 ரூபாய் மட்டும் வாங்கிக் கொண்டு இருக்க விட்டிருக்கினமாம்.

ஏசீயும் சற்றலைற் ரீவீயும் சுடுதண்ணிப் பைப்பும் எண்டு இங்கத்தைய ஆக்கள் பிச்சை எடுக்க வேணும். நான் அதைப் பாத்து 'ஆவெண்டு' கொண்டு நிக்க

"வாடா மச்சான்? மேலை பொயிட்டு வருவம்"

எண்டு இழுத்துக் கொண்டு போனான்.

அங்கை என்னெண்டால் ஒரு பக்கம் Swimming Pool மற்றப் பக்கம் Badminton Court இன்னொரு பக்கம் Gym.. எனக்கு இந்திரலோகத்திலை நிக்கிறனோ எண்டு சந்தேகம் வந்திட்டுது.

"என்னடாப்பா நீ லண்டனிலை இருக்கிற வீடு இதை விட வசதியா இருக்குமென்ன" எண்டு வாயைக் கிளறினான்.

அவன் லேசுப்பட்டவனில்லை. வெளிநாட்டு நடப்பு எல்லாம் அத்துப்படியாத் தெரியும். தெரிஞ்சு கொண்டு என்னைக் கிண்டிப் பாக்கிறான் எண்டு எனக்கு விளங்கினது. நான் ஒண்டும் சொல்லாமல் சிரிச்சு மளுப்பினன்.

அங்கை Box Room இக்குள்ளை போடுற உடுப்பைத் தலைமாட்டிலையும் போட்ட உடுப்பைக் கால் மாட்டிலையும் போட்டுக் கொண்டு குடங்கிக் கொண்டு படுத்துக் கிடக்கிற என்னையும் வேலைக் களைப்புத் தீர நீச்சலடிச்சுக் கொண்டிருக்கிற 'தொடர்மாடிக் காறரையும்' நினைச்சுப் பாத்தன்? ம்ம்ம் எல்லாத்துக்கும் குடுத்து வைச்சிருக்க வேணும். பெருமூச்சுத்தான் வந்துது. அடுத்த நாள் கோயிலுக்குப் போவம் எண்டு வெளிக்கிட்டன். நாங்கள் வாசலாலை வெளிக்கிட இல்லை. ஓட்டோ ஒண்டு வந்து காலுக்குள்ளை நிண்டுது. வேண்டாம் எண்டு கையைக் காட்டிப் போட்டு

"இஞ்சை சனம் 100 யார் போறதெண்டாலும் ஓட்டோவிலை தான் போவினம். அதாலை ஓட்டோக்காறர் எல்லாம் இஞ்சை தான் முகாம் போட்டுக் கொண்டு இருக்கிறாங்கள்.'

எண்டு கூட்டாளிப் பெடியன் சொன்னான்.

ஏன்ராப்பா கொஞ்சத் தூரம் நடந்து போனால் என்னவாம் எண்டு நான் கேக்க

"நீ உதைச் சொல்லுறாய். அண்டைக்கு ஒரு மனிசி Galle road ஐக் கடக்கிறதுக்கு Auto பிடிச்சுப் போட்டு 50 ரூபாயைக் குடுத்துப் போட்டு keep the change எண்டு போட்டுப் போனவாவாம்."

"அவையளுக்கென்ன கஸ்டப்பட்டு உழைச்ச காசே? இஞ்சையிருந்து 'ஹலோ' எண்டால் அங்கையிருந்து 'கிலோவிலை' காசு வருகுது. இவையளும் தாங்கள் நினைச்ச மாதிரிச் சிந்துகினம்"

எண்டு கவலைப்பட்டான். இப்பிடிக் கதைச்சுக் கதைச்சுக் கோயிலடிக்குப் போயாச்சு. ஒரே சனக்கூட்டம். சனமெல்லாம் பட்டுச் சீலையும் உச்சியிலையிருந்து உள்ளங்கால் மட்டும் நகையுமா நிக்கிறதைப் பாத்துப் போட்டு

"ஏன்ராப்பா ஏதாவது கலியாணங் கிலியாணம் நடக்குதோ" எண்டு கேட்டன்.

அவன் சிரிச்சுப் போட்டுச் சொன்னான்

"ஏன்ரா இவையளின்ரை உடுப்புகளைப் பாத்துப் போட்டுக் கேக்கிறியே. அதுகளும் பாவந்தானே. சீலைகளையும் நகை நட்டையும் பூட்டி வைச்சால் காணுமே. போட்டுப் 'படங் காட்டிறதுக்கும்' இடம்வேணும் தானே. அதுதான் 'பிள்ளையாரிட்டைக்' காட்ட வந்திருக்குதுகள்" இவையள் இப்பிடி சோக்காட்ட இஞ்சை இருக்கிற குடுக்காறர், காவாலிகள் எல்லாரும் இதை நம்பிப் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறாங்கள்"

எனக்கு அவன் சொன்னது விளங்கேல்லை. என்ரை முழியைப் பாத்துப் போட்டு அவனே சொன்னான்.

"ஒவ்வொரு தெருவிலையும் கிழமைக்கொருக்கா எண்டாலும் ஒரு சங்கிலி அறுப்பு வழிப்பறி எண்டு நடக்குது. இவையளுக்கும் அது கணக்கில்லை. அண்டைக்கு பக்கத்து பிளற் மனிசியின்ரை அஞ்சு பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு பொயிட்டாங்கள்.

வாங்கோ அன்ரி பொலிசிலை போய் ஒரு என்றி போடுவம்' எண்டு நான் கூப்பிட

"விடு தம்பி உந்த அஞ்சு பவுண் சங்கிலிக்காண்டி போலிசு கிலிசு எண்டு திரியிறதே'

எண்டு மனிசி சொல்லுது. உதைத்தான் புளிப்பு எண்டு சொல்லிறது.

"இதுக்கு நீங்களும் ஒரு காரணம் தானே. அங்கை புறாக்கூடு மாதிரி அறைக்குள்ளை இருந்து கொண்டு ராவுபகலாக் கண்ட கண்ட வேலையெல்லாம் செய்வியள். ஆனா பெரிய மாளிகைக்கு முன்னுக்கு நிண்டும் படகு மாதிரிக் காருக்கு முன்னுக்கு நிண்டும் படம் எடுத்து ஊருக்கு அனுப்புவியள். அப்ப இங்கை இருக்கிற சனம் நினைக்கும் வெளிநாடுகளிலை ராசவாழ்க்கை வாழுறாங்கள். அவையளிட்டைக் கொஞ்சக் காசை வாங்கி நாங்களும் கலர்ஸ் காட்டுவம் எண்டு...'

அவனுக்குக் கோவம் வந்தால் சத்தம் கூடிடும். சனம் எல்லாம் எங்களைப் ஒரு மாதிரியாப் பாக்க அவனையும் இழுத்துக் கொண்டு வெளியிலை வந்தன். ஆசையாப் போன பயணத்தை அரைகுறையிலை முடிச்சுக் கொண்டு திரும்பி வந்திட்டன். போகேக்குள்ளை இருந்ததை விட மனப்பாரம் கூடி இருந்துது.

பேசாமல் இஞ்சை நின்டு தும்படிச்சிருந்தால் காசு கொஞ்சம் கையிலை இருந்திருக்கும். கொழும்பிலை இருக்கிற மச்சானுக்கு அனுப்பியிருக்கலாம். நீங்கள் என்ன சொல்லுறியள்???

## குட்டிக் கதை

# முடிவிலா வாழ்வு

அன்னம்மா ஓட்டமும் நடையுமாக வீடு வந்தாள். படலையில் அவளின் பத்து வயசு மகனும், எட்டு வயசு மகளும் வழிமேல் விழிவைத்து தனக்காய் காத்து நிற்பதைக் கண்டதும் உள்ளத்தில் ஓர் உவகை!

நாலு வீட்டில் மாவிடித்துச் சேர்த்த பணத்தில் வயிராற சோறு கறி சமைத்துக்கொடுக்கும் சந்தோசத்துடன், தேநீர் போட்டு பிள்ளைகளுக்கும் கொடுத்து தானும் குடித்து அந்த மெழுகிய தரையில் தொங்கலை விரித்து களைப்பின் நிமித்தம் தலையைச் சாய்த்தாள். அவளை அறியாமலே சற்று உறக்கத்திலாழ்தி விட்டது அவளின் களைப்பு.

திடுக்குற்று கண்விழித்த அன்னம்மா, பசி என்று குழந்தைகள் பேசிக்கொண்ட குரல் கேட்டு ம்..அவர்கள் வயிராறச் சாப்பிட்டு எத்தனையோ நாட்கள் என அவசர, அவசரமாக பையை எடுத்து அரிசி, கறிக்கு ஏதும் சமான்கள் வாங்க என்று பிளாஸ்டிக் பையை எடுக்கவும் குடிபோதையில் தள்ளாடியபடி கணவன் வீட்டிற்கு வரவும் சரியாக இருந்தது.

மனைவியின் கையை கொற கொற என்று வீட்டுக்குள் இழுத்து வந்து பணம் வேண்டும் என அதட்டினான். குடிப்பதற்கும், சூதாடுவதற்கும் பணம் கேட்டு நித்தமும் நடக்கும் நாடகந்தான். அவளின் தலைமுடியை இழுத்து அடித்துத் துன்புறுத்தினான்.பிள்ளைகள் ஓவென்று கதறி அழுதன.

**மாரிக்கு நிறைந்திருந்த கிணற்றுக்குள் விழலாமா என யோசித்தாள். சீ.. என்ன கோழைத்தனம் பிள்ளைகள் என்ன பாவம் செய்தன**

அன்னம்மாவுக்கு வைராக்கியம் பிறந்தது பிள்ளைகள் இருவரையும் கைகளில் இழுத்துக் கொண்டு கொல்லைப்புறமுள்ள மாரிக்கு நிறைந்திருந்த கிணற்றுக்குள் விழலாமா என யோசித்தாள். சீ..என்ன கோழைத்தனம் பிள்ளைகள் என்ன பாவம் செய்தன.. ம்... தாய் வீட்டுக்கெனப் போய் இருந்தாலும் அங்கும் வந்து கத்தி.. குடிபோதையில் குடும்பத்தை சந்தி சிரிக்க வைத்து விடுவான்.. பிள்ளைகளின் முகத்தைப்பார்த்தாள் ஒட்டிய வயிறும் பசி களைப்பில் முகமுமாக... ஐயோ கடவுளே என்ட குழந்தைகளைக் காப்பாற்றும் தைரியத்தை எனக்கு தா என உள்ளம் அழுதது..."

அவளின் சிந்தனை ஓட்டத்தை நிறுத்தியது கன்னத்தில் பளீரென விழுந்த அறை..பானை, தலையணையடி தூக்குச்சட்டி என அவள் பணம் வைக்கும் இடத்தில் எல்லாம் தேடிவிட்டு ஏமாற்றத்தில் அவளின் முந்தானையை பிடித்து இழுத்தான் அதன் முடிச்சில் பணம் இருக்கும் என..கடைசியாக இருந்த அந்த ஒருநாள் கூலிப்பணமும் வீணாகப்போகப்போகுது என்பதை விட பிள்ளைகளின் அழு குரல் நெஞ்சைப்பிழிந்து பிறடியை உந்தித்தள்ளியது தனது பலம் எல்லாம் திரட்டி உலக்கை பிடித்து காய்த்திருந்த கைகளால் அவனின் கையை பலமாக தட்டி கூந்தலை விடுவித்து கொண்டு, அவனை உந்தித் தள்ளி விட்டாள்.

தள்ளாடி விழுந்தவன் விக்கித்து நின்றான். இம்மாறான செயலை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சிவந்த விழிகளும், அவிழ்ந்த கூந்தலும் நிமிர்ந்த நடையும் என அவளின் கோலங்கண்டு வெல வெலத்துப் போனான். உள்ளே சென்று இரு வெட்டிய எலும்பிச்சம் பழம் எடுத்து வந்தவள் அதை அவனின் தலையில் தேய்த்து நல்ல குளிர் நீரால் தோய வார்த்தாள்

தோ? பாரய்யா? நீ எங்களைப் பார்க்கா விட்டாலும் பரவாயில்லை.. நான் பிள்ளைகளின் வயிற்றுப் பாட்டிற்கு என்றுழைத்த நாலு காசில கை வைத்தால்.. நான் நானாக இருக்க மாட்டன் என எச்சரித்தாள். அவனுக்கு அவளின் மேல் கொள்ளை ஆசை, நண்பர்களின் சகவாசத்தால் ஏற்பட்ட பழக்கத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பதற்கிணங்க அவன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.?. பெண் என்பவளுக்கு எப்பவும் கணவனுக்கென்றோர் தனியிடம் உண்டு. அவளுக்கும் அப்படித்தான். கோடிக்கரைப்பிள்ளையார் கோயிலில் கணீர் என்ற மணியோசை அவர்களின் ஆனந்தமான புது வாழ்க்கைக்கு அத்திவாரம் போல் தேனாக அந்த உள்ளங்களில் பாய்ந்தது.

- ரமணி

காயத்திரி தேவி ஜோதிடாலயம்


Specialist Palm Reader & Face Reader

Pandit Guru Swami

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சினை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும்.

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்





Call now for a confidential appointment

(From 9.00 am to 6.00 pm)

231 Dudley Road, Birmingham, B18 4EJ

(Opp.Summerfield Park)

Near by Birmingham City Hospital

Tel: 0121 454 1909

Mob: 07904 492 674

சி. புஸ்பராசாவின்

# ஈழப் போராட்டத்தில் எனது (பொய்) சாட்சியம்

## அவரது புத்தகம் மற்றும் அவரைப் பற்றிய ஒரு பார்வை - பாகம் ஏழு

சாத்திரி

*( ஒரு பேப்பருக்காக )*

இம்முறை நிர்மலாவை பற்றிப் பார்ப்போம். இவை புஸ்பராசாவின் புத்தகம் பற்றிய விமர்சனத்தில் இருந்து சிறிது விலகிசென்றாலும் இன்றைய காலத்தின் தேவைகருதி மற்றும் இன்றைய இளம் புலம் பெயர் சந்ததியினரிற்கு சில விடயங்களையும் தெளிவு படுத்தும் நோக்கத்திற்காகவும் எழுதப்படுகிறது.

ராஜினியின் சகோதரி நிர்மலா இவரது கணவர் பெயர் நித்தியானந்தன். நித்தியானந்தன் யாழ்பல்கலைக்கழகத்தில் பொருண்மியத் துறையில் விரிவுரையாளராக இருந்தார். நிர்மலா - நித்தியானந்தன் என்கிற பெயர்கள் எண்பதுகளின் முற்பகுதியில் இலங்கை ஊடகங்களில் பிரபல்யமாக அடிபட்டன.

தம்பதிகள் இருவரும் போராளிகளிற்கு உதவினார்கள் என்பதாலும் ஆயுத போராட்டத்திற்கு ஆதரவளித்தவர்கள் என்கிற காரணத்தாலும் 1982ல் இலங்கையரசால் வெலிக்கடை சிறையில் தடுத்துவைக்கப்பட்டனர். நித்தியானந்தன் தம்பதிகள் கைது செய்யப்பட்டபோது முழு யாழ்ப்பாணமுமே கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 83 யூலை வெலிக்கடை படுகொலைகளில் இருந்து உயிர் தப்பிய இருவரும் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டனர்.

1983ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ந் திகதி சிறை வைக்கப்பட்டிருந்த பல இயக்கங்களையும் சார்ந்தவர்களால் மட்டக்களப்பு சிறை உடைக்கப்பட்டு பலர் தப்பியோடினார்கள். அதில் ஆண்கள் பகுதியில் சிறைவைக்கப்பட்டிருந்த நித்தியானந்தனும் தப்பிக் கொண்டார். சிறையின் பெண்கள் பகுதியிலிருந்த நிர்மலாவையோ மற்றய பெண்களையோ அவர்களால் மீட்க முடியவில்லை தப்பியோடி வெளியில் வந்தவர்களிற்கு புளொட் மற்றும் ஈபிஆர்எல் எவ் அமைப்பினர் உதவி செய்து அவர்களை இந்தியா தமிழ் நாட்டிற்கு தப்பிசெல்ல உதவினார்கள். பின்னர் தாங்கள் தான் அந்த சிறையை உடைத்தது என புளொட்டும் ஈ.பி.ஆர்.எல்.எப்ம் மாறி மாறி உரிமை கோரிக் கொண்டது வேறு விடயம்.

84ம் ஆண்டு ஜூன் மாதம் 10ம் திகதி விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு சிறையை உடைத்து நிர்மலாவை மீட்டு அவரை யாழ்ப்பாணம் ஊடாக தமிழ் நாட்டிற்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரிற்கு புலிகள் அமைப்பினரே உதவிகள் செய்து தமது ஆதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையை இவரது கணவன் நித்தியானந்தனுடன் இணைத்து நிருவகிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது.

இதே காலகட்டத்தில்தான் புலிகள் அமைப்பு பெண்கள் படைப்பிரிவை கட்டியமைக்கும் பணியை ஆரம்பித்திருந்தனர் புலிகள் இயக்கத்தில் அதிகளவு பெண்கள் இணைந்திருக்காத காலகட்டம் அது எனவே புதிதாய் போராளிகளை இணைக்கவும் ஏற்கனவே இணைந்த போராளிகளிற்கு அரசியல் மற்றும் போராட்டம் பற்றிய தெளிவூட்டல்கள் என்பனவற்றை வழங்க வும் புலிகளின் தலைமை முடிவுசெய்து அதற்கான பொறுப்பு திருமதி அடேல் பாலசிங்கத்திடம் வழங்கப்பட்டது. இது நிர்மலாவிற்கு வெறுப்பை உண்டு பண்ணியது. தன்னை ஒரு பெண்ணியவாதியாகவும் படித்த இலக்கியவாதியாகவும் கருதிக் கொள்ளும் அவர் ஈழப் போராட்டத்திற்காக சிறை சென்ற பெண் தானிருக்க எப்படி அடேல் பாலசிங்கத்திற்கு அந்த பொறுப்பை கொடுக்கலாமென்று இயக்கத்தினுள் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணினார்.

நிர்மலாவைப் பற்றி அடேல் பாலசிங்கம் அவர்கள் எழுதிய 'சுதந்திர வேட்கை' எனும் நூலில் (பக்கம்115ல்) இவ்வாறு கூறுகிறார் 'விடுதலைப்புலிகள் இயக்கத்தில் நிர்மலாவை இணைப்பதற்கு பிரபாகரன் அவர்கள் ஆர்வமாக இருக்கவில்லை பெண்ணிய எண்ணக்கரு தொடர்பான தெளிவான முரண்பாடு இருவரது எண்ணப்போக்கிலும் காணப்பட்டது. பிரபாகரனுடைய சித்தாந்த பார்வையில் நிர்மலாவினது பெண் விடுதலைப் பார்வை ஓர் அச்சடித்த மேற்குலப் பெண்விடுதலைப் பார்வையாக இருந்ததேயன்றி உண்மையாக விடுதலை வேண்டி நின்ற தமிழ்பெண்களை இனம்கண்டு தழுவக் கூடிய பெண்விடுதலை இலட்சியமாக இருக்கவில்லை. எனவே பெண்கள் பிரிவை கட்டியெழுப்பும் எந்தவொரு பொறுப்பையும் நிர்மலாவிடம் கொடுக்கும் திட்டம் பிரபாகரனிடம் இருக்கவில்லை'. அதைவிட புலிகள் அமைப்பில் முதல் பெண் போராளி என்று பார்த்தாலும் கூட அது திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களே. தனக்கு பதவிகள் பொறுப்புக்கள் தராததால் நிர்மலா வெறுப்படைந்து புலிகள் இயக்கத்தை விமர்சிக்க தொடங்கினார்

அதேநேரம் புலிகள் அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரும் புலிகளின் தலைமைக்கு மிகநெருங்கியவராகவும் இருந்த வடக்கு புன்னாலைகட்டுவனைச் சேர்ந்த சின்னையா சிவகுமார் (ராகவன்) என்பவரிற்கும் இவரிற்கும் இடையில் உறவு ஏற்பட்டது. இதனால் வெறுப்படைந்த நித்தியானந்தன் புலிகளுடனான தொடர்புகள் மற்றும் அவர் நடாத்திய பத்திரிகையின் பொறுப்புகளை விட்டு வெளியேறி வெளிநாடொன்றிற்கு சென்றுவிட்டார். நிர்மலா, ராகவனைப் பயன் படுத்தி புலிகளின் தலைமைக்கு எதிராகவும் அதே நேரம் புலிகள் அமைப்பை உடைத்து அதனை கைப்பற்றும் நோக்குடன் காய்கள் பழங்கள் எல்லாத்தையும் நகர்த்திப் பார்த்தார். ஊகூம் ஒன்றும் நடக்கவில்லை. ஒரு விடுதலைப் போராட்டத்தை கட்டுக்கோப்புடன் உறுதியாக கொண்டு நடாத்தகூடிய வல்லமை ராகவனிடம் இல்லையென்பது ராகவனுக்கே தெரியும் அதுமட்டுமல்ல நிர்மலாவின் பேச்சைக் கேட்டு அவரை நம்பிபின்னால் போகிற நிலைமையிலும் யாரும் இருக்கவில்லையென்பதும் உண்மையே.

எனவே இவர்கள் இருவரும் இயக்கத்திலிருந்து வெளியேறி அவர்கள் விரும்பிய படி விரும்பிய இடத்திற்கு சென்று அவர்களின் சொந்த வாழ்க்கையை தொடர இயக்கத்தின் தலைமை அனுமதித்தது. இவர்கள் இருவரும் இப்போது புலத்து பெண்ணியம் பேசும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் உதவியுடன் இங்கிலாந்துக்கு அகதியாக வந்து குடியேறியேறினார்கள். எங்கிருக்கிறார்கள் என்ன செய்கிறார்கள் என பல ஆண்டுகள் சத்தமில்லாமல் இருந்தவர்கள் தற்சமயம் புலிகள் இலங்கை அரசுடன் செய்து கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் பழைய குருடியின் வீட்டு கதவை தட்ட தொடங்கியிருந்தாலும் தமிழர்கள் யாரும் இவர்கள் கதை கேட்கும் குருடர்களாய் இல்லை என்பது மட்டுமல்ல ராஜினியுடன் அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே தொடர்புகள் ஏதும் இல்லாதிருந்த திரணகமவும் கூடவே சேர்ந்து வேறு சில புலியெதிர்பு காரர்களையும் நிர்மலா ஒன்றிணைத்து மனிதவுரிமைவாதிகள் என்கிற பெயரில் புலிக்கு புல்லு தீத்த முடியாவிட்டாலும் பரவாயில்லை புண்ணாக்காவது தீத்தியே தீருவது என்று புலம்பி திரிகிறார்கள். முன்னர் மனைவியின் நடத்தையால் வெறுப்படைந்து வெளியேறிய நித்தியானந்தனும் இந்தக் குழுவினருடன் சேர்ந்து செயற்படுகிறார் என்பது கொஞ்சம் வியப்பானதுதான்.


*தொடர்ச்சி 17ம் பக்கம்*

KINGSTONS SOLICITORS

ஐரோப்பிய பிரஜா உரிமையுடன் **Sponsor** செய்ய விரும்புபவர்களுக்கு ஐரோப்பிய நாட்டு அகதி நிலை விண்ணப்பங்களை நுட்பமாகத் தயாரித்து சமர்ப்பித்தல், அகதி நிலை கோருதல், அகதி நிலை மேன் முறையீடுகள் **(Detention & Bail)** இன்னும் பல சட்டம் சம்பந்தமான சகலதேவைகளுக்கும் எம்மை உடன் நாடுங்கள்

எங்கள் நேர்மையான நம்பிக்கையான சேவையை விரும்பிய வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பலர் இருக்கின்றனர்.

- IMMIGRATION
- FAMILY & MATRIMONIAL
- CRIMINAL LITIGATION
- CIVIL LITIGATION
- LANDLORD AND TENANT
- PERSONAL INJURY
- EMPLOYMENT
- WILLS AND PROBATE



IMMIGRATION

- ASYLUM AND HUMAN RIGHTS APPLICATION
- EEA APPLICATION
- WORK PERMIT
- STUDENT VISA
- ENTRY CLEARANCE APPLICATION
- APPEALS
- DETENTION AND BAIL
- INJUNCTION
- JUDICIAL REVIEW
- NATURALISATION APPLICATION

Contact:

Chrishanthi Vincent

LLB (Hons) London

Tel:

020 8540 0468

Fax:

020 8540 7504

251A HAYDONS ROAD,

WIMBLEDON,

LONDON SW19 8TY

Your home is at risk if you do not keep repayment of mortgages or other loans secured on it.

# கொஞ்சம் அனுபவித்தால் என்ன?

எல்லாளன்
*( ஒரு பேப்பர் )*

பல வருடங்களுக்கு முன் என்னுடைய தந்தையார் மோட்டார் சைக்கிள் ஒன்றினை வாங்கி இருந்தார். அந்த வாகனத்துக்கு ஒரு வருட கால உத்தரவாதம் வழங்கி இருந்தாலும் தங்கு தடையின்றி ஏழு வருடங்கள் உபயோகப்படுத்தலாம் என்று கூறி இருந்தார்கள். அந்த மோட்டார் சைக்கிள் மூன்று வருடத்துடன் தனது சேவையினை நிறுத்திக் கொண்டது.

ஏன்? காரணம் "அதை அதை அப்படி அப்படி பாவிக்க வேண்டும்" என்று சொல்வார்கள் அல்லவா அதுபோலத் தான் இதுவும். போட்டு அலைக்கழித்தால் எதுவும் பொடிப் பொடியாகி விடும். இப்போது இந்த விளக்கம் எல்லாம் எதற்கு என்றொரு கேள்வி வரும்!

வாழ்க்கை என்றொரு விடயம் இருக்கிறதல்லவா அதுவும் அப்படித்தான். வாழுகிறோம் என்று நினைத்துக் கொண்டு அதை எப்படி வாழுகிறோம் என்று தெரியாமல் அங்கும் இங்கும் அலைமோதி நிம்மதியைத் தொலைப் பதும் மோட்டார் சைக்கிள் குறித்த காலத்துக்கு முன்னரே பொடிப்பொடியாவதும் ஒன்றுதான்.

வாழ்க்கையை நாங்கள் எப்படி வாழ்கிறோம்? ஒரே ஓட்டம்தானே! "இல்லையே" என்கிறீர்களா. எங்களுக்கு இதுதான் வாழ்க்கை என்று ஆகி அது பதிந்தும் விட்டது. அதனால்தான் மறுக்கிறது மனது. எத்தனை பேருக்கு வீட்டில் ஒன்றையும் பற்றி யோசிக்காமல் உட்கார நேரம் கிடைத்திருக்கிறது. எத்தனை பேருக்கு முழுக் குடும்ப மாக இருந்து ஒரு வேளையாவது உணவருந்த நேரம் கிடைத்திருக்கிறது. இதைவிட எத்தனை பேருக்கு இதில் எல்லாம் அக்கறை இருக்கிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே என்று எல்லாருக்கும் தெரியும் ஆனால் உண்மையில் நாங்கள் எத்தனை பேர் இங்கே வாழ்க்கையை வாழ்கிறோம். நாங்கள் ஒரே இயந்திரமாக தொழிற்படுவதை வாழ்க்கை என்று சொல்ல முடியுமா? அப்படியென்றால் இப்படியும் சொல்லலாம் "அதோ அங்கே நிற்கும் அந்த பஸ்வண்டி, தான் "வாழ்ந்த" நாளில் இரண்டு தடவைகள் விபத்துக்குள்ளாகியது" என்று.

வாழ்க்கை என்பது ஒரு "உன்னதமான" விசயம்! எல்லா வற்றையும் அழகாக நிதானமாக அனுபவிக்க வேண்டும். சின்ன உதாரணம் ஒரு தோடம்பழத்தினை நாம் எப்படி உண்ணுகிறோம். அனேகமாக யாருடனாவது பேசியபடி கடகட என்று உரித்து உள்ளே போட்டு விழுங்கி விடு கிறோம். அந்தத் தோடம்பழம் எப்படி உருவாகியது?.

அது காற்று, நீர், நிலம், சூரிய ஒளி (ஐம்பூதங்கள்) என்பன போன்றவற்றின் கூட்டு. விதையாக இருந்த காலத் தில் இருந்து பழமாக மாறி எமக்குக் கிடைக்கும் வரை காற்றால் மழையால் சூரிய ஒளியால் நிலக் கனியுப்புக் களால் எவ்வளவு மேருகூட்டப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளது. தோடம் பழத்தின் நிறமே ஒரு தனி!

இவ்வளவையும் எங்கள் மனதில் வைத்துக் கொண்டு ஒரு தோடம்பழத்தை உண்பதற்கும் சாதாரணமாக உண்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. வாழ்க்கையை கொஞ்சம் அனுபவித்தால் என்ன?.

மனிதமனம் இயல்பாகவே நிறைய ஆசைகளைக் கொண்டது. ஆசை இல்லாத மனம் இல்லை! இருக்க முடியாது இருந்தால் அந்த மனத்திற்குப் பெயர் புத்தன். ஆசையினால் தான் மனம் ஏதேதோ தேடி அலைகிறது. ஆனால் அவைகளின் எல்லைகள்தான் எங்களை இயந்திரமாக்கி விட்டிருக்கிறது.

அந்த ஆசை வெறுமனே காணி பூமியுடன் நின்று விடுவதில்லை. 'தொழில்' 'அந்தஸ்து' என்று இன்னும் விரிவடைந்து சென்று கொண்டிருக்கிறது. இது எங்களின் வாழ்க்கையை வாழ விடாமல் எங்களை ஓய்வின்றி இயங்கச் செய்துவிட்டது.

எப்படியோ இறுதியில் எங்களுக்கு மரணம்தான்! வாழ்க்கையில் அடுத்த நிமிசம் மரணம் வரலாம் என்பதற்கு 100 வீதம் உத்தரவாதம் இருக்கிறது. யாராலும் இதை மறுக்க முடியுமா? அதனால் தான் இருக்கும் வரையில் வாழ்வோம் என்று சொல்கிறேன்

இது ஒன்றும் பெரிய விடயமே கிடையாது. கிட்டத்தட்ட இயற்கையோடு ஒத்துப் போகிறோம் அவ்வளவுதான். தேவையான வரைக்கும் உழைப்போம். மேலதிகமாக எதற்கு? யாருக்கு? உங்கள் பிள்ளைகளுக்கா சரி! அப்போ அவர்கள் உழைப்பது யாருக்கு? அவர்கள் பிள்ளைகளுக்கா? ஏன் அவரவர் தனக்குத் தனக்கு உழைத்தால் என்ன?.

வேலையில் விடுமுறை கிடைத்தால் அக்காலத்தில் இன்னொரு வேலை செய்யாமல் இருப்பது கிட்டத் தட்ட முட்டாள்தனம் என்றான் எனது நண்பன். அவனுக்கு வாழ்க்கை பற்றி ஏதாவது சொன்னால் உனக்குக் கஷ்டம் வந்தாத் தெரியும் என்கிறான். அப்படி ஒரு சூழ்நிலையை அவனுக்கு உருவாக்கியது யார்? அவன்தான்!

எதையும் ஒழுங்காக திட்டமிட்டிருந்தால் பிரச்சனை ஏதும் வராது. அடுத்தவர் வாழ்க்கையைப் பார்த்து ஒப்பிட்டு வாழ்வதே எங்களுடைய விசேட தன்மை ஆகிவிட்டது! அதை மாற்றினாலே எங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவோ மாறுதல்கள் வரும்.

அந்த விசேட தன்மையினை நாம் எப்படி விட்டுக் கொடுப்பது? அதுதானே நமது அழியாச் சொத்து! பக்கத்து வீட்டுக்காரன் எத்தினை வீடு வைச்சிருக்கிறான் என்ன கார் வைச்சிருக்கிறான்? அவன்ர பிள்ளையின்ர படிப்பென்ன? எப்பிடி அவனுக்கு விலாசம் காட்டலாம்.

இப்படிப் பலவிதமான சிக்கல்கள் எங்கள் தலைக்குள் இருந்தால் எப்படி நாம் சந்தோசமாக, இயல்பாக வாழ முடியும்? ஒருபோதும் முடியாது.

ஆகவே நிம்மதியாக சந்தோசமாக இயல்பாக வாழ வேண்டும் என்றால் எங்களுக்காக மட்டும் வாழ வேண்டும். எங்களின் உண்மையான மகிழ்ச்சிக்காக வாழவேண்டும். அது எங்கே இருக்கிறது? எங்களுக்குள்ளேதான் இருக் கிறது. பக்கத்து வீட்டுக்காரரிடம் அல்ல.

எங்கேயோ தொடங்கி எங்கேயோ முடித்து விட்டேனோ என்று ஒரு கவலை இருக்கிறது. வேறென்ன செய்வது வாழ்க்கையின் பல தளங்களைப் பற்றி சிறு பக்கத்தில் எழுதி விட முடியுமா? இருப்பினும் ஒரு சிறு முயற்சி.

## சி. புஸ்பராசாவின் ஈழப் போராட்டத்தில் ...

*16ம் பக்க தொடர்ச்சி*

மீண்டும் புஸ்பராசாவின் புத்தகத்தை புரட்டுவோம். அதில் பத்மநாபாவை மட்டுமல்ல இந்தியப் படை காலத்தில் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சராய் இருந்த வரதராஜபெருமாள் பற்றி பக்கம் 326 ல் இப்படி சொல்கிறார் வடகிழக்கிற்கு முதலமைச்சராக வரும் எல்லா தகுதியும் கொண்ட ஒருவரையே பத்மநாபா முதலமைச்சராக்கினார் இப்போது இருக்கும் அத்தனை அரசியல் வாதிகளிற்கும் சவால் விட கூடிய கூர்மையான அறிவுத்திறன் கொண்ட ஒரு இளம் அரசியல் வாதியாக அவரைப் பார்த்தேன் எங்களது மக்களிற்காக ஜெனரல் கப்கத்துடன் அவர் எவ்வளவோ வாதாடினார்.

சந்தேகம் கொள்பவர்கள் ஒரு சுதந்திரமான சூழலில் அவரை அரசியல் களத்தில் விட்டுப் பாருங்கள் என்று சவால் விடுகிறேன் என்று சவாடல் விட்டு அவர் சார்ந்திருந்த ஈ.பி. அர் எல் எவ் இயக்கத்தை பற்றி அவர் வைக்கின்ற புழுகு பூக்களை வைக்க எமது காதின் அளவு போதாது.

அதேநேரம் ஒரு கணிசமான தொகை உறுப்பினர் களையும் பலத்தையும் கொண்டிருந்த எண்பதுகளின் முக்கியமான ஐந்து இயக்கங்களின் வரிசையில் இருந்த ஈபிஆர் எல் எவ் இயக்கத்தை பற்றி ஆகா ஓகோ என்று புகழ்ந்தவரால் அந்த இயக்கம் இயங்கிய காலத்தில் இலங்கை அரசபடைகளிற்கெதிராக உருப்படியாக செய்த ஒரு தாக்குதலை கூட அவரது புத்தகத்தில் விபரிக்க முடியவில்லை காரணம் அப்படி எந்த தாக்குதல்களுமே அந்த இயக்கத்தால் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் ஈபிஆர்எல்எவ் இயக்கம் என்றதும் ஈழத்து மக்கள் அனைவரினதும் ஞாபகத்திற்கு வருவது கரைநகர் கடற்படைத்தளமே. காரணம் அவர்கள் அந்த தளத்தை தாக்கி அது தோல்வியில் முடிந்ததே காரணம் . யுத்தம் என்பதில் வெற்றி தோல்விகள் சாதாரணமானவைதான். புலிகள் இயக்கம் கூட தங்கள் தோல்விகளைத்தான் தங்கள் அடுத்த வெற்றியின் பாடமாக்கினார்கள். ஆகவே ஈபி யினர் காரை நகர் தளத்தை தாக்கியதை நான் விமர்சிக்கவில்லை அந்த தாக்குதலை நெறிப்படுத்திய விதம் தான் விமர்சனத்திற்கும் நகைப்பிற்கும் வழி கோலியது. அந்த தாக்குதல் நடந்து முடிந்த பின்னர் அந்த காலகட்டத்தில் இளையவர்கள் நக்கலாக ஒரு பாடலை பாடுவார்கள் *'காத்தடிக்குது கலகலக்குது.. காரை நகரை ஈபி அடிக்குது.. சோத்து பாசலுக்கு புளொட் அடிக்குது தூரத்திலை ஈரோஸ் அடிக்குது' விட்டு விட்டு ரெலோ அடிக்குது இடைவிடாமல் புலி அடிக்குது'* என்று பாடுவது ஞாபகத்தில் இருக்கிறது. இந்த தாக்குதலுக்கு அனேகமான தயாரிப்பு வேலைகள் மாணிப்பாயிலேயே நடந்தேறின. எனக்கு ஈபிஆர்எல்எவ்வின் அரசியல் பிரிவில் பொறுப்பாய் இருந்த மானிப்பாயை சேர்ந்தவர்களான டேவிற்சன் மற்றும் ஜோர்ஜ் போன்றவர்கள் பாடசாலைக்காலத்திலேயே நன்கு பழக்கமானவர்களாக இருந்ததனால் அவர்களின் காரை நகர் முகாம் தாக்குதல் பற்றிய விபரங்கள் மற்றும் தயாரிப்பு வேலைகளையும் பார்வையிடக் கூடிய சந்தர்ப்பங்களும் கிடைத்தது எனவே காரை நகர் அடுத்த கதையுடன் அடுத்த பாகத்தில் சந்திப்போம்.

**SHOP FOR LEASE**
In Gillingham, Kent
(Lottery, Paypoint, 1 Bed room flat upstairs)
Call: **07926 000 000**

**PRIVATE TUITION - MATHS**
•For 11+ Maths
•For year 7 to GCSE Maths
•A/Level Maths
By: Rav BSc (Hons) MSc (Eng)
Tel: 07961 111 945

**அறை வாடகைக்கு**
பெரிய அறை ஒன்று வாடகைக்கு உண்டு. பஸ் தரிப்பிடத்திற்கு அருகிலும், Morden Tube Station இற்கு அண்மையிலும் அமைந்துள்ளது. விரும்பின் உணவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **07969 792 842**

**யாழ்நகரில் வர்த்தக கட்டிட தொகுதி விற்பனைக்கு**
யாழ்நகரின் மையப்பகுதி கஸ்தூரியார் வீதியில் 2 3/4 பரப்பு காணியில் அமைந்த மூன்று மாடிகள் கொண்ட (2003 ல் கட்டப்பட்ட) நவீன வியாபார கட்டிடத் தொகுதி ஒன்று உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: கஜன் 020 8873 1710 / 0788 660 2456

Shop For Sale
ஆங்கிலேயர் மட்டும் வசிக்கும் முக்கியமான இடத்தில் அமைந்துள்ள Off Licence News Agent & Groceries 20 வருட குத்தகையுடன் குறைந்த வாடகையும், வரியும் கொண்ட கடை விற்பனைக்கு உண்டு.
(Lease Hold)
தொடர்புகொள்ள வேண்டிய நேரம்: பகல் 12 மணி முதல் 3 மணி வரை
தொடர்புகளுக்கு: George 07985 620 302

**UNIVERSAL SERVICES**
**Rent a car in Sri Lanka**
When you are on holiday or business
Free airport pickup and delivery
Reserve the car before you come to Sri Lanka
Flexible packages for customers
Self drive or with a driver

Rates from £9.99 per day
Email: slcars@googlemail.com
For further information
UK Office
020 8664 8698
Mob: 0796 1583 600
Sri Lanka Office
0094 011 5554888 / 9
011 5554123
Email: vassl@lankabellnet.com

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர, ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!
**SUBSCRIPTION FORM**
Name:
Address :
Post code:
Telephone:
Email:
மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு "Jasmine Studio Ltd." என்ற பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# KIDS பட்டம்


## Hendon Tamil School



I go to a Tamil school in Hendon, it is the best school in London. Every year they take us to the beach and we do exciting events.

In the school, there are good staffs. They teach tamil, maths, english, science, vocal, violin, keyboard and veena. Each year we have sportsday and speech competitions. Everyone who has won or participated in it, will get a prize or a certificate. Thats all about the school.

Remember, you could always come and join in this school and enjoy, jus like us!



*by* ***Meran Annalingam (year 5)***
***From Colindale Primary School***


**Dear Kids**

Send us a short essay on any trips or holidays you have you have been to, and we will publish it in *Oru paper*.


- ***Kids Team***

## Maze

**Will you help Jessica find the way to her duck?**





## Spot the Difference



Answers

Shorter floss, Line missing on beaker, toothbrush cap black, Shadow missing from end of paste tube, Floss printed on container, Label missing from paste tube, Line missing on floss container, Pattern missing on right toothbrush handle.

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: ***Mayooran Santhakumar*** (6 Yrs.) *from Kingston*

Last week's runners up -

***Sharona Seevaratnam (Age 8)***
*Scarborough, Ontario*

***Achitha Sanganethy (Age 11)***
*Toronto*

***Viveahan Sanganethy (Age 7)***
*Toronto*

***Ovijah Sanganethy (Age 6)***
*Toronto*

***Thoorika Satgunam (Age 8)***
*New Malden*

***Kalyan Sharma (Age 7)***
*Eastham*

## Paintings



The world famous Tanjore paintings, painted on wood, glass, mica, ivory and on walls, are characterised by the use of primary colours, with stylised modelling effects by shading the inside of the contours. Jewels, drapery and architectural elements like finely executed pillars, rich canopies, garlands of ropes and chandeliers are slightly raised by the use of special plaster, covered with pure gold leaf and embedded with semi-precious stone of different hues. Painting on ivory, mica, and the more difficult genre of glass paintings, were all introduced in the 18th century. Whereas the religious paintings are highly decorative and flat, the paintings of the women are highly stylised with an element of reality infused in the portraits.

*- From Tharshia Ravindrakumaarn(11)*

## Tongue Twister

***Hi Kids,***

**I slit a sheet, a sheet I slit. And on a slitted sheet I sit. I slit a sheet, a sheet I slit. The sheet I slit, that sheet was it.. (FASTER!!!)**

**(Even faster!!!)**

*- Priya Shanmahalingam*

## Riddle

***Hi Kids,***


**I'm found on an artic mammal, and i'm used to make clothes to people to keep them warm.**

**WHAT IS IT?**

**Kiviut**

*- Sangeetha kumarasan*





## Jokes

***Q. Why did the balloon burst?***

A. Because it saw a lolly pop!

***Q. Why did it take the monster ten months to finish a book?***

A. Because he wasn't very hungry.

***Q. How much do pirates pay for their earrings?***

A. Buccaneer

***Q. When is a car not a car?***

A. When it turns into a garage.

***Q. If Mr. and Mrs. Bigger had a baby, who would be the biggest of the three?***

A. The baby, because he's a little Bigger!

***Q. What did the carpet say to the floor?***

A. "You go ahead I'll cover you!"

***Q. Why did the one-handed man cross the road?***

A. He wanted to get to the second-hand shop!

***Q. What flower grows on your face?***

A. Tulips

***Q. What is a computer's favorite dance?***

A. Disk-o

***Q. Why did the little boy put lipstick on his head?***

A. He wanted to make up his mind!

***Q. What kind of ship never sinks?***

A. Friendship!

***Q. What did the pencil sharpener say to the pencil?***

A. Stop going in circles and get to the point!

***Q. How do you make a hotdog stand?***

A. Steal its chair!

*- From Tharshia Ravindrakumaran(Age 11)*

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| E | M | O | E | N | I | L | M | A | P |
| K | A | O | D | E | L | J | E | U | A |
| I | N | R | S | M | P | E | A | R | R |
| W | G | D | V | A | P | P | L | E | F |
| I | O | O | R | A | N | G | E | T | N |
| G | E | Q | Y | P | E | A | C | H | Z |
| A | I | U | W | S | O | H | I | B | N |
| J | E | U | O | P | C | X | T | U | K |
| A | R | S | O | P | C | X | T | U | K |
| L | M | R | D | V | F | T | N | G | U |

**Hidden Words:**
**Subject: Healthy Fruits**
Apple, Pear, Peach, Orange, Mango, Kiwi

*Submitted by:*
***Meran Annalingam***

## SPECIAL COMPETITION!!!

Hello! Welcome to Orupaper's Special Competition which will be run by Rishiyan Ravindrakumaran. This competition will have 10 General Knowledge Questions in each paper for the next 10 issues. Over the next 10 issues (100 Questions) the person who answered the most correct answer will win prizes. The Prizes are:

**1st 7" Portable DVD Player**

**2nd 40GB MP3 Player**

**3rd** Two PC Webcam (With microphone)

To participate just e.mail the answer to kids@orupaper.com or send the answers to:

**ORUPAPER (UK)**

45'B' Crusoe Road , Mitcham , CR4 3LJ

**ORUPAPER (CANADA)**

230-55 Nugget Avenue, Scarborough ON, M1S 3L1

**The questions for this issue will be:**

**1) As whom, is Subramanya Bharathy better known as?**

**2) What do Christians believe Jesus to be and what do they refer him as ?**

**3) Which famous architect/ designer invented The Rolling Bridge in London?**

**4) Which country's island is mountanious, and many are volcanic, including the highest peak, Mount Fuji ?**

**5) What are the four great inventions of ancient China?**

**6) During the Roamn Empire times, what was Julius Caesar ?**

**7) What are the two main streams of Indian classical music ?**

**8) Which mammal is part of the Felidae family, and it is also one of the four big cats ?**

**9) What is Prince Harry in the Blues and Royals regiment of the Household Cavalry of the British Army ?**

**10) What do the Western World celebrate on the night of October 31st ?**

**GOOD LUCK KIDS!!!!**..in answering these ten wacking questions, and send them in by **01/11/06** Wednesday.......

**YOU** could be the one of the **WINNERS**, in winning one of our three prices!!!

## The Swimming Rap

*Back stroke, front stroke*
*Don't worry you won't choke*
*Froggy Legs, Butterfly*
*C'mon get wet not dry!*

*Dive in*
*Don't worry this takes a sec not a min*
*Do yourself justice, this is ain't a sin*

*Push the water away from you*
*You'll be an expert in not time if you do*
*Give it a go, try your best*
*Then you'll be better than the rest*

*Get out of the pool, lesson over*
*Next time I'll swim as fast as a Mercedes or a Rover*
*Put al your uniform on*
*On the coach, then we're gone*

*My eyes are red cos' of chloride*
*Next time you'll be electrified*
*By my swimming*
*I'll get brighter, not dimming*

*You better be aware of my swimming skills*
*Cos if you're not*
*You'll*
*Be*
*Thrilled*

Composer's note: I wrote this rap because firstly , as I'm in Year 6 , on Thursday I go swimming with my class. Second of all this was my homework and I thought I'd put on the paper.

*- From Cheran Gobiratnam ( 10 )*

## The Courage

*The*
*The courage*
*The courage to*
*The courage to stand*
*The courage to stand up*
*The courage to stand up for*
*The courage to stand up for what's*
*The courage to stand up for what's right*

*The courage*
*To ignore any offence rather than use your fists*
*The courage*
*To let no one change your mind*

*The courage*
*To stick with your first decision*
*The courage*
*To let no-one influence your choices*

*The courage*
*To have a pure mind*
*The courage*
*To stick by your mate*

*The courage*
*To tell the truth*
*The courage*
*To go for what's right*

*The courage*
*To fight your own battles*
*The courage*
*To admit your mistakes*

*The courage*
*To be yourself*
*The courage*
*To spur your team on when you're losing*

*The courage*
*To raise a smile when things are down*
*The courage*
*To say sorry and not frown*

*The courage*
*To not cry over spilt milk*
*The courage*
*To not be afraid*

*The courage*
*To stand up tall*
*The courage*
*To face the task the lies ahead of you*

***From Cheran Gobiratnam (Age: 10)***

# News

1. A student from Devon has cracked a code, which bamboozled NASA for 40 years. The 27-year old broke the code in extraordinary fashion; the code consisted of 19,342,813,113,834,066,795,298,816 digits. But the impressive Cen Jung Tjhai did get a little help from 1,500 computers.

2. Snooker star Paul Hunter lost his fight against cancer. The Yorkshire-man won the Welsh open at an early age of 19. The Englishman was full of promise and won many titles, which was another Welsh Open, 3 Masters' and a British open. Despite finding out he was diagnosed with cancer in 2005, he kept on playing: his form was worrying though. He only picked up one victory and admitted to severe back pain. But, he should be remembered for the best things of his life including comebacks against "The Rocket" Ronnie O' Sullivan, Fergal O'Brien and Mark Williams. Many tributes were sent to him, this one from Ken Doherty touched many hearts. "We've lost a great character, champion and a great friend.


'WHITE PIGEON'

12 இருக்கைகள் கொண்ட புதிய வாகனம் வாடகைக்கு விடப்படும்.

வாடகை விபரம்:
ஒரு நாள் £80.00
வார இறுதி நாட்கள் £150.00
ஒரு கிழமை £400.00



தொடர்புகளுக்கு:
வெண்புறா 020 8672 4100

Graphic Design for Print
Web Design & Hosting
Brands & Ad Campaigns
20 Years Experience

Enhance the image of your company and your products..
Call us today
07780978027

BoseDesign
www.bosedesign.com

Accounts preparation, Self Assessment,VAT & PAYE
Tax Planning, Mortgages and Business finance

An efficient, practical service for small to medium size companies, partnership and sole Traders.

with over 20 years experience in public practice

VASAN & COMPANY
Auditors & Accountants

Tel: 020 8778 8666 Fax: 020 8778 8999
43 Anerley Road, London SE19 2AS
email: info@ajaccountancy.co.uk | web: www.ajaccountancy.co.uk

MORTGAGE PLUS London Ltd

Mortagages Tailormade for you
Specalist in CCJ Default Cases

S.Kaul
Tel: 020 8571 2570
07710 150 713
81 South Road, Southall,
Middx UB1 1SQ

Happy Diwali

Euro Travels & Tours Ltd.
Travel Agent for Worldwide

Contact அருள்தாஸ்
Phone: 020 8465 9666 Fax: 020 8465 9888
020 8465 9491

11B Loampit Vale, Lewisham, London, SE13 7TG.

Meera Arnold & Co.
pay roll
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

# அன்புள்ள உடன் பிறப்புகளுக்கு!



உங்களது என்னைப் பற்றிய பார்வை கண்டேன். ஆனந்தம் கொண்டேன். ஆண்டாளின் கோபத்துடன் கூடிய காதலைப் போல, எங்கள் திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள ஒரு பதினெட்டு வயது கிராம நங்கையின் அரசியல் விளக்க உரை போல மிக ஆழ்ந்ததாகவும், பரந்ததாகவும் இருந்தது உங்கள் பார்வை. அந்திம காலத்தைத் தொட்டு விட்ட ஒரு கிழவனை இவ்வளவு பெரிதுபடுத்தி ஒரு முழுப் பக்கம் பாராட்டுத் தெரிவித்ததற்கு நன்றி.

ஈழத்துப் பூதத் தேவனாரின் வாரிசுகளாகிய நீங்கள் விஞ்ஞானம் அரசியல் பகுத்தறிவும் கூடிய ஐரோப்பா மற்றும் அமெரிக்கக் கண்டங்களில் வாழ்கிறீர்கள். சுமார் பத்து இலட்சம் வரையான நீங்கள் கடும் உழைப்பாளிகள் எனவும் முதலீட்டாளர்கள் எனவும் எனது மைந்தன் ஒருவன் அண்மையில் தெரிவித்தான். உங்களில் பலர் அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், வணிகம், மருத்துவம் போன்ற துறைகளில் உலகப் புகழ் பெற்ற கலாசாலைகளில் பயின்றும் பயிற்றுவித்தும் வருவதாகவும் அறிகிறேன்.

தென்னாசிய யூதர்! என்று சொல்லக்கூடிய அளவுக்கு நீங்கள் குடிபுகுந்த நாடுகளில் பெயரெடுத்து வருவதாகவும் சொல்கிறார்கள். உங்களது தம்பிகள், தங்கைகள் ஈழப் போர்க்களத்தில் புதிய இராணுவ புலனாய்வு உத்திகளைப் பொறிகளைச் சமைத்து வருகிறார்கள். உங்களது உறவுகளை உறுதியின் உறைவிடம் என்று இங்கே பலரும் நம்புகிறார்கள்.

இப்படியாக அகலாங்கு நெட்டாங்குகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நாடாக, இனக் குழுமமாக உங்களைத் தான் நினைத்து விட்டேன். இப்படி நினைத்து விட்டதால் உங்களைப் பற்றி நான் பெரிதாகக் கவலைப்படவில்லை. நீங்கள் இன்று வரை போராடுவது உங்களுடைய சொந்த அரசியல், பொருளாதார, இராணுவக் கால்களில் நின்று முதுகெலும்பை நிமிர்த்தி

உங்கள் வருங்காலச் சந்ததிகளுக்கு அறிவுச் சூரியனைக் காட்ட என்றும் நினைத்து விட்டேன். இப்பொழுதுதான் நான் விட்ட தவறை உணர்கிறேன். நீங்கள் பெருந்தன்மை மிக்கவர்கள்.

என்னதான் நீங்கள் சொன்னாலும், செய்தாலும் பாசம் மிக்கவர்கள் மார்க்சிசம் படித்தாலும் சரி, திறந்த பொருளாதாரம், ஆராய்ச்சி விஞ்ஞானம் என்று பட்டம் எடுத்தாலும் சரி, நீங்கள் கல் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய தமிழரே.

உங்கள் புகலிடங்களிலே அறிவு, விஞ்ஞான, பொருளாதார கலாசாலைகள் ஆயிரம் இருப்பினும் அவற்றில் ஒன்றைக் கூட பிரதிபண்ணாமல் சிதம்பரத்துப் பார்ப் பனனைக் கூட்டி வந்து கோயில் கட்டும் ஆழ்ந்த ஞானிகள். அப்பார்ப்பனர்கள் வடமொழியில் ஆண்டவனை வேண்டும் போது அம்மொழி விளங்கி என்பு உருகுபவர்கள்.

இப்படியான பெருந்தகைகள் ஒருவனைப் பார்த்து நீ ஒரு தூசு, மூன்றாம் தர அரசியல் வாதி, அரசியல் பிரக்ஞை இல்லாத முட்டாள், அதிகாரத்துக்காக விலைபோகும் அரசியல் வேசி என்று திட்டினால் தகும் என்பதே என் கருத்து. ஏனென்றால் நீங்கள் ஆராய்ந்து அறிந்து தான் அப்படிக் கூறி இருப்பீர்கள்.

தமிழ்நாட்டு அரசியல் வேசித் தனத்தால் கடந்த ஐம்பது ஆண்டுகளில் நிகழ்ந்த கல்விப் புரட்சியோ, பசுமைப் புரட்சியோ அல்லது இலட்சக்கணக்கான தாழ்த்திய மக்கள் முன்னேறியதோ ஒரு முக்கியமான விடயம் இல்லைத்தான்.

சென்னையில் தயாரிக்கப்படும் மோட்டார் வண்டி கல்கத்தாவில் இறக்குமதி வரி இல்லாமல் விற்கப்படுவதோ தமிழ்நாட்டுச் செட்டிகளின் வங்கிகள் குமரி முதல் இமயம் வரை வட்டி வாங்குவதோ ஐம்பது வருடத்துக்கு முன்னர் தீண்டத் தகாதவர் என்று ஒதுக்கப் பட்ட நாடார்கள் இன்று உலகம் பூராக மருத்துவர்களாக வலம் வருவதோ திறந்த பொருளாதாரக் கொள்கை மையங்களில் குடியிருந்து ஐரோப்பிய ஒன்றிய கடவுச்சீட்டுகளில் வலம் வரும் அறிஞர்களாகிய உங்களுக்கு ஒரு பெரிய புராணமாகத் தெரிய வாய்ப்பில்லை என்று நினைக்கிறேன்.

ஆறு கோடித் தமிழர்களின் உழைப்பை, பண்டங்களை நூறு கோடி இந்தியர்களுக்கு எதுவித கட்டுப்பாடும் இல்லாமல் எல்லைகள் இல்லாமல் வரிகள் இல்லாமல் ஏற்றுமதி செய்து அந்த வருமானத்தில் எங்களது வாழ்க்கைத் தரத்தை, அறிவை, பொருளாதாரத்தை, அரசியற் பலத்தை உயர்த்த நினைப்பது அரசியல் வேசித்தனமே தவிர வேறில்லை. ஆக நான் திருந்துவதற்கு முயற்சிக்கின்றேன்.

உங்களது அரசியல், பொருளாதார, அறிவியல் ஞானங்கள் மற்றும் தமிழன் தேசியம், இனப்பற்று, மொழிப்பற்று என்பன சிங்களவன் அடிக்காமலே வந்தது என்பதால் உங்கள் முன் குறுகி நிற்கும் கிழவன்.

*- மு.க.*

## தேசிய விடுதலைக்கான அங்கீகாரம் என்பது...!

ஆதிக்கவாத
அழுக்குத் தேமலை
பரவவிடாது தடுத்ததை
குற்றமென்று கூடி முடிவெடுத்திருக்கிறது
உலகம்.
எங்களின் அழுகுரல்
அவர்களின் செவிகளைச்
சேர்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே
அடைத்துக் கொண்டார்கள் தாள்ப்பாளை..!
இந்த முடிவுகளை
எண்ணி
யாரும் ஆச்சரியப் படப்போவதில்லை
சூரிய உதயத்தையும் அத்தமனைத்தையும்
கட்டுப்படுத்த
நீங்களிட்ட சதிகளிலே இதுவும் ஒன்றே!
பொய்களுக்கு
தங்கமுலாம் புசுவதே
உங்களது தொழில்.
அரவாணிகளை அலங்கரித்து
அழகிகளாகக் காட்டும்
உத்தி இது ...!
காற்றிடம்
அனுமதி வாங்கிக் கொண்டு
யாரும் சுவாசிக்க முடியாது
தேசிய விடுதலைக்கான
உங்களின் அங்கீகாரம் என்பது
மாசி மாதத்து
முப்பதாம் நாளைப் போன்றதே ...?

*— மட்டுவில் ஞானக்குமாரன். (யேர்மனி)*


**இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்**


ஒலி அமைப்பே நிகழ்வுகளை மெருகூட்டும் மூலாதாரம். சிறந்த முறையில் ஒலி அமைப்பு (DJ) சேவை மற்றும் தரமான கரயோக்கி (Karaoke) இன்னும் பல சேவைகளை வழங்கும் முதன்மையான நிறுவனம்.

ஐரோப்பா முழுவதிலும் சகல விதமான நிகழ்வுகளிற்கும் தரமான இனை வழங்குவதில் முன்னணிவகிக்கும் ஸ்தாபனம்.

குறைந்த கட்டணம்! நிறைந்த சேவை !

**திருமண வைபவங்களா?**
**விருந்துபசாரா நிகழ்வுகளா?**
**கலை நிகழ்வுகளா?**
**இசை நிகழ்வுகளா?**
**எதுவானாலும் ஞாபகத்திற்கு வர வேண்டிய பெயர்**





**ANCELIN**
**ENTERTAINMENT**

Contact: DJ JOE
0044 (0) 845 391 8276
0044 (0) 7958 308 037
e-mail: ancelinentertainment@hotmail.co.uk
web: ancelin-entertainment.co.uk

**இந்த விளம்பரத்தை கொண்டு வருபவருக்கு 10% தள்ளுபடி உண்டு**


**POS TECH**

POS TECH LTD
EPOS SOLUSTION
020 8873 1710



**RETAILS TILLS**
**RESTAURANTS KIT**
**NEWS ROUND**

- TOUCH SCREEN
- STOCK CONTROL
- PROMOTIONS & OFFERS
- SHELF LABELS
- SPECIAL 'Z' REPORT
- ACCOUNT CUSTOMERS
- ACCESS FROM HOME
- FREE 50,000 ITEM LIST
- STAFF SECURITY
- LINK WITH SAGE LINE 50

TOUCH SCREEN TILL £1600
IBM PC BASE TILL £900

NISA OCS LINK/ C CARD LINK
PAY POINT/ PAYZONE LINKS



**020 8873 1710**

* FREE SUPPORT * FREE BARCODE PRINTER
* INTEREST FREE PAYMENTS OPTIONS
* FREE LASER PRINTER

* LIMITED OFFERS



***PLANNING A PARTY FOR 20/160 PEOPLE?***

*Superb new venue available in the Wembley/Harrow area.*

இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

*Ring* **020 8904 8581** *(mornings)*
*or email: wendy.farrell@bwps.org*

*Easy parking*

PLANET talk INSTANT



**Happy Diwali**

Call
**Sri Lanka** only **6p**/min
Including Mobiles
**0871 605 0011**

✓ No account ✓ No Credit card ✓ Billed per second by BT ✓ Inc. Mobiles

**India** only **5p**/min
Including Mobiles
**0844 550 0011**

**Terms & Conditions**
Calls are billed at your telecom providers 0844 & 0871 rates. To find out the cost of calling from a provider other than BT, contact your service provider directly. Your service provider may have a minimum call or connection charge. Calling subject to availability. Calls are charged from the time of connection to the Planet Talk Instant service. If calling from a mobile phone remember only press the call/send button after dialling the access number not again after dialling the destination. Terms and conditions apply and are at www.planettalkinstant.com. Use of the service will be deemed to be an agreement to allow relevant marketing of telecom services to your telephone number. If you wish to not receive any marketing, you can deregister at www.planettalkinstant.com

# Sarashwathy Bavans

High Quality Pure Vegetarian Restaurant

* 25 Variety of Dosas
* 20 Variety of Starters
* Fresh Juices
* Interesting Set Meals

இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்





**Wembley Branch**
549 High Road
Wembley
Middlesex, HA0 2DJ
Tel: 020 8902 1515

Opening Hours
12 noon to 11pm

**Liquor Served**



**Tooting Branch**
70 Tooting High Street,
Tooting
London SW17 0RN
Tel 020 8682 4242

Opening Hours
9am to 11pm

**Breakfast Buffet**
9am to 11am
(6 days except Tuesday) £2.95
* Dosa * Idly * Vadai * Sweetpongal
* One more Special







www.sarashwathy.com

**WAITERS WAITRESS WANTED**



For both Branches. ***Contact:*** **020 8902 1515 / 020 8682 4242**
or forward your CV to the above address



Chennai Dosa PURE VEGETARIAN

FINEST | SOUTH | INDIAN | RESTAURANT | CHAIN

EAST HAM • MANOR PARK • CROYDON • WEMBLEY

**ChennaiDosa Pure Vegetarian**

# Now open!

3 Ealing Road, Wembley, Middlesex HA0 2AA




## Finest South Indian Restaurant chain

We cordially invite you with your family & friends to **ChennaiDosa Pure Vegetarian at Wembley,** the finest South Indian and Sri Lankan restaurant.

We would like to take this opportunity to express our gratitude and appreciation to all our customers.

Highest number of **dosa & idly sellers** in Europe

**Fastest growing,** South Indian & Sri Lankan restaurant chain in Europe

Quality food at **incredibly low prices**



THE 6 FOOT FAMILY DOSA

**353 High Street North**
Manor Park
London, E12 6PQ
T: +44 (0)20 8586 7729
F: +44 (0)20 8586 8494
E: sales@chennaidosa.com

**339 High Street North**
Manor Park
London, E12 6PQ
T: +44 (0)20 8470 6566
F: +44 (0)20 8821 9194
E: sales@chennaidosa.com

**177 High Street North**
East Ham
London E6 1JB
T: +44 (0)20 8552 2430
E: sales@chennaidosa.com

**239-241 London Road**
West Croydon
Surrey CR0 2RL
T: +44 (0)20 8665 9192
F: +44 (0)20 8665 1070
E: sales@chennaidosa.com

**529 High Road**
Wembley
Middlesex HA0 2DH
T: +44 (0)20 8782 2222
F: +44 (0)20 8782 8822

design & branding strasto.co.uk / 07834318208

ALL SERVICES UNDER ONE ROOF

# UPSLINKK

**Financial Advisers * Mortgage Brokers * Property Sellers * Property Developers**

தமிழர்களுக்கான ஒரே ஸ்தாபனம்

லண்டனில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் தேவையான Mortgage வசதிகளை குறைந்த Deposit உடனும் குறைந்த வட்டியுடனும் குறுகிய காலத்தில் உடன் செய்து கொடுப்பதுடன் Property development வீடுகள், கடைகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் வாங்கி விற்றல் வெளிநாட்டு முதலீடுகள் (Foreign investment) ஆகியவற்றுக்கு ஆலோசனைகளை வழங்குவதுடன் அதற்கான நிதி உதவிகளை பெற்றுத் தந்தும் உதவுகிறார்கள். மேலும்,

Cyprus இல் Upslinkk Group இன் புதிய development மூலம் மக்களுக்கு குறைந்த Deposit இலும் குறைந்த வட்டியிலும் freehold properties ஐ வாங்கி கொடுப்பதன் மூலம் அதற்கான Rent Guarantee Scheme இனையும் ஒழுங்கு செய்து ஒரு வருடத்துக்குள் கூடுதலான இலாபத்தை பெற்றுக் கொடுக்கவும் வாய்ப்பளிக்கிறார்கள். அத்துடன்

Upslinkk Group இனர் வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் குறுகிய, நீண்டகாலம் தங்குவதற்கான வசதிகளை Eastham இலுள்ள தமது Upslinkk Inn மூலம் செய்து தருகிறார்கள்.

OVERSEAS OFFICES: DUBAI CYPRUS

| | | | |
|---|---|---|---|
| 113 Loampit Vale<br>Lewisham<br>London<br>SE13 7TG | 228 Church Lane<br>Kingsbury<br>London<br>NW9 8SN | 241 D High Street<br>North<br>Eastham<br>London E12 6SJ | 185 Archway Road<br>Highgate<br>London<br>N6 5BN |
| T: 020 8694 6600<br>F: 020 8694 0220 | T: 020 8200 6700<br>F: 020 8200 9596 | T: 020 8472 2222<br>F: 020 8470 4400 | T: 020 8348 5557<br>F: 020 8348 7787 |

**Tel : 020 8472 2222 / 020 8200 6700**

E-mail: info@upslinkk.net / Web: www.upslinkk.net

Your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loans secured on it.

## வேலைவாய்ப்பு!

### Hotel Manager

* நிர்வாகத்துறையிலும், மேற்பார்வையிலும் குறைந்தது 3 வருட அனுபவம், Hotel Management Diploma உடையவரும், மிகத் திறமையான ஆளுமைத் தகுதி உடையவர்களும்

* கணினித் தேர்ச்சி பெற்றவர்களும் ( MS Office & other Hotel Management Packages)

* விமானச்சீட்டுக்களை விற்பனை செய்வதிலும் Travel & Tourism அலுவலகங்களில் வேலை செய்வதிலும் அனுபவம் உள்ளவர்களும்


இவ்வேலைக்கு தகுதியுடையவர்கள்.

தமிழ், சிங்களம், ஹிந்தி மொழி பேசக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Send your Cv to
Director
UPSLINKK INN
206-208 High Street North
Eastham E6 2JA



For delicious recipes,
a pinch of authenticity
MATHANGI
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
புதிதானதும் தரம் சிறந்ததுமான சகல
மளிகைப் பொருட்கள், சரக்கு வகைகள் மற்றும்
உடனடியாக உண்ணக்கூடிய உணவுகள்
Ready – To – Eat
Frozen Food Products
அப்பம், இடியப்பம், ரொட்டி, பரோட்டா, கோதம்பைரொட்டி,
மரவள்ளிக்கிழங்கு, மசாலா தோசை, இட்லி, சப்பாத்தி இன்னும் பல...
Samudra
(தரமான கடல் உணவுகள்)
Sea Foods
Importer and Distributor :
Sumudra Sea Foods, Mathangi products, Rabbena products, Larich products, Priya products and MD products
Spiceway Ltd
Unit 4, College Fields, Prince Georges Road
Merton, London SW19 2PX
Tel: 020 8685 1122, 020 8685 1133
Fax: 020 8685 1144
eM: spicewayltd@hotmail.com
Website: www.spicewayltd.co.uk




**IOM • OIM**

IOM International Organization for Migration

21 Westminster Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
Tel: 020 7233 0001 Fax: 020 7233 3001
www.iomlondon.org


இவ் இலங்கையர் எங்களுக்கு தனது கதையைச் சொன்னார். தானாக விரும்பி தாய்நாடு சென்று மீன்பிடி தொழில் செய்வதற்கு எங்கள் உதவியைப் பெற்றிருந்தார். ஆனால் ஆழிப்பேரலை (Tsunami) காரணமாக அவர் தொழில் அழிக்கப்பட்டது. எங்கள் (IOM) பண உதவியுடன் திரும்பவும் தன் தொழிலை ஆரம்பித்து தற்போது நல்ல நிலையில் உள்ளார்.

## தாய்நாடு திரும்பும் யோசனை உண்டோ?

**உடன் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்!**
நீங்கள் நன்மை பெறும் வழியில் அனைத்து உதவிகளும் செய்து தர ஆயத்தமாய் உள்ளோம்.

**'கை கொடுக்க காத்திருக்கின்றோம்' நாங்கள், IOM**
ஏற்கனவே நீங்கள் அகதி அந்தஸ்தை கோரி
நிராகரிக்கப்பட்டவராக இருந்தால், நீங்கள் விரும்பினால்
உங்களுக்கு தாய்நாட்டு பயண ஒழுங்குகளை மேற்கொள்வோம்.

உங்கள் விமானச்சீட்டிற்கான செலவுகள், இந்நாட்டு விமான நிலையத்திலிருந்து உங்கள் நாடு வீடு வரை உள்ள செலவுகள் போன்றவற்றைப் பொறுப்பேற்கிறோம்.


உங்கள் பயணத்திற்குத் தேவையான அனுமதிச் சீட்டை பெறுவதற்கு வேண்டிய வழிமுறைகள், பயணத்தின் போது இந்நாட்டிலும் உங்கள் நாட்டிலும் தேவைப்படும் உதவிகள், பயணத்தின் போது மருத்துவ உதவிகள் போன்றவற்றிற்கான ஒழுங்கு முறைகளை மேற்கொள்வோம்.

2006 ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன் நீங்களாகவே வீடு திரும்ப விரும்பினால் உங்களுக்கும், உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும்
**£3000** வீதம் கிடைக்க தகுதியுடையவர்களாவீர்கள். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்! இலவச தொலைபேசி

**0800 783 2332**

*குறிப்பு: இச்சலுகை 2006க்கு முதல் அகதி விண்ணப்பம் செய்தவர்களுக்கு மட்டுமே*

# TEENS பேப்பர்





## Celebs Who Claim They're Green but Guzzle Gas

By TMZ Staff

Hybrid cars are all the rage in Hollywood. Celebrities drive them like they're a badge of honor. You save a few gallons of gas, you save the planet. Right? Well, not when you hop on a private jet and burn enough fuel to propel NASCAR through 2050.

Of course, the stars need to go here and there. The location shoots, the fabulous vacations, etc. But that's why God created United Airlines. G-IV's, on the other hand, were created in the image of precious celebs.



*Julia Roberts and her Prius*

### Julia Roberts

**On the ground:** Roberts drives a Prius, which gets (at best) 60 miles to the gallon, shaving 30 miles off a normal car's m.p.g.

**In the air:** Chicago/LA, 1,749 miles in a private jet, the route she took with Rupert Everett while shooting "My Best Friend's Wedding."

**Gas guzzled:** 2,100 gallons of jet fuel.

**Prius Penance:** Julia would have to drive 30,000 miles, or roughly once around the earth and then some to even out her consumption in the air.

**So Julia says:** No word yet from Julia's rep.

### Jennifer Lopez

**On the ground:** J-Lo tools around in her 60 miles-per-gallon Prius.

**In the air:** LA /New York, 2,475 miles in a private jet. Lopez was actually sued by a private jet company for allegedly skipping out on the bill, though she says it's all a misunderstanding and she was not supposed to be billed.

**Gas guzzled:** 2,750 gallons of jet fuel.

**Prius penance:** She'd have to drive 45,000 miles, and that's a lot longer for Jenny than just going down the block. It's actually more like twice around the earth.

**So Jennifer says:** There was no comment from Lopez's rep.



*George Clooney and his electric car*

### George Clooney

**On the ground:** George favors a Tango, an electric car that gets a whopping 135 miles to the charge.

In the air: Los Angeles/Tokyo, 5500 miles in a private jet.

**Gas guzzled:** 7,000 gallons of jet fuel.

**Electric shocker:** Even with his super-saver Tango, he'll have to drive over 57 Oceans -- Pacific Oceans to break even.

**So George says:** Clooney's rep, publicist Stan Rosenfield, tells TMZ, "You clearly have no understanding of certain people's need for private transport," and points out that Clooney often has "no control" over his travel schedule.

### Brad Pitt

**On the ground:** Eco-champ Brad is yet another Prius-lover, and he reportedly has several hybrids in his stable.

**In the air:** Los Angeles/Namibia, 9,400 miles in a private jet.

**Gas guzzled:** 11,000 gallons of jet fuel.

**Prius penance:** Brad burned enough fuel to take a Prius to the moon.

**So Brad says:** Pitt didn't have any comment. His rep tells TMZ that Pitt is out of the country.

*Leo fueling his Prius*



### And the true-blue Green Award goes to ... Leo DiCaprio.

**On the ground:** Leo drives a Toyota Prius

**In the air:** Leo flies just like us folk -- commercial, unless he positively must fly private because of scheduling.

**Prius penance:** None.

## Seeing is believing...Or, it isn't.

By: Tharmila Shabanathan



Computers and high-speed communication networks are transforming our world dramatically, and in this information age there are many, like my parents and even I believe in reincarnation, that is life after death, and even in ghosts. Well, you might ask why I didn't include 'God' in the list and it is because a lot of us believe in God, depending on our religion and a force which is way beyond humans capabilities and man made machines. God is described by some to be a force that controls us overall.

You wouldn't believe the stories people came up with, in the old days (not very old). However where we live now, the believers are becoming less and less and the number of people believing in God is decreasing. Yes, think of those hundreds of people in Temple functions and Pooja's, but you should not be fooled by the number of people that turn up. Yes they turn up, but many have very little faith in God. There is a good majority that go just to pray with having God and only God in mind.

I believe I'm going off the track here. Going back to what I was going to tell you about. Just a few months ago, my father told me about an incident that happened in our house before we bought it. He told me about the ex-owner (an old lady) of the house who died in the same room I was living in and her kids did not find out until a week after her death. My dad always told me that the lady's spirit still exists in that room and since then I have felt a presence there. It was only after what I heard that I started getting scared and finally left that room. Then we decided to do 'Shanthi Pooja' which was meant to get rid of all the bad things in and around the house and to surround the house with God's spirits.

The day came when the Pooja was to take place, and my parents and I got the required items ready and soon the priest arrived and set up the place which was to be used for the Pooja. The room had some equipment which made it hard to find a wide big space but we managed to put everything in place and began the Pooja. We all sat down and after an hour later, I was told to get up to do the process of putting the food we cooked in a burning smoke of fire which made the fire alarm go off. At the end, the food was taken down to the garden and burnt fully which is a way of saying that all bad spirits were burnt away.

The day had ended with smoke in the house and not to mention getting burnt on my leg by the big flames which I managed to survive from. I went into my room, with the piece of mind knowing that all the bad spirits or ghosts were chased or burnt away. But really how would I know that what the priest did really worked. How do I confirm it? Well there's isn't any way of confirming or reassuring yourself. It's about an individual's belief. From a small age I grew up with stories of God (Hindu Gods mainly) and the miracles that occurs in our own village. These stories changed the way I feel about God, in a way it was these stories that still make me want to believe in what I believe in.

If we believe in something so much, it's possible that it appears to be true to us and us only because we believe in it! So believe!


CASH & CARRY

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் நாடவேண்டிய இடம்.







Tel: 020 8952 66 55, 020 8381 3442
Fax: 020 8905 7546

MARUTHI
15 - 17 Queensbury Station Parade
Queensbury,
HA8 5NR

# Jawed Karim, a co-founder of YouTube



By Jim Hopkins
USA TODAY

Jawed Karim doesn't begrudge the spotlight on YouTube co-founders Chad Hurley and Steve Chen this week after they negotiated the video website's sale to Google for about $1.7 billion.

After all, Hurley and Chen took the germ of an idea — famously hatched at a San Francisco dinner party — and turned it into a Silicon Valley company that became a global phenomenon in less than a year.

Still, Karim, 27, would like more people to know that he was YouTube's third co-founder — and, he says, the guy who first suggested the idea that became the company. "It took the three of us," he said.

Karim says his idea for what became YouTube sprang from two very different events in 2004: Janet Jackson's "wardrobe malfunction," during a Super Bowl show, and the Asian tsunami.

YouTube fizzled in an early version, Karim says: A dating site called Tune In Hook Up drew little interest. The founders later developed the current site, now broadcasting 100 million short videos daily on myriad subjects.

YouTube says Karim was part of the "core" team that developed the idea for the company and notes that he is listed as one of three founders on its website. "There's no question about that," spokeswoman Julie Supan says.

Karim is one of the company's biggest stockholders and is in line to get millions of dollars in Google shares when the deal announced Monday closes. He declined to reveal his stake, or the stakes of the other founders and venture-capital investors at Sequoia Capital.

Karim grew up in West Germany, and his family immigrated to Minnesota when Karim started high school. His Bangladeshi father is a chemist at 3M, and his German mother is a biochemistry research professor at the University of Minnesota. Karim got his bachelor's in computer science and engineering in 2004 at the University of Illinois at Urbana-Champaign.

Hurley, 29, Chen, 28, and Karim met as early employees at PayPal, the payment service sold to eBay in 2002. The three, newly rich after leaving PayPal, talked about a start-up of their own, possibly a database venture, Karim says.

Then, early last year, Karim recalled the difficulty involved in finding and watching videos online of Jackson accidentally baring her breast during the Super Bowl show. The same was true with the many amateur videos made of that winter's devastating tsunami.

Karim says he proposed to Hurley and Chen that they create a video-sharing site. "I thought it was a good idea," Karim says.

The three agreed within a few days in February, then divided work based on skills: Hurley designed the site's interface and logo. Chen and Karim split technical duties making the site work. They later divided management responsibilities, based on strengths and interests: Hurley became CEO; Chen, chief technology officer.

Karim had already planned to resume computer studies, so he opted out of management and agreed to take a smaller ownership stake than the other two founders. He continued advising YouTube and a growing number of employees — now 67 — as Hurley and Chen took his "little spark" of an idea and turned it into a fire.

"My only interest was in helping the company get off the ground, implementing it, and raising money," he says. Hurley and Chen handled the Google talks; Karim says he signed off on the deal once details were reached.

Now in a two-year master's program, Karim says he's considering another start-up but declines to give details.

For now, he's basking in YouTube's success and its eye-popping sale price. "I definitely thought that this was a possible outcome," he says. "But I didn't think it was the most likely outcome."

# RE: Life Lessons!

By: Samuel Nagaratnam

I read Uma Kumarans article on 'Life lessons' and thought it was a very useful and very true. At the age of 17 or 18 teenagers start going to university without having the slightest knowledge of what problems they might face and what to do in those cases. For those students who live out, the dangers get even worse.

I remember when I first moved out of home, I was only 18 years old and thought only about staying late out in the night and partying. As a boy I was more under pressure to go out with friends and enjoy myself. It wasn't when I reached a point where my work pilled up and it was just too late to do anything about it. I believe that was my first step to falling down my educational ladder. Soon, in the second year I had no motivation or belief in myself that I carried on with late nights, going clubbing, missing lectures. It wasn't after my mother was informed by one of my good friends who, was afraid of my future that I started to get back on track. My mother was the only person I had, after my father died when I was a kid. And she moved in with me and helped me through, yes I missed two years but if it wasn't for my mother and for my best friend I would not be where I am now.

What teenagers don't realise is that, when work loads up, it's even harder to do it, as there's more work than before. We might have done that at school or college, but at Uni. its independent study that really decides your grades. So if you don't take time out to study outside the lecture hours, you're in for a shock when your results come.

As Uma Kumaran stated in her article, as Tamils we should be very proud of our parents. Our parents care for us from the day we are born, to the day we go to school and even after we get married and have children. There affections stay the same how ever old we get. It's this that separates us from the rest of the crowd, our culture!

AIR SAVERS TRAVEL
IATA
We Provide Insurance Service to our customers
We are ATOL bonded for the protection of our clients
Open 7 Days a week all major credit cards accepted
உலகமெல்லாம் பறந்து சென்றுவர.....
நம்பிக்கையான நாணயமுள்ள நல்ல ஏஜென்டுகளை நாடுங்கள்!
AIR SAVERS TRAVEL
90 Leamington Avenue, Morden, Surrey, SM4 4DN
ATOL
Tel: 020 8540 2226
Fax: 020 8540 6131
Mob: 07961 401 260

தரமான சேவை! நியாமான கட்டணம்!
THURAI & CO
ACCOUNTING
Comprehensive Accounting & Tax
◆ Personal Tax
◆ Corporation Tax
◆ Value Added Tax
◆ Capital Tax
◆ Business Advice
Tel: 01865 247 109
9A, Arnold Road, Oxford, OX4 4BH

PERMA
INTERNATIONAL SHIPPING LTD
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
தொடர்புகளுக்கு: சிவம்
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

Workpermits4u
UK Immigration - Workpermits & Visas
Work Permits in IT, accounting, Finance, retail, catering, healthcare, HSMP
Permanant residance, UK Citizenship, marriage applications, domestic workers.
Leave to Remain in UK, leave extensions, immigration forms completed.
Visas for students, spouses, dependent family, working holiday, sole rep visa.
Business immigration : entrepreneurs, investors, UK company formation & management, full accounting, payroll & tax services.
Contact : Raj Ganguly workpermits4u.com,
37 Panton street, (near Piccadilly Circus), London SW1Y 4EA
Tel: 020 7839 0389 / 020 7839 4731 / 07766 828 851
email:workpermits@workpermits4u.com/ www.workpermits4u.com
(division of RKG Consulting Ltd, OISC Registered).

IT PAYS TO ADVERTISE IN ORU PAPER
CALL 020 8640 4604 | 020 8286 9327

# 'வேலையில்லா பட்டதாரி'

துடிப்பு மிக்க வாலிப வயதில் எதிர்காலம் பற்றிய இலக்குகள் எதுவுமின்றி வெறுமையாய்த் திரிவது எத்துணைக் கொடுமையானது என்பதை நான் தெளிவாகத் தெரிந்து கொண்ட காலம் அது.

அக்காலப் பொழுதுகளில் மரியாதைக்குறைவு வீட்டுக்குள்ளேயே தொடங்கிவிடும்.

எல்லோருக்கும் வழங்கப்படும் காலைத் தேனீரை நான் போய் எடுத்துக் குடிக்க வேண்டியிருக்கும்.

உப்புச் சப்பில்லாத வீட்டு வேலைகள் கூடக் கட்டளைகளாய்க் காதில் விழும்.

எனக்குப் பின்னால் பிறந்ததுகள் பலவும் என் சொல்லை துளியும் மதிக்காது. மாறாய் அறிவுரைகள் கூறும்.

வீதியில் இறங்கினாலோ என்னைத் தெரிந்தவர்களின் கிண்டல் கலந்த விசாரிப்புகள். இவர்களுக்குள் கொஞ்சம் நெருக்கமானவர்கள் தங்களின் வீட்டு வேலைகளை செய்யவும் என்னை அழைக்கத் தொடங்கியிருந்தனர்.

ஏதாவது செய்தாக வேண்டும். இந்த நரகச் சூழலில் இருந்து விடுபட்டாக வேண்டும்.

இந்நிலையில்தான் என் தந்தையாரின் அரசியல் நண்பரின் அழைப்பு வந்தது.

என்னைப் பற்றி அப்பா ஏதாவது சொல்லி வைத்திருக்க வேண்டும்.

அவர் அலுவலகத்தில் அவரைச் சந்தித்தேன் சில எதிர்பார்ப்புகளோடு.

அரசியல் தோரணை கலந்த சில விசாரிப்புகளின் பின்,

"வேலை ஒண்டுக்கு ஒழுங்கு செய்யுறன் அதுவரைக்கும் என்ர அலுவலகத்தில வந்து நில்"...

என் சம்மதத்தை எதிர்பார்க்காமல் எழுந்து போய்விட்டார்.

எனக்கு விருப்பம் இல்லையாயினும் சுற்றுப்புறச் சூழலை மனதிற் கொண்டு அவர் அலுவலகத்திற்கு வரத் தொடங்கியிருந்தேன்.

வாழ்வில் அதுவரை அறிந்திராத சமூகத்தின் மற்றுமொரு பக்கம் அப்போதுதான் அறிமுகமாகியது. அரசியல் செயற்பாடுகளின் அரிச்சுவடிகளை அங்குதான் கற்றுக் கொண்டேன்.

அவற்றில் பல எனக்கும் சில சமூகத்திற்கும் ஆரோக்கியமானதாக இருக்கவில்லை. என் வயதிற்கும் அனுபவத்திற்கும் மீறிய வேலைகள் மற்றவர்களால் எனக்கு திணிக்கப்பட்டன.

அதில் ஒன்று, அரசியல் கைதிகள் என இவர்கள் கருதுகின்றவர்களுக்கு நான் உணவு எடுத்துப் போக வேண்டும் சிறைச்சாலைக்கு.

இன்னும் சிலருக்கு சிகரட் வெற்றிலை வாங்கிவர வேண்டும். வேறு சிலருக்கு காதல் கடிதங்களும் பறிமாற வேண்டும்.

எனக்குண்டான இத்தனை நெருக்குவாரங்களும் தந்தையின் அரசியல் நண்பருக்கு தெரியாமலே இருந்தது. அவருக்கு இவற்றைத் தெரியப்படுத்துவதன் மூலம் பலதரப்பட்ட பகைகளையும் நான் சம்பாதித்துக் கொள்ள விரும்பவில்லை. வகையாக மாட்டிக்கொண்டது மட்டும் புரிந்தது.

கரிச்சானின் குஞ்சுகள்

## - இருவத்தியொம்பது -

விரைவில் அங்கிருந்து வெளியேறியாக வேண்டும் என்பதில் மட்டும் உறுதியாக இருந்தேன்.

ஒருநாள் தந்தையாரின் நண்பரைச் சந்திக்க ஒருவர் அங்கு வந்திருந்தார்.

பேச்சுக் கொடுத்தேன்.

எனக்கான மாற்றங்கள் மெல்ல விரியத் தொடங்கின. நான் அங்கிருந்து தப்புவதற்கான வியூகத்தை அவரே வகுத்தார்.

மறுநாளே என் சிறைக்கதவை நானே திறந்தேன்.

எப்படி என்பதை மறு கோலத்தில் காணலாமா?

- கரிச்சான் குஞ்சன்.

வெள்ளி நிலா பால் சரித்து
அங்கு விளையாடும்
வீசுகின்ற காற்றும்
எமை தேடிவிட்டுப் போகும்
பொன்னலரி பூச்சொரிந்து
எம் வரவைப் பார்க்கும்
போகவழி ஏதுமின்றி
கண்ணிரண்டும் வேர்க்கும்.
ஊர்மனைக்குள் வாழ்பவரும்
வேரிழந்த பேர்கள்
ஊனையிட்டுச் சாகிறதாம்
நாம் வளர்ந்த நாய்கள்
நாமெழுந்து போர் புரிந்தால்
நாளையெங்கள் ஊரில்
நம்பியெழு ஊரினுக்குள்
நாம் புகுவோம் தேரில்.
பொங்கியெங்கள் ஊர் புகவே
போர்க்கலவி தூக்குவோம்
போரில் படையை தொலையுமட்டும்
ஊரினுள்ளே தாக்குவோம்
தம்பி பிரபாகரனின்
தானையிலே சேருவோம்
தங்கத் தமிழீழம் வரும் நேரம் வரை
சீறுவோம்.

புதுவை இரத்தினதுரை (1996)

# இயற்கை வைத்தியமும் அதன் பயன்களும்

**அஞ்சலா ஜெகநாதன்**
*(மூலிகை மருத்துவர்)*

*கேள்வி: எனக்கு 40 வயதாகிறது. கடை நடத்தி வருகின்றேன். காலையில் சரியாக சாப்பிடக் கிடைப்பதில்லை. பகலில் சிப்ஸ் அல்லது சிற்றுண்டிகள் தான். இரவில் மட்டும்தான் தாராளமாக சோறு சாப்பிடுகிறேன். ஆனால் எனது உடல் எடையும் பருமனும் அதிகரித்து வருகின்றது. வயிறு பெரிதாகிக்கொண்டே போகிறது. ஏதாவது தீர்வு சொல்வீர்களா? (அன்பழகன், ஐரோப்பா- பெயர் மாற்றப்பட்டுள்ளது)*

பதில்: இந்த விடயத்தில் உண்மையில் உணவுமுறை மாற்றம் மிகவும் முக்கியம் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். ஒரு மனிதனுக்கு காலை உணவு என்பது மி கவும் அத்தியாவசியமானது. உணவைப் பொறுத்தவரை இரண்டு விடயங்கள் முக்கியம். ஒன்று நேரத்துக்கு அதாவது சரியான நேர இடைவெளிகளில் உண்ணுதல். இரண்டாவது சரியான உணவினை உட்கொள்வது. ஏனென்றால் உடலானது தனது குருதியில் வெல்ல அளவை சமப்படுத்திப் பேணுவதற்கு நாம் சரியான நேர இடைவெளி அளவுகளில் உணவு உட்கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

அது மாத்திரமல்லாமல் காபோவைதரேற்று, புரதம், விட்டமின்கள் கனியுப்புக்கள் என்று சகலமும் கொண்ட சம போசாக்குணவாக அது இருப்பதும் அவசியம். வெறும் மாப்பொருள் உணவுகளை மட்டும் உண்பது முறையானதல்ல. பழங்கள், காய்கறிகள், கீரைகள் அளவைக் கூட்டி மாப்பொருள், கொழுப்பு சத்துள்ளவற்றை குறைத்து உண்ண வேண்டும். இரவில் அதிகமான சோறு போன்ற அதிக மாப்பொருள் உணவுகளை உண்ணுவது எடை குறைப்புக்கு உகந்ததல்ல.

உடற்பயிற்சி ஆகக்குறைந்தது வாரத்திற்கு மூன்று தடவை. ஒரு நாளைக்கு அரை மணித்தியாலப்படி ஓடுவது, வேகமான நடை பயன்கொடுக்கும். காலை உணவே ஒருவருக்கு அன்றைய தினம் உடலின் தொழிற்பாட்டுக்கு உரிய சக்தியை கொடுக்கிறது. அதிக வேலைப்பழுவுடன் சாப்பிடவும் நேரம் கிடைக்காத உங்களைப் போன்றவர்கள் ஆகக்குறைந்தது பிரவுண் பிரெட், சாண்ட்விச் அல்லது இரண்டு பழங்களாவது சாப்பிட வேண்டும்.

மதியம் மீண்டும் பழங்கள் அல்லது புரொட்டீன் கொண்ட சிக்கன் சாண்ட்விச் உண்ணலாம். இரவுக்கு மாச்சத்து குறைந்த காய்கறி, புரதம் உணவுகளை அதிகரித்து உண்ணுங்கள். அதோடு மூலிகைகளையும் உட்கொண்டால் சிறப்பான பயன் கிடைக்கும். மூலிகைகளைப் பொறுத்தவரை Artichoke, Garcinia, Google, Kola nuts போன்ற மூலிகைகளையும் குரோமியம் கனியுப்பையும் உட்கொள்வது எடை குறைய உதவும்.

குறிப்பு: குடிபானங்களை தவிர்த்து ஒரு நாளைக்கு 8 குவளை (2lts) தண்ணீர் குடிக்க வேண்டும். பழங்கள்: ஆப்பிள், ஒரேஞ்ச், பியர்ஸ். இறைச்சி: கொழுப்பு நீக்கப்பட்டவை (Lean meats) கோழி இறைச்சி, மீன்

*கேள்வி: நான் ஊரில் இருந்து வந்து 3 வருடங்கள் ஆகின்றன. இங்கு வந்து முதல் வருடம் எனக்கு மாதவிடாய் ஒழுங்காக வந்தது. ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக ஒழுங்காக வருவதில்லை. ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக ஒழுங்காக வருவதில்லை. சிலநேரம் 3 மாதம் 6 மாதம் ஒரு தடவைதான் வருகின்றது. என்ன செய்வது? (மாலதி-ஜேர்மனி)*

பதில்: இது தாய்நாட்டை விட்டு புலம்பெயர்ந்து முற்றிலும் புதிய சுவாத்தியத்தில் புதிய வாழ்க்கையைத் தொடங்கும் எமது பெண்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினை என்றுதான் கூறுவேன்.

சகோதரி உங்களைப் போன்றவர்களில் பலருக்கும் இப்படி நடப்பதற்குக் காரணம் புதுச்சூழல் மாறுபட்ட காலநிலை அல்லது சுவாத்தியம். புதிய வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுக்கும் போது ஏற்படக்கூடிய மனோ அழுத்தங்கள், தனிமை போன்றவை உடலில் ஹோமோன்களின் சமநிலையைக் குழப்பி விடுகின்றன. இதுவே மாதவிடாய் சக்கர ஒழுங்கு பாதிக்கப்படுவதற்கு பிரதான காரணமாக அமைகின்றது. இதனை மீளவும் சமநிலைப்படுத்துவதற்கு மூலிகை மருந்துகளுடன் சேர்த்து உணவில் கோவாக்கீரை, Sprouts புரொக்கலி, கோலிபிளவர் போன்றவற்றை கூடுதலாக உணவில் சேர்த்து Process Carbohydrate ஐ தவிர்க்க வேண்டியது அவசியம்.

மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன், மேலைத்தேய மூலிகை மருத்துவத்தில் பயிற்றப்பட்ட பட்டதாரியாவார். இங்கிலாந்தின் மிகப் பழைய மூலிகை மருத்துவர் சங்கத்தின் அங்கீகாரம் பெற்ற அங்கத்தவர். கடந்த ஒன்பது வருடங்களாக இத்துறையில் அவர் பணியாற்றி வருகின்றார்.

நீங்கள் உங்களுக்குள்ள சந்தேகங்களை சுருக்கமாக எழுதி 'ஒரு பேப்பருக்கு' அனுப்பினால் இனி வரும் இதழ்களில் அவற்றை பதில்களுடன் பிரசுரிக்க வாய்ப்பு ஏற்படும்.



HERBA NATURELLE
London Norbury இல் மூலிகை மருத்துவர்
அஞ்சலா ஜெகநாதனின் இயற்கை மூலிகை மருத்துவ நிலையம்


- தலைமுடி உதிர்வு,
- சொடுகு,
- மயிர்ச்சிதைவு எக்ஸிமா,
- ஆத்மா,
- தோல் வியாதிகள்
- மகப்பேறின்மை ஆண்,
- பெண் உடற்கோளாறுகள்

புதிய அறிமுகம்
சில நோய்களுக்கு வழமையான உணவுகள் காரணமா?
Allergy / Intolerance Test மூலம் ஒவ்வாமை / சகிப்பின்மைக்கு காரணமான உணவைக் கண்டறியலாம்.

Tel: +44 (0) 20 8765 9015 Email: sales@herbanaturelle.com
Web: www.herbanaturelle.com


இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஆரோக்கிய வாழ்வு
மும்மாதமொரு இதழ்
ஆரோக்கிய வாழ்வுக்கு முக்கியமான விபரங்களை உள்ளடக்கியது. வாசித்து, அறிந்து பயன் பெறுவீர். www.herbanaturelle.com ல் பெற்றுக் கொள்ளலாம்.



HERBA NATURELLE
Natural Health Centre,
1410,
London Road,
Norbury
SW 17 4BZ

# பெற்றோரா? மெய்ப்பாதுகாவலர்களா?



அன்புள்ள பெற்றோருக்கு, உங்களுக்கு நிறையத் தடவைகள் சொல்லிச் சொல்லிக் களைச்சுப் போய் நீங்கள் காதிலை வாங்கிக் கொள்ளாததாலை இந்த விசயத்தை பேப்பர் வரைக்கும் கொண்டு வர வேண்டிப் போச்சுது. மன்னிச்சுக் கொள்ளுங்கோ! வழமை போல இதுக்கும் நீங்கள் உங்கள் தலையையோ தோளையோ ஆட்டிவிட்டு மௌனமாகிப் போடாதையுங்கோ. உங்கட மனச்சாட்சியை ஒருக்கா தட்டிப் பாருங்கோ.

நாங்கள் சின்னப் பிள்ளையா இருக்கேக்க எங்களுக்கு நீங்கள் செஞ்சதை நாங்கள் இன்னும் மறக்கேல்ல. தாய்ப்பாசம் தந்தைப் பாசம் அல்லவா? எப்படி மறக்கிறது? இதை ஆயுள் வரைக்கும் நாங்கள் மறக்கமாட்டம்!

ஆனால் இப்பவும் நீங்கள் எங்களை சின்னப் பிள்ளையள் எண்டு நினைக்கிறதை நினைக்கத்தான் எங்கடை நெஞ்சுபொறுக்குதில்லை.

நாலு வயசில எங்களுக்கு சரியா நடக்கத் தெரியாது? வீதியைக் கடக்கத் தெரியாது கையைப் பிடிச்சுக் கொண்டு போனீங்கள்? சரி! செய்ய வேண்டிய கடமை செய்தீங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆறு வயசில ரீயூசனுக்குக் கூட்டிக் கொண்டு போனீங்கள். ஏற்றுக்கொள்கிறோம். பேந்து தமிழ்ப்பள்ளி, நடனம், நாட்டியம் என்று அந்த ரீச்சர் மாறி இந்த ரீச்சர் மாறி எண்டு அங்கை இங்கை கொண்டு போனீங்கள். அந்த வீதியெல்லாம் எந்த எஞ்சினியருக்கும் நினைவிருக்காது ஆனால் நீங்கள் சரியாய் அந்த இடத்திலை கொண்டு போய் விடுவீங்கள் நல்ல விசயம். இப்பிடி எத்தினை எத்தினையோ விசயங்களுக்கு விபரம் புரியாத வயசில எங்களுக்கு உதவி செய்தனீங்கள். எங்களுக்கு வலது கையாய் இடது கையாய் செயற்பட்டனிங்கள். இதை எண்ணும்போதே எங்கள் உள்ளம் பூரிக்கின்றது. இரவு பகலாய் வேலை செய்து. அப்பா வீட்டை வர நீங்கள் வேலைக்குப் போவதும், வீட்டை வந்த அப்பா விறுக்க விறுக்கச் சாப்பிட்டுப் போட்டு எங்களை ரியூசனுக்குக் கூட்டிக் கொண்டு போவதும். எங்களை விட்டுப் போட்டு அது முடியும் வரைக்கும் காருக்குள்ள காத்திருந்து அரை குறை நித்திரை கொள்ளுறதும். இது மட்டுமா சனி ஞாயிறு தினம் எங்களுக்கென்னவோ பள்ளி விடுமுறைதான் ஆனால் உங்களுக்கு ஒரு ஓய்வில்லாத தினம்! தமிழ் படிக்கவேணும், டான்ஸ் ஆடவேண்டும், பாட்டுப் பாட வேண்டும், வயலின் வாசிக்க வேண்டும் எண்டு எங்களை எங்கெங்கெல்லாமோ அழைத்துச்சென்று உங்கள் உடல் நலத்தையும் பாராது ஓடி ஓடித் திரிந்தீர்கள். நினைக்கும்போதே கவலையாக இருக்கு! எங்களுக்காய் கடந்த பதினாறு வருடங்களாய் எவ்வளவு கஸ்ரப்பட்டீங்கள். கலங்குகின்றது எங்கள் கண்கள்.

ஆனால் இப்பவும் எங்களுக்காய் இப்படியெல்லாம் ஏன் செய்கிறீர்கள் எண்டுதான் எங்களுக்கு விளங்கவில்லை. எங்களோடை பள்ளிக்கூடம் வாற பிள்ளையள் எல்லாம் பஸ்சிலயும், சைக்கிள்ளையும் தங்கட பாட்டுக்கு வருகினம் போகினம். ஆனால் நீங்கள் எங்களை வீட்டு வாசல்ல ஏத்தி பள்ளிக்கூட வாசல்ல இறக்குறீங்கள். நீங்கள் வீட்டை சும்மா இருந்தாலும் பறவாயில்லை. இரவு வேலை செய்து போட்டு விடியப்பிறம் வந்து செற்றியில ஒரு மணித்தியாலம் படுத்திருந்திட்டு எங்களை கூட்டிக் கொண்டு போறீங்கள். இந்த வயசில உங்களுக்கு இது தேவைதானா?

சரி உங்கட திருப்திக்காக எங்களைக் கொண்டு போய் விடுறீங்கள் பரவாயில்லை உங்கட கார் பழுதெண்டால் எங்களை பஸ்சில கூட்டிக் கொண்டு போறீங்கள். ஏன்? எங்களுக்கு பள்ளி செல்லும் பாதை தெரியாததாலா? இல்லை பாதை தவறிவிடுவோம் என்றா? எப்படி அம்மா? எப்படி அப்பா? நாங்கள் பாதை தவறுவோம்? உங்கள் கஸ்ரங்களைப் பார்த்தபின்பும் நாம் பாதை தவறுவோமா? நீங்கள் எங்களைப் பஸ்சில் கூட்டிச் செல்லும் போது அதில் வரும் மாணவர்கள் எங்களைப் பார்த்துக் கேலி செய்வது உங்களுக்குப் புரிகிறதா? பாடசாலையில் நாங்கள் அவமானப் படுத்தப்படுவது உங்களுக்குத் தெரிகிறதா? நாம், வேறு வழியில் செல்வதென்றால் உங்களை ஏமாற்றிவிட்டு செல்வது எங்களுக்குப் பெரிய விடயமல்ல.

சங்கீதம் படிக்கப் போனாலும் சுருதிப்பெட்டி போல் எங்களோடு ஒட்டி விடுகிறீர்கள். எம்மால் மற்ற பிள்ளைகளோடு சிரித்துக் கதைச்சுப் பேச முடியுதில்லை. நீங்கள் என்ன நினைப்பீர்கள் அல்லது திரும்பி வரும் வழியில் அவர்களோடு என்ன கதைத்தாய்? என்னத்துக்குச் சிரித்தாய் எண்டு கேள்வி மேல கேள்வியால எங்களைத் துளைச்சு எடுத்துப் போடுவீங்கள்.

உங்களுக்கு நன்றாகத் தெரியும் எங்களால் உங்களை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. உங்களாலும் எங்களை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. உங்கள் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டே நாங்கள் இதைச் சொல்கிறோம். நாம் சிறுவர்களாக இருக்கும்போது எங்கள் தேவைகளைஎல்லாம் பூர்த்தி செய்தீர்கள். இப்போது எங்களால் எம்மைப் பார்க்க முடியும். பாதுகாக்க முடியும். ஒரு தமிழ் கலாசாரத்தை பின்பற்றும் ஒரு புதிய தலைமுறையாக எங்களால் வளர முடியும். வெளிநாட்டு கலாச்சாரம் வெளிநாட்டுக்காரனுக்கே வெறுப்பாகியுள்ளது என்பதை எமது பாடசாலையில் நாளாந்தம் நடைபெறும் சம்பவங்களிலிருந்து எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. எனவே நீங்கள் விரும்பும் ஒரு தமிழனாக எம்மால் வாழ்ந்து காட்ட முடியும். எமக்காக நிறையப் பணம் செலவு செய்கிறீர்கள். எமக்காக இரவு பகல் வேலை செய்து ஓடாகத் தேய்கிறீர்கள். இதுவும் போதாதென்று எமக்குப் பின்னால் எப்பவும் ஒரு பொடிகாட் போல் திரிகிறீர்கள்? நீங்கள் படும் கஸ்ரத்தைப் பார்க்கும் பொழுது எங்களுக்கு இப்படி ஒரு படிப்புத் தேவைதானா என்று எண்ணத் தோன்றுகின்றது. எங்களுக்காக நீங்கள் எதிர்நோக்கும் சிரமங்களைப் பார்க்கும்போது எம் மனதில் குற்ற உணர்வு தலை தூக்குகிறது. ஏன் எங்களை கைப்பொம்மைகள் போல். அங்கவீனர்கள் போல் மனமுடையச் செய்கிறீர்கள்.

நீங்கள் பாடசாலை செல்லும்போது இப்படித்தானா உங்கள் பெற்றோர் முன்னாலும் பின்னாலும் வந்தார்கள்? இல்லையே! விடுமுறைக்கு நான் சென்றபோது அங்கு நான் பார்த்தேனே? எத்தனை அழகாக வெள்ளைச் சீருடையில் நடந்தும் சைக்கிளிலும் வரிசை வரிசையாகப் போகினம். அவையளோடை ஒரு பெற்றோரும் கையைப் பிடிச்சுக் கொண்டு போகிறதை காணவில்லை. ஏன் எங்களை ஒரு கைதிபோல் நடத்துகின்றீர்கள். உங்கள் ஊரில் வளர்க்கும் ஒரு சிறகு வெட்டப்பட்ட கிளிபோல் எங்களை வளர்க்காதீர்கள். எங்களை சுதந்திரப் பறவைகளாக வானில் பறக்க விடுங்கள். நாங்கள் நல்ல பிள்ளைகளாக வீடு திரும்புவோம்!

*பள்ளி செல்லும் குமருகள்சார்பில் - ஜானகி*


தீபாவளி நல்வாழ்த்துக்கள்



**Branch** Man & Co Estate Agents
**Reference** MNC_000634
**Type** Flat
**Bedrooms** 2
**Location** Chamberlayne, Off Preston Road, Preston, HA3 0PX
**Asking Price** £229,950
**Status** For Sale
**Description**
An immcaulate 2 double bedroomed purpose built flat comprises a large reception, fully fitted kitchen, combined bath & WC and allot car park. Preston Road is a quit cul - de - sac located moments from the banks, bars & restaurent, schools and Preston road underground station.



**Branch** Man & Co Estate Agents
**Reference** MNC_000951
**Type** End of Terrace
**Bedrooms** 3
**Location** Mollison Way, Queensbury
**Asking Price** £319,950
**Status** For Sale
**Description**
This truly stunning brand new three bedroomed end terraced house finished throughout and offers stylish accommodation including wide 50' garden & front drive way. This property comprises a goregeous receiption room, modern stylish fitted kitchen, shared family bath & WC room and guest WC. This charming is within the easy reach of a wide range of a shops, restaurents, recreation club and schools. Local transport next to bus.



**Branch** Man & Co Estate Agents
**Reference** MNC_000836
**Type** Flat
**Bedrooms** 2
**Location** Willow Tree Court, Crawford Avenue, Wembley
**Asking Price** £229,950
**Status** For Sale
**Description**
Attractively presented throughout, two spacious double rooms stunning flats benefiting from a large reception, modern kitchen, two bath & WC rooms and allot car park. Limited number of flats in the court and entrance access with electronically operated gate. Crawford avenue is located for easy access to the shops, bars & restarents, schools and Wembley Central & Sudbury town underground station.



**Branch** Man & Co Estate Agents
**Reference** MNC_000954
**Type** Semi Detached
**Bedrooms** 3
**Location** Wincer Crescent, South Harrow
**Asking Price** £269,950
**Status** For Sale
**Description**
This, South Harrow, semi detached house is located in a desirable location in a close proximity to local many amenities and schools. The property offers front drive way parking and share drive detached garage. Also the property has potentiel for a rear extension and loft conversion. This idealy located property comprises through lounge, fully fitted kitchen, three bedrooms, separate bath & WC room rear garden.



**Branch** Man & Co Estate Agents
**Reference** MNC_000942
**Type** End Of Terrace
**Bedrooms** 2
**Location** Molison Way, Queensbury
**Asking Price** £284,950
**Status** For Sale
**Description**
A fabulous three bedroomed semi detached house on one of Queensbury's finest residential address, the property generously proportioned double reception rooms, fully fitted kitchen, combined bath & WC, rear garden and street parking.



**Branch** Man & Co Estate Agents
**Reference** MNC_000956
**Type** Terraced
**Bedrooms** 3
**Location** Mildford Garden, Wembley
**Asking Price** £264,950
**Status** For Sale
**Description**
Well presented three bed roomed terraced house off Lancelot road, is a quit cul - de sac located moments from the Wembley central banks, bars & restaurent, schools and underground station & night bus. Property comprises good size receiption, three spacious rooms, fully fitted kitchen and fully tiled bath & wc room.

man & co

உங்கள் வீடுகளை விற்கவும் வாங்கவும் வாடகைக்கு விடவும் எங்களை நாடவும்
3 Fryent Way, Kingsbury, London NW9 9ER
Tel: 02082069930 / Fax: 020 8206 9931
E-Mail:info@manandco.co.uk / Web: www.manandco.co.uk

யாழ் களம் பெருமையுடன் வழங்கும்

ரசிகையின்...

# பட்டிமன்றம்

**பெற்றோர்களுக்கும் இளம் பிள்ளைகளுக்குமிடையே இடைவெளி ஒன்று உருவாகி அது கால வளர்ச்சியில் விரிவடைவதை உணர முடிகிறது. ஆகவே இந்த இடைவெளிக்கு காரணம் பெற்றோரா? பிள்ளைகளா? சூழலா?**

நடுவர்
**இளைஞன்**

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**நாரதர்** (பிள்ளைகள் அணி)

சரி இடை வெளி மனசில உருவாகுது எண்டு பாத்தம், யாற்ற மனசில எப்படி உருவாகுது?புயலாகி வந்தவர் வந்தவுடனயே குற்றம் காண்பதில் தான் தொடங்கினார்.அட இது எனக்கு ஒண்டும் புதிசில்ல, ஏனெண்டா இப்படித் தான் சின்னஞ் சிறிசுகள் விளங்காம குற்றம் காண்பதிலயே குறியா இருக்குங்கள். அவர் செய்ததைப் போல் இளயவர்கள் மீதான குற்றங்களை சிறு பிள்ளைத் தனமாக நான் பட்டியல் இடப் போவதில்லை.ஏனெனில் அதில் எந்தப்பிரயோசனமும் இல்லை.ஏன் எதற்கு என்ற சீரிய சிந்தை உடையோர் பெரியவர்கள். அந்தளவுக்கு சீரிய சிந்தனை உடையவர்களாக சிறுவர்கள் இருப்பத்தில்லை,இதற்கு புயலின் வாதமே சான்றாக அமைகிறது.காரணம் அது அந்த வயதுக் குணம்.அந்த வயதில் ஆழமாகப் பகுத்தறிவது,உலகப் பட்டறிவு என்பவை குறைந்தே காணப்படும்.குறிப்பாக நீங்கள் ஒன்றை அவதானித்தீர்கள் என்றால் பதின்னம வயதுகளில் தான் பிள்ளைகளுக்கும் ,பெற்றோருக்குமான இடை வெளி அதிகரித்து இருக்கும் பின்னர் அவர்களும் பக்குவம் அடைந்து பட்டறிவு பட்டவர்களாக ஆகும் போது இந்த இடை வெளி குறைகிறது. இந்த ஒரு விடயத்தில் இருந்தே இந்த இடை வெளிக்கான அடிப்படைக் காரண கர்த்தாக்கள் யார் என்று துலாம்பரமாகத் தெரியவில்லயா? நடுவரே இதை நீங்களே உங்கள் வாழ்க்கை அனுபவத்தினூடகவே உணர்ந்திருப்பீர்கள், இங்கு எதிர் அணியில் வாதிட்டுக் கொண்டிருக்கும் நன்பர்கள் கூட இதனை ஒத்துக் கொள்வார்கள்.ஆகவே அடிப்படைப் புரிந்துணர்வு இல்லாமையே இந்த இடை வெளிக்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது .அது வாழ்பனுவத்திலும், சிந்தனையிலும் அனுபவப்பட்ட பெற்றோர் களால் உணரப்பட்டு , பிள்ளைகளை நல்வழிப்படுத்கின்றனர் பெற்றோர்.

எங்கே இதனை மறுத்து தமக்கும்,பெற்றோ ருக்கும் இடையில் ஒரு சுவற்றை எழுப்பி தம்மை அந்தச் சூழலில் இருந்து விடுவித்து தாம் எண்ணியவாறு நடக்கின்றனரோ அங்கே தான் இந்த இடை வெளி பெருகி, வாழ்க்கையில் தோற்றவர்களாக சில இளைய வர்கள் மாறி விடுகின்றனர்.எங்கெல்லாம் பெற்றோரின் அரவணைப்பும், அன்பும், வழிகாட்டலும் இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த இடை வெளி குறைந்து புரிந்துணர்வு மலர்கிறது.எந்தப்பெற்றோர் தான் தமது பிள்ளைகள் அழிய வேண்டும் என்று விரும்புவார்கள்? பிள்ளைகளின் விளக்கம் இன்மை தானே இதற்கு அடிப்படைக் காரணம்.

கடைசியா சுஜீந்தன் கேட்ட சில கேள்விகளுக்குப் பதில் அளிக்கப் போறன். அவர் கேக்கிறார் ஏன் பாடசாலையில பிள்ளயள் விடுற பிழைக்கு பெற்றோரைக் கூப்புடுகினம் எண்டு.இதைத் தானே நானும் சொல்லுறன் அப்பு. பிழை விடுறது பிள்ளயள் அவைக்கு அது விளங்காது எண்ட படியாத் தான் பெற்றோரைக் கூப்புடுகினம்.விளக்கம் குறைந்ததால் தானே பிழை வருகிறது,ஆசிரியர் கூறுவது பற்றிய புரிந்துணர்வு இல்லாததால் தானே பிழை வருகிறது.பெற்றோரிடம் அதை விளங்கும் பட்டறிவு இருப்பதால் தானே அவர்கள் அழைக்கப் படுகிறார்கள்.அவர்கள் பிள்ளையின் நலனில் அக்கறை உள்ளவர்கள் என்ற எதிர்பார்ப்பினால் தானே அவர்கள் அழைக்கப் படுகிறார்கள்.ஆகவே யாரால் இடை வெளி வருகிறது நண்பர்களே, உங்கள் பெற்றோரின் நல்லெண்ணத்தில் இருந்து, அவர்களின் உழைப்பில், அக்கறையில் இருந்து கூறுங்கள் உண்மையை.

ஆகவே நடுவரே இந்த வாதங்களை எல்லாவற்றையும் சீர் தூக்கிப்பார்த்து நல்ல ஒரு முடிவை, நீதியான, நியாயமான முடிவை நீங்கள் முன் வைப்பீர்கள் என்ற நம்பிக்கையில் அமர்கிறேன்,

**எல்லாளன்** (பெற்றோர் அணி)

நடுவர் அவர்களே...! தலை முறை இடைவெளி தோன்றுவதற்குக் காரணம் என்ன வென்ற இந்தப் பட்டிமன்றத்தில் பெற்றோர் தான் என்று சரியான ஒரு காரணத் திற்காக வாதிட்டுக் கொண்டிருக்கும் எனது சக தோழர்களே...! மற்றும் இங்கு வாதிட வேண்டுமென்ற வற்புறுத்தல் காரணமாக ஏனோ தானோ வென்று வாதிட்டுக் கொண்டி ருக்கும் எதிரணியினரே...! அனைவருக்கும் வணக்கம்...!

என்னதான் சில்லறைக் காரணங்களை நீங்கள் தூக்கிப் பிடித்தாலும் பெற்றோரின் பொறுப்பற்ற செயல்களும் அறியாமையுமே எல்லாவற்றுக்கும் முழுமுதல் காரணம் என்பதை நீங்களும் அறிவீர்கள். அந்தக் காரணங்கள் எவ்வாறு இந்த இடைவெளியை ஏற்படுத்துகின்றது என்பதை விரிவாக எடுத்து வருகிறேன்....

'தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து
முந்தியிருக்கச் செய்யும் செயல்'

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக் கிறார். இங்கு பெற்றோரின் கடமை விதந் துரைக்கப் பட்டுள்ளது. பிள்ளைகளைப் பெறுவது ஒரு ஆணினதும் பெண்ணினதும் உடல் இச்சை தொடர்புடையதும் இயற்கை சம்பந்தப் பட்ட தூண்டுதலும் ஆகும். பிள்ளைகளைக் கேட்டு யாரும் பிள்ளைகளைப் பெறுவதில்லை. பெற்று பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி விட வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு இருக்கின்றது. இந்தக் கடமையை இன்று எத்தனை பெற்றோர்கள் சரிவர நிறைவேற்றுகிறார்கள் என்பதில் தான் இந்த இடைவெளிக்கான காரணமும் உருவாகின்றது.

புலம் பெயர்ந்த தேசங்களில் இந்தப் பெற்றோர் எவ்வகையான வாழ்க்கை முறை யைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்தப் பெற்றோர் கள் எனப்படுபவர்கள் பிள்ளைகளாக இருக்கும் வரை நல்ல பிள்ளைகளாகத்தான் இருக்கிறார்கள்.திருமணம் ஆகும் போதே தம் சிந்தையை மெள்ள மெள்ள அடகு வைக்கத் தொடங்குகிறார்கள் பணத்திடம்.

'காணி கார் கொழும்பில் சோக்கான வீடும்
இருந்தால்
அக்கணமே வாணியின் பால்
சிந்தையிழப்பான் தண்டபாணி'

என்று மஹாகவி கூறியதைப் போல பணம் வசதி என்று அங்கலாய்க்கத் தொடங்கி விடுகிறார்கள் பெற்றோர். இந்த பேராசையை அவர்களுக்குப் பொறுப்பு வந்து விட்டது என்று அழகாகத் தங்க முலாம் போட்டு பூசிவிடுகிறார் கள்.

வாழ்க்கையை வாழும் வகை அறியாது வசதி வாய்ப்புகள் தான் வாழ்க்கை என்று தவறாக எண்ணிக்கொண்டு தம் வாழ்க்கை யையும் நரகமாக்கிக் கொண்டு பிள்ளைகள் வாழ்க்கையையும் நரகமாக்கிக் கொண்டி ருக்கிறார்கள். தெரியாமலா சொல்லி வைத்தி ருக்கிறார்கள் பேராசை பெரு நட்டம் என்று. புலம் பெயர்ந்த தேசத்தில் போட்டி பொறாமை கொடி கட்டிப் பறக்கின்றது.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் உறவினர் கள் என்று ஒவ்வொருவரைப் பார்த்தும் தாங் களும் அவ்வாறு வாழ்வதற்கு முயல்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் வசதி வாய்ப்புகள் தங்களுக்கும் வேண்டுமென்று ஆசைப்படு கிறார்கள். புலியைப் பார்த்து பூனையும் சூடு போட்டுக் கொண்ட நிலமையாகின்றது. ஒரு வேலை இரு வேலையாகி வசதியான வீடிருந்தும் வேலைத் தளத்தில் படுத்துறங்கும் நிலமையில் இருக்கிறார்கள் பெற்றோர்.

போதாக் குறைக்கு மனைவியும் ஆசையைத் தூண்டி விடுகின்றாள். சின்னம்மா வாங்கி வீட்டை விடப் பெரிய வீடு எனக்கு வேணும். மச்சாள் போட்டிருக்கிற நகையளை விட நாப்பது பவுண் கூட எனக்கு வேணும்... என்று கணவனை ஓயாது நச்சரிக்கின்றாள். மனைவியின் ஆசையைப் பூர்த்தி செய்ய... மற்றவருக்கிடையில் மதிப்புடன் வாழ என்று பல காரணங்களைக் கூறிக் கொண்டு கண வனும் காலில் சக்கரம் கட்டிப் பறக்கின்றான்.

'அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேளா
அவ ஆத்துக்காரா சொன்னதெல்லாம்
கேட்டேளா ன்னு மனைவி கேட்க
அடுத்தாத்து சங்கதியெல்லாம் நமக்கேண்டி
பட்டு நமக்கேண்டி ன்னு '

பட்டுன்னு குட்டுப் போட்டு மனைவியையும் வீண் ஆசைகளையும் அடக்க வேண்டிய கணவன் கோட்டை விட்டது வாழ்க்கையை மட்டுமல்ல... பிள்ளைகளின் நல்ல எதிர்காலத்தையும் தான்.

'வளரும் பயிரை முளையிலே தெரியும்னு' சொல்வார்கள். முளை எங்கேயிருந்து முளைக் கின்றது. பெற்றோரிடம் இருந்துதானே. சரியான கவனிப்பும் அன்பும் ஆதரவும் இல்லாத முளை எப்படி நல்ல முளையாக வளர முடியும். பிள்ளைகள் எதைக் கேட்டாலும் அப்பாவுக்கு நேரமில்லை.. அம்மாவுக்கும் நேரமில்லை அல்லது தெரியாது. இங்கு பிள்ளைகளுக்கு நல்ல கொழுகொம்பில்லை. அது எப்படி ஊன்றி எழுந்து அழகான மலர்களைக் கொடுக்க முடியும். அது தான் போன போக்கில் வளர்ந்து தான் நினைத்தபடிதான் போகும்.

பிள்ளைகளுடன் செலவழிக்க நேரமில்லாத பெற்றோர் பிள்ளைகளையும் பிஸியாக்கி விட்டால் பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக இருப்பார்கள் என்று அவர்கள் தலையில் பாட்டு, நடனம், கராட்டி என்று உலகத்திலுள்ள அத்தனை கலைகளையும் திணித்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றார்கள்.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்ற பழமொழியையும் சாட்சியமாக எடுத்துப் போட்டுக் கொள்கிறார்கள். அளவிற்கு மிஞ்சி னால் அமிர்தமும் நஞ்சு என்பதை மறந்து விடுகிறார்கள். இந்தக் குழந்தைகள் ஐந்தில் வளைந்து வளைந்து இறுதியில் முறிந்து போய் விடுகிறார்களே.

'காலை முழுவதும் படிப்பு பின்பு கனிவு
கொடுக்கும் பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா'

என்று தான் பாரதி பாடினான். ஆனால் இந்தப் பெற்றோர் பிள்ளைகளை படிப்பைத் தவிர வேறு எதையும் செய்ய விடுவதில்லை. இந்த மன உளைச்சலில் வளரும் குழந்தைகள் எப்படி இடைவெளி இல்லாமல் பெற்றோரிடம் நெருங்கி உறவாடும்.

பிள்ளைகளிடம் மட்டுமல்ல கணவன் மனைவிக்கிடையே இடை வெளியை இது உண்டாக்குகின்றது. அதிக அளவில் விவாக ரத்து என்பதை அறியாமல் இருந்த நம் மக்க ளிடையே விவாகரத்தும் சிங்கிள் மதர் என்னும் சொல்லாடலும் உலகப் பிரசித்தம்.இவ்வாறு குடும்ப வாழ்க்கையே அல்லாடும் நிலையில் அக்குடும்பங்களில் உள்ள குழந்தைகள் நிலை என்னாகும். வளந்து வரும் இந்த இளைய தலை முறை இடை வெளியில்லாமல் நெருங்கியா வரும்.

தொடரும்..

INTERNATIONAL REFUGEES ORGANISATION
IMMIGRATION
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
• புதிய சட்ட அமைவுகளின் கீழான
Fresh Applications
மேன் முறையீடுகள்
• இலங்கையில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு எதிரான மேன் முறையீடுகள்
• ஐரோப்பிய நாட்டில் இருந்து வருபவர்களுடன் தங்கியிருப்போருக்கான விசா
• விண்ணப்பங்கள்
• மொழி பெயர்ப்புகள்
அணுகுங்கள்:
குலேந்திரன்
INTERNATIONAL REFUGEES ORGANISATION
1083 Garratt Lane - London SW17 0LN
OISC
தொலைபேசி 020 8682 4494
கைத்தொலைபேசி 078 7781 9494
( ஆலோசனைக் கட்டணம் £100.00 )
Tel: 020 8682 4494
Fax: 020 8682 9922
Tube: Tooting Broadway

# ஒரு பேப்பரின் ஒரு சந்திப்பு



திரு. க.பாலேந்திரா:

நடிகனாக, இயக்குனராக, நெறியாளராக நாடகத்துறையின் பல பரிமாணங்களையும் தொட்டவர். புலம்பெயர்ந்த பின்பும் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளதுடன் புலத்தில் வாழும் பல சிறுவர் சிறுமியரையும் நாடகத் துறையில் பயிற்சியளித்து வருபவர். அவருடன் நடாத்தப்பட்ட சந்திப்பிலிருந்து...

*நாடகத் துறையில் உங்கள் பிரவேசம் பற்றி*

சிறுவயதில் இருந்தே நான் நிறைய நாடகங்கள் பார்ப்பேன். அரியாலையில் சுதேசிய விழா வருடந்தோறும் கொண்டாடப் படும். அங்கு ஓரிரு நாடகங்களில் பங்கு பற்றியிருந்தாலும் மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்த காலத்தில் மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் தான் எனக்கு முக்கிய களமாக அமைந்தது. அக்காலப் பகுதியில் பல நாடகங்களிலும் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் பின்னர் தான் நாடகத்துறையின் மீது தீவிரமான ஈடுபாடு ஏற்பட்டது.

*தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் உருவாக்கம் பற்றி...*

1976 இல் நடிகர் ஒன்றியம் என்ற அமைப்பில் அங்கம் வகித்த காலத்தில் 'மழை' என்ற பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதியின் நாடகத்தைத் தயாரித்தேன். இதன் வெற்றி தொடர்ந்து நாடகத் தயாரிப்பில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது. இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஒரு ரசிகர் அவையை அமைத்து தொடர்ந்து நாடகங்களை மேடையேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் 1978 இல் தமிழ் அவைக்காற்றுக் கழகத்தை ஆரம்பித்து இலங்கை முழுவதும் பல நாடகங்களை மேடையேற்றினோம். 'தொடர்ந்த நாடக மேடையேற்றம் தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும்' என்ற கோசத்துடன் காத்திரமான நாடகங்கள் பலவற்றை நூறுதடவைக்கு மேலாக மேடையேற்றி எமக்கென ஒரு ரசிகர் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டோம். தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் உருவாக்கத்திற்கு முன்பே நான் பல நாடகங்களைத் தயாரித்தேன் என்பது பலருக்கும் தெரியாது.

*புலத்திலே உங்கள் கலைப்பணி பற்றி*

1982 இல் நோர்வே நாட்டில் 'துரண்யம்' நகரில் தமிழ்ச்சங்கம் அமைத்து அங்குள்ள அத்தனை தமிழர்களையும் இணைத்து நாடக முயற்சியில் ஈடுபட்டேன். அண்மையில் அந்தச் சங்கத்தின் வெள்ளிவிழாவிற்கு என்னை அழைத்தபோது மனதிலே ஒரு இனம்புரியாத சந்தோசம் ஏற்பட்டது.

1983இற்குப் பின்னர் லண்டனில் நண்பர்களை இணைத்து தமிழ் அவைக் காற்றுக் கழகத்தை மீளப்புனரமைப்புச் செய்தோம். அன்றிலிருந்து இன்றுவரை வருடாந்தம் நாடக விழாக்களை லண்டனில் நடத்தி வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. இதைவிட பல ஐரோப்பிய நாடுகளிலும் அவுஸ்திரேலியா கனடா ஆகிய நாடுகளிலும் பல நாடக விழாக்களை நடத்தியிருக்கிறோம்.

*இந்த நாடுகளில் நாடகங்களை மேடையேற்றுவதிலுள்ள சிக்கல்கள் பற்றி*

புலத்தில் மட்டுமல்ல தாயகத்தில் கூட நாடகங்களை மேடையேற்றுவது என்பது சவாலான விடயந்தான். நாங்கள் நாடகங்களை ஆரம்பித்த காலப்பகுதியில் சினிமாப்பாணியும் இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்களும் கொண்ட நாடகங்கள் தான் கோலோச்சிக் கொண்டிருந்தன. பலவிதமான தாக்குதல்கள் இருட்டடிப்புகள் என்பவற்றுடன் போராடித் தான் நாடகங்களை மேடையேற்றக் கூடியதாக இருந்தது.

புலத்திலே நேரம் பணம் என்ற வாரோட்டத்தில் இயந்திர வாழ்க்கைக்கு மத்தியிலே நாடகங்களை வந்து பார்ப்பதற்கு மக்களுக்கு நேரமிருப்பதில்லை. இருந்தாலும் இங்குள்ள தமிழ் மக்களின் ஆதரவு இருப்பதனால் தான் தொடர்ந்து இயங்கக் கூடியதாக இருக்கிறது

*புலத்திலே இளைய சமுதாயத்தினரிடையே நாடகத் துறையை வளர்ப்பதற்கு செய்து வரும் முயற்சிகள் பற்றி ?*

நானும் எனது மனைவி ஆனந்தராணியும் இணைந்து கடந்த மூன்று ஆண்டுகளாக லண்டன் ஹரோப் பகுதியில் தமிழ் நாடகப் பள்ளி ஒன்றை சிறுவர்களுக்காக நடத்தி வருகிறோம். சிறுவர்களாகப் பயின்ற பலர் எமது பெரியவர்களுக்கான தயாரிப்புகளிலும் தொடர்ந்து பங்களிப்புச் செய்து வருவது ஆத்மதிருப்தியை அளிக்கிறது.

*இளைய சமுதாயத்தினரிடையே நாடகத்துறை தொடர்பான ஈடுபாடு எப்படியிருக்கிறது?*

எம்மிடம் பயில வருபவர்களிடம் காணப்படும் ஈடுபாடு எமக்கும் உற்சாகத்தைத் தருகிறது. பெற்றோரின் வற்புறுத்தல் ஏதுமின்றி தாமாகவே விரும்பிப் பயில்கிறார்கள். நாடகப்பயிற்சியின் போது அவர்களிடம் சில பொறுப்புக்களைக் கொடுத்து அவர்களது ஆக்கத்திறனை வளர்க்க முயல்கிறோம். அவர்களும் தங்கள் திறமையை பல வழிகளிலும் வெளிப்படுத்தி வருகிறார்கள். பலரும் அவர்களுக்கு சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கின்ற பட்சத்தில் பரவலாகத் திறமைசாலிகளை உருவாக்க முடியும்.

*தேசியப் போராட்டத்தை இளம் சமுதாயத்தினரிடையே விளக்கும் விதமான படைப்புகள் எதையாவது தயாரிக்கும் எண்ணம் உள்ளதா?*

நான் இதுவரை 15 வயது வரையிலான சிறுவர்களுடன் தான் அதிகமான நாடகங்களைத் தயாரித்திருக்கிறேன். இந்தக் குழுவில் 5-6 வயதுச் சிறுவர்களும் இருக்கின்றர்கள். அவர்களுடைய மனவளர்ச்சிக்கும் சூழலுக்கும் ஏற்ற கருப்பொருட்களை கொண்ட நாடகங்களைத் தயாரிக்கிறோம். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு', 'அயலார் தீர்ப்பு', 'மலைகள் வழி மறித்தால்' போன்ற நாடகங்கள் கூறும் செய்திகளைக் கூர்ந்து கவனித்தால் மேற்கூறிய பணியை நாம் எற்கனவே செய்திருப்பதாகச் சொல்லலாம்.

*தொலைக்காட்சித் தொடர்களின் ஆதிக்கம் மேடைநாடகத்துறையைப் பாதிக்கிறதா?*

ஆம், நாடகத்துறையை மட்டுமல்ல. தமிழர் வாழ்வியலை குடும்ப வாழ்க்கையை, பரஸ்பர மனிதருக்கிடையிலான உறவை எல்லாம் இத் தொடர்களின் ஆதிக்கம் பாதிக்கிறது. இது மிகவும் கவலை தரும் வியாபாரம். இது தனியாக விவாதிக்க வேண்டிய விசயம்.

*தேசியப் பிரச்சினை சார்ந்த கதைகளை நீங்கள் தொடுவதில்லை என்ற குற்றச்சாட்டுக் குறித்து?*


அப்படி ஒரு குற்றச்சாட்டு இருக்கிறதா? ஆரம்பத்திலிருந்தே தேசியப் பிரச்சினை குறித்த கருப்பொருட்களை என் நாடகங்களில் அவ்வப்போது கையாண்டு வந்திருக்கிறேன். எனது நாடகங்கள் தமிழ் வாழ்வியல் சார்ந்தது. மொழிபெயர்ப்பு, தழுவல் செய்கிற போது கூட தமிழர் வாழ்வியலுக்குப் பொருந்தக் கூடிய கருப்பொருட்களையே தெரிவு செய்கிறேன். 'துக்ளக்', 'பார்வையாளர்கள்', 'எரிகின்றதேசம்', 'துன்பக்கேணியிலே' 'பாரத தர்மம்' போன்ற நாடகங்களைப் பார்த்தவர்கள் இதுபோன்ற ஒரு கருத்தைச் சொல்ல மாட்டார்கள்.

*- மணிவாசகன்*


Kerala Ayurvedic Health Clinic

Free Consultation | Authentic and effective Kerala ayurvedic treatments
Qualified and registered Ayurvedic Physicians | Affordable Prices

Call 020 8902 1104 or 020 8902 1707



உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும்,
மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுற்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்




Massage therapies by experienced and highly skilled therapists
Treatment is designed around your individual health needs
Only natural herbal medicines are used
No side effects at all
Wide range of therapies

- ✓ Frozen Shoulder
- ✓ Digestive Disorders
- ✓ High Blood Pressure
- ✓ Pulled Muscles
- ✓ High Cholestrol
- ✓ Trapped Nerve
- ✓ Paralytic Conditions

- ✓ Stress and Strain
- ✓ Back Pain
- ✓ Joint Pain
- ✓ Diabetes
- ✓ Migraine
- ✓ Stiffness
- ✓ Arthritis

Male & Female Therapists available
We can also speak in Hindi
Tamil & Malayalam

இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்




Open 7 Days a Week

1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex, UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadily Line www.kahc.co.uk

மட்டைக் கிளப்பானின்....

# அலசுவாரம் - 20

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் எண்டு ஒரு பழமொழி இரிக்குது பாருங்கோ. ஆனா இப்ப தெய்வத்துக்கும் சுணங்க நேரமில்லப் போல கிடக்குது. உடனடியாகவே அரசாங்கத்தின்ர கொட்டத்தை அடக்குற வேலையில சுறுக்கா நிக்குது. இவ்வளவு நாளும் தங்களுக்கிருந்த விமானப்படை வலுவையும் நெடுந்தூர ஆட்டிலெறி பல்குழல் எரிகுண்டுப் பலத்தையும் வச்சிக் கொண்டு எங்கட தேசத்தைத் துவம்சம் செய்தவனுகள்.

ஆனா தருமம் மறுபடியும் தன்ர பலத்தைக் காட்டிப் போட்டுது. ஒண்டுரெண்டில்ல நூத்துக் கணக்கில உதிர்ந்திற்றாங்க. துள்ளுற மாடு பொதிசுமக்கும் எண்டு சும்மாவா சொன்னாங்க. அதுதான் இப்ப நடந்திரிக்குது முகமாலையிலயும் ஹபறணயிலயும். ஆனா நினச்சாக் கவலை வருகுது பாருங்கோ.

எதிரிக்கு இப்பிடி அழிவு வாறதப் பார்த்து மனம் சந்தோசப்படக்கூடிய நிலையில கடவுள் நம்மள வச்சிரிக் கிறாரே எண்டு எண்ணக்குள்ள உலகம் நாகரீகமடைஞ்சு முன்னேறிப்போயிரிக்கிற இந்த இருபத்தோராம் நூற் றாண்டில நாம எங்க இரிக்கிறம் இந்த மன உணர்வு நமக்கு ஏன் வருகுது நானும் ஒரு மனிசனா எண்டு எனக்குள்ளேயே என்னைப்பற்றிக் குறைவாக எடைபோடத் தோன்றுது.

முகமாலை வெற்றிய நினைச்சி ஒரு கவிதை பாட எண்ணினன். ஆனா பொத்துடா வாயை எண்டு கலைவாணித் தாய் சொல்லுற மாதிரி இரிக்குது. தமிழை நேசி, தமிழ்த்தேசியத்தை நேசி, தங்கள் தாய்மண்ணின் சுயநிர்ணய உரிமைக்காக உயிரைக்கொடுத்துப் போராடும் போராளிகளை நேசி ஆனால் மண்ணிலே உதிர்ந்து போகும் மனித உயிர்களின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுத்து இறும்பூதெய்தாதே.

மாற்றானிடத்திலும் மனிதமுண்டு அவனும் தாய், தந்தை சகோதரங்களுடன் பிறந்தவன்தான். துவக்குப்பிடித்து உழைக்கும் சம்பளக் காசில் தனது உறவுகளுக்கு அடுத்தமாதம் எதை வாங்கிக்கொடுக்கலாம் என்றுதான் அவன் நினைத்திருந்திருப்பான். அந்த மனிதம் தேடு வாரற்றுச் சிதைந்து கிடக்கிறது பொறுக்கியெடுத்துப் பொலித்தீன் பைகளில் போட்டு வீட்டுக்கு அனுப்பு கிறோம். சம்பளம் வேண்டுமானால் வீட்டுக்குத் தொடர்ந்து போகலாம் ஆனால் தம்பி போவானா, அண்ணா போவானா, தந்தை போவாரா, மகன் போவனா? என்று கேட்கிறது உள் உணர்வு.

ஏ சிங்கள ஆளும் வர்க்கமே நீ மனிதத்தை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உனது அற்பத்தனமான மேலாண்மை வாதத்தினால் எவ்வளவு உயிர்கள் எமது இரு பக்கங்களிலும் அநியாயமாய் அழிகின்றன. ஆக்ககூடி நாம் எதைக் கேட்கிறோம் "வாழு வாழவிடு" இதைத்தானே! இதை மட்டும்தானே கேட்கிறோம்.

இரும்புக்கரம் கொண்டு அடக்க முயற்சிக்கிறாய். சிறிதாயிருந்தவோர் தீப்பொறியை அணைக்கமுடியாத தீச்சுவாலையாய் ஊதிஊதிப் பெருக்க வைத்தது யார்!

ஒரு பிஸ்டலைச் சமாளிக்க பத்து யுத்த டாங்கிகளைக் கொணர்ந்தாய், ஒரு மீன்பிடிப் படகைச் சமாளிக்க பல கப்பல்களையும் டோராக்களையும் கடலில் இறக்கினாய். ஒரு றைபிளைச் சமாளிக்க பத்து யுத்த விமானங்களை வானில் ஏற்றினாய், உன்னால் முடிந்ததா? இல்லையே! விரைவில் முடித்து விடலாமென்று நினைக்கிறாயா? அப்படி நினைப்ப தெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நீ இன்று கொல்லலாம் ஆனால் நான் நின்று கொல்வேன் என்கிறது தெய்வம்.

குண்டடித்துக் குண்டடித்துக் கொன்றொழித்து – எம் இனத்தை வென்றிடலாமென்று நினைத்தாய் – நீ

இன்று செய்தால் நின்று கொல்வேன் என்று சொல்லும் தெய்வமது அன்றழிக்கும் மாயமென்னவோ ஆமாம் இங்கு ஒரு மாயமிருக்கிறது. விடுதலைக்கு வித்தாகும் ஒவ்வொரு ஆன்மாவினது சுதந்திர தாகமும் அதிர்வுகளாய் வாழும் ஆன்மாக்களை உசுப்பி விடுகின்றன.

தெய்வம் இருக்கின்றதோ இல்லையோ அது வேறு விடயம். ஆனால் இந்த உலுக்கல் நிச்சயம் இருக்கிறது அது இலகுவில் அழிந்தும் போவதில்லை. இதனைத்தான் கர்மா என்று பௌத்தமும் கூறுகின்றது.

பௌத்தத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டே தீவினையை அதர்மத்தை அப்பாவிகள் மீது ஏவிவிடும் போலித்துறவிகள் தாம் செய்யும் தீவினை தம்மையே திருப்பித்தாக்கும் தர்மத்தினால் தாம் நிச்சயம் தோற்கடிக்கப் படுவோமென்பதை உணர்ந்தும் உணராததுபோல் நடிக்கிறார்கள். போரை வலியுறுத்துகிறார்கள். இவர்களின் கொடிய கொள்கையினால் அநியாயமாக உயிர்விடும் மனித உயிர்களை நினைத்து வேதனைப்படுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை.

**ஒரு பிஸ்டலைச் சமாளிக்க**
**பத்து யுத்த டாங்கிகளைக் கொணர்ந்தாய்,**
**ஒரு மீன்பிடிப் படகைச் சமாளிக்க**
**பல கப்பல்களையும் டோராக்களையும்**
**கடலில் இறக்கினாய். உன்னால் முடிந்ததா?**

இந்த நிலை இன்று நேற்று ஏற்பட்டதில்லை. தமிழ் நாட்டிலே சைவத்தின் வளர்ச்சி புறச் சமயங்களான சமண பௌத்தர்களுக்கெதிராக ஓங்கியெழுந்த ஓர் காலகட்டத்தில் இந்தக்கொடுமை அந்தப் புறச்சமயவாதிகளுக்கும் நடந்தது.

விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களாக மூலப்பிரகிருதிகளான பஞ்சபூதங்களின் சேர்க்கையால் இவ்வுலகம் தோற்றுவிக்கப் பட்டுள்ளது என்ற கருத்தை முன்வைத்து தங்கள் பள்ளிகளில் பல பௌதிக வேதியியல் ஆய்வுகளைச் செய்தபடி அகிம்சா தர்மத்தைப் பின்பற்றி தெருவில் நடக்கும்போதே சிற்றுயிர்களை மிதித்துவிடாமல் மயிலின் பீலியால்(இறகு) தெருவைக் கூட்டியபடி நடந்த சமணர்களும் பௌத்தர்களும் அழிக்கப்பட்டதும் அவர்களது பள்ளிகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதும் சைவர்களின் மதவெறியினால்தான்.

ஐந்து வயதில் ஞானப்பாலுண்டு தேவாரம் பாடிய ஞானசம்பந்தர் திருநீற்றுப் பதிகம் பாடி பாண்டியனின் வெப்பு நோயை நீக்கிச் சமணருடன் அனல்வாதம் புனல் வாதஞ்செய்து அவர்களை வென்றபோது கிட்டத்தட்ட பத்தாயிரம் சமணர்கள் ஓரிரு நாட்களுக்குள்ளாகவே உயிரோடு கழுவிலேற்றிப் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று சேக்கிழார் பெரிய புராணம் கூறுகின்றது.

தமிழ் நாட்டில் மக்கள் திரு நீற்றுச் சாம்பலையெடுத்து உடலெங்கும் பூசிக்கொண்டார்கள். சமண பௌத்தர்களின் வெறுப்பை நிரந்தரமாகச் சம்பாதித்துக்கொண்ட சம்பந்தர் சற்றுக் காலத்தின்பின் திருமணப்பந்தரோடு தீவைத்துக் கொழுத்தப்பட்டுத் திருக் கைலாயபதவியடைந்தார் என்பது வரலாறு.

அறிவியலுக்கு இவ்வாறு கீழைத்தேயத்தில் அதாவது தெற்காசியாவில் சாவு மணி அடிக்கப்பட மேலைத் தேயத்தில் அது வளரலாயிற்று. இப்பிடி தர்மத்துக்கும் அதர்மத்துக்குமான போட்டி தொடர்ந்து நடக்குது பாருங்கோ. ஒரு காலத்தில சைவம் செய்த அதர்மத்தை இப்ப பௌத்தம் செய்யுது. அவ்வளவே வித்தியாசம்.

தொடருவம்....

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## நோன்பும் உடல் நலமும்

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

உடல் ஆரோக்கியத்தையும், மனத்தூய்மையையும் பேணக்கூடிய இலகுவான, செலவு அற்ற சிகிச்சை முறை உண்ணா நோன்பு இருப்பதாகும். குறுகிய காலநோன்பு ஒன்று முதல் ஐந்து நாட்களுக்கு உட்பட்டதாகும். நீண்டகால நோன்பு ஐந்து நாட்களுக்கு மேற்பட்டதாகும்.

**நோன்பினால் ஏற்படும் நன்மைகள்:**

நாம் தினம் உண்ணும் உணவில் பல கிருமிகளும் உடலுக்கு தேவையற்ற இரசாயனப் பொருட்களும் இருக்கும். சமிபாட்டின் பின் இவை கல்லீரல் Liver க்கு எடுத்துச் செல்லப்பட்டு உடலுக்கு ஒவ்வாத பொருட்கள் அகற்ற ப்படும் Detoxification. இவ்வாறு பிரிக்கப்பட்ட நச்சுப்பொருட்கள், சலம், மலம், வியர்வை ஆகியவற்றின் மூலம் வெளியேற்றப்படும்.

உணவு உட்கொள்ளாததால் கல்லீரலுக்கு வேலை குறைந்து ஓய்வாகும். மேலும் மேலதிக நச்சுப்பொருட்களை வெளியகற்றி உடலை சுத்தப்படுத்த இக்கால இடை உதவும். உணவுக் குழாய்களுக்கு ஓய்வு கிடைப்பதால் அது தன்னை புத்துயிர்ப்படுத்த உதவும்.

உடலின் நோய் தடுக்கும் தொகுதி Immune System ஓய்வுபெறுவதுடன் தனது தொழிற்பாட்டை நன்கு செயல்படுத்த உதவும்.

குருதியில் கொழுப்பின் அளவு குறைந்து இரத்தம் இலகுவாகும் Thinner. இதனால் இதன் தொழிற்பாடு சிறப்படையும்.

உடலில் உள்ள மேலதிக கொழுப்பு பிரிக்கப்பட்டு உடலுக்குத் தேவையான சக்தி பெறப்படுவதால், உடல் கொழுப்பு குறைந்து, உடல் நிறையும் குறைவடையும்.

உடலிலுள்ள பல நாட்பட்ட கலங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை புதுக்கலங்களால் இடமாற்றப்படும்.

அக்காலத்தில் மனதில் கெட்ட எண்ணங்கள் தோன்றுவது குறையும். நல்ல நினைவும் அதனால் நல்ல செயல்களும் செய்வதால் ஆன்மா புனிதமடைகின்றது. இவை தவிர சுவாசத்தொகுதி நோய்கள், ஒவ்வாமை நோய்கள், மூட்டுநோய்கள் போன்றன நோன்பினால் இலகுவாகும்.

குறுகிய கால நோன்பினை கடைப்பிடிக்கும் ஒருவர், உணவினை ஒரு நாளுக்கு ஒரு தடவை மட்டும் உண்ணலாம், அல்லது உணவு உண்ணாது பழச்சாறு மட்டும் அருந்தலாம் அல்லது தண்ணீர் மட்டும் பருகலாம். நீண்டகால நோன்பு இருக்கும் ஒருவர் முதல் வாரத்தில் உடலில் இருந்து நச்சுப்பொருட்கள் அகற்றப்படுவதால், தேக ஆரோக்கியமாக உணர்வார். மேலும் அவரின் நோய் எதிர்க்கும் தன்மை அதிகரிக்கும். இரண்டாவது வாரத்தில் உடலில் ஒரு சோர்வு தோன்றும். ஆனால் பசியுணர்வு குறைந்துவிடும். மூன்றாம் வாரத்தில், உடல் மிக இலகுவாகவும், நன்கு தொழிற்படுவது போன்ற உணர்வு ஏற்படும். நான்காவது வாரத்தில் ஆன்மீக சிந்தனைகள் அதிகரிக்கும். கோபம், காமம், குரோதம் போன்ற உணர்வுகள் மறைந்துவிடும்.

**நோன்பு காலத்தில் ஏற்படும் மருத்துவரீதியான உடல் மாற்றங்கள்.**

நாக்கில் வெண்படை தோன்றும். சுவையுணர்வு அற்றுப்போகும். தலைச்சுற்று, தூக்கமின்மை, உடல்வலி, கண்மங்கல் போன்றன ஏற்படும். உடல் எடை குறையும். உடல் வியர்வை தடிப்பாகவும், அதீத மணமுடனும் வெளிப்படும். உடற்சோர்வு நடுக்கம் ஆகியன ஏற்படும்.

நோன்பு முடிந்த பின்னர் பழைய உணவுமுறைக்கு படிப்படியாக திரும்ப --வேண்டும். நோன்பு சிகிச்சை முறையை பின்பற்ற விரும்பும் ஒருவர் தனது குடும்ப மருத்துவருடன் கலந்தாலோசிப்பது அவசியம். சிறுநீரகநோய், மோசமான உயர் குருதிஅழுத்தம், சர்க்கரைநோய், தைறொய்ட் சுரப்பி நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், நோன்பு சிகிச்சையை பின்பற்ற முன் அவசியம் மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்.

நோன்பு காலத்தில் உடல் ஓய்வு அவசியமானது. எனவே இக்காலகட்டத்தில் போதிய ஓய்வு பெறக்கூடிய ஏற்பாட்டை செய்யவேண்டும். இரைப்பை புண், புற்றுநோய் போன்ற நோயுள்ளவர்கள் மருத்துவ ஆலோசனை இன்றி நோன்பு இருக்கக்கூடாது. எதிர்காலத்தில் இங்கிலாந்தில் பலர் அதிக உடல் எடை Obesity நோயினால் பாதிக்கப்படவுள்ளனர். எனவே நோன்பு சிகிச்சை மிக நல்ல பயன் தரும்.

**Leoz Web Designers**
Web Designers at your service.

இணையதளம்: www.leozweb.com

Don't trust all the spiders.
Let us spin a web for you!.......

உங்களுக்கு வேண்டிய இணையதள வடிவமைப்பை
உங்கள் திருப்திக்கேற்ப செய்து தருவோம்
செலவு அதிகமில்லை அதனால் வரும் பலாபலன் அதிகம்.
உங்கள் வியாபாரத்தக்கு ஒரு புது தகுதி

தொடர்புகளுக்கு:
+44 (0)7960 551 695
+44 (0)7859 940 128

மின் அஞ்சல்:
admininstrator@leozweb.com

Custom Design | Dynamic Sites | E-Commerce Websites | Worldpay or Paypal | also, Logo Design | Flash Animation | Updating Existing Site

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# என் ஞாபகப் பதிவிலிருந்து...

**சுதந்திரா**
*( ஒரு பேப்பருக்காக )*

இந்திய இராணுவம் தேசமெங்கும் திரிந்த காலத்து ஆண்டு அது. துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டுப்பழகிய காதுகளுக்கு ஓய்வும், அச்சமின்றித் திரியக்கூடிய நாள் வராதா என்ற ஏக்கமும் நிரம்பியிருந்த நாட்களது.

அந்தவொரு மதியம் குப்பிளான் கற்கரைப் பிள்ளையார் வீதியின் வடக்குப் பக்கப் பனை வளவுக்குள்ளும், சங்கக்கடைவீதியில் இருந்த பனங்கூடலுக்குள்ளும் நூறுபேருக்குக் கிட்ட வரும் வரிச்சீருடையில் போராளிகள்...

திடீரென அவர்களும் அவர்களது புதிய உடைகளும் புதிதாக யாரென்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. துரோகக்கும்பலாக இருக்குமோ என எண்ணி முடிப்பதற்குள் அதுவரை காலமும் எங்கள் ஊருக்குள் உலவித்திரிந்த போராளிகள் சிலரைக் கண்டதோடு பயம் ஓடிப்போகிறது. ஆனால் ஏன் இவ்வளவு பேரும் இந்தப்பனைக் காணிகளுக்குள் இருக்கிறார்கள்...? அது விளங்காத வினாவாக....

அம்மம்மாவுக்கு மதியச் சாப்பாடு கொடுத்து விட்டு கடைக்குப்போக எனது லுமாலா வீதிக்கு வருகிறது. அன்ரி வீட்டுக் கிணற்றில் போராளி ஒருவன் குளித்துக் கொண்டு நின்றது தெரிந்தது. அது முகுந்தனண்ணா.

என்ன முகுந்தனண்ணா உங்கடையாக்கள் கனபேர் நிக்கினம் ஏதும் பிரச்சனையோ....? வேலியால் எட்டிக் கேட்கிறேன்.

பிரச்சனையில்லை எல்லாரும் வேறை வேறை இடங்களுக்குப் போப்போறம். என்றார் முகுந்தனண்ணா.

ஓ....அதுவா விடயம். நினைத்துக் கொண்டு போகிறேன். பெஞ்சன் வடலி இலுப்பையடியில் அந்தப்போராளியும் இன்னும் சிலரும் உணவுப் பொதிகளைப் பிரித்து சாப்பிட ஆயத்தமாகிக் கொண்டு இருந்தார்கள்.

மடப்பள்ளியடியால் ஒருபோராளி நடந்து வந்து கொண்டிருந்தார்.

அம்மான்.....!

என் நினைவுகளில் நெல்சம்மானும் அந்த 1987ஆம் ஆண்டும் ஞாபகத்தில்.....

கிட்டத்தட்ட இரண்டரை வருடம் கழித்து காண்கிறேன். அன்றொரு நாள் மாலை சமாதி கோவிலடியில் இருக்கும் பல வீடுகளில் ஆட்களின் அரவம். இடையிடை சத்தமிடும் துப்பாக்கி வேட்டுக்கள். தங்கள் வீடுகளில் எடுக்கக்கூடிய பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் வீட்டிலும் அம்மா, அம்மம்மா, நான் எல்லோரும் நின்றிருக்க. அம்மம்மா வீடுபாக்க வந்துபோனதில் அம்மம்மாவுக்குப் பழக்கமானார் நெல்சன் மாமா. அந்தப்பழக்கத்தில் எங்கள் வளவுக்குள் வந்து அம்மம்மாவுடன் கதைத்துக் கொண்டிருந்தார். அம்மம்மா ஊடாக நெல்லசம்மானை எனக்கும் உறவாக்கியது. அந்தப்பகுதியில் அவரைத் தெரிந்தோராலும், போராளிகளாலும் அன்பாக அம்மான் என்று அழைக்கப்பட்ட நெல்சன்மாமா எங்களுடனும் சொந்தமாகி உறவாகிவிட்டார்.

அடுத்தொருநாள் சமாதி கோவிலடியில் விழுந்து வெடித்த எறிகணையின் அதிர்வில் பயந்து நான் ஓடியதைப் பார்த்த நெல்சன் மாமா....

பயப்பிடாதேங்கோ தங்கைச்சி.. அது இஞ்சை விழாது. எனச் சொல்லியும் கேட்காது நான் ஓடிய ஓட்டமும்.....

அதன் பின் அம்மான் என்னைக்கண்டால் 'செல் வரப் போகுது' எனச் சிரிப்பதும் அடிக்கடி நினைவு வரும்.

என் சயிக்கிள் வேகம் குறைகிறது. அம்மான் என்னை ஞாபகத்தில் வைத்திருக்கிறார் என்பதை அவரது சிரிப்பு வெளிப்படுத்தியது.

எப்பிடியிருக்கிறீங்கள் ?

சின்னப் பிள்ளையா இருந்த பிள்ளை இப்ப நல்லா வளந்திட்டீங்களென்ன

சொன்னார் அம்மான்.

அம்மானின் பழைய சிரிப்பும் கதையும் அப்படியே மாறாது இருந்தது.

எங்கையிவ்வளவு நாளும் இருந்தனீங்கள்? கேட்டேன்.

இந்தியன் ஆமியிட்டைப் பிடிபட்டு இப்ப கொஞ்சநாள் தான் வெளியிலை வந்தனான்.

உண்மையாவோ ? ஆச்சரியமாய்க் கேட்ட எனக்கு....

பொய்யா சொல்றன்.... என்றார்.

அம்மம்மா எப்பிடியிருக்கிறா?

கேட்டதாச் சொல்லுங்கோ என்ன.

வேறையென்ன புதினங்கள்?

என ஆரம்பித்த கதை அனைவரின் சுக நலன்களிலிருந்து அனைத்தும் விசாரித்து விடை பெற்றார் அம்மான். அதன்பின் எங்கள் ஊரில் அம்மான் உலவித் திரிந்தார். மயிலிட்டி மண்பெற்ற அந்த மாவீரன் நெல்சன்மாமா. தனது இனிய பேச்சாலும் எல்லோரையும் எளிதில் கவர்ந்து விடும் சுபாவத்தாலும் அனேகரது நினைவுகளில் இன்றும் அம்மான் நினைவிருக்கிறார்.

இந்தியப் படைகள் எங்கள் ஊரைச் சுற்றி வளைக்கும் நாட்களில் எங்கள் ஊர் அடைக்கலம் கொடுத்த போராளிகளுள் அம்மானும் ஒருவர். கறுத்த, கட்டையான, அழகிய முகத் தோற்றமுடைய, இனிய சிரிப்புக்குச் சொந்தக்கார அம்மான் ஒரு நாள் எங்கள் ஊரை விட்டுப் போய்விட்டார்.

அம்மானெங்கை இப்ப வாறேல்ல இங்கை?

கேட்டபோது அவரது நண்பர்கள் சொன்னார்கள்....

வேறையிடத்தில நிக்கிறார்.

பின்னர் இடையிடை வீதிகளில் காண நேர்ந்தால் யாரையும் மறக்காத புன்னகையுடன் போய்விடுகின்ற அம்மான்.....

1990 இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பமாக எங்கள் ஊர் வீதியில் அம்மானின் சயிக்கிள் போய்வரத் தொடங்கியது. அதே புன்னகை அப்பப்போ நலம் விசாரித்துப் போகும் அம்மானின் இனிய சுபாவம்... பின் சிலகாலத்தில் அம்மான் வருவதேயில்லை. அம்மான் வீரச்சாவடைந்து விட்டதாக அம்மானின் நண்பர்கள் சொல்லியறிந்த செய்தி. எத்தனையோ வீரச்சாவுகளில் அந்தநிகழ்வுகளில் துப்பாக்கியுடன் வந்து தனது தோழர்களுக்கு அஞ்சலித்துப் போனதைக் கண்ட எங்களால் அம்மானின் அஞ்சலியில் கலக்கும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. அம்மான் இல்லையென்பதை இன்றும் மறுக்கும் மனதோடு அம்மானின் நினைவுகள் என் நினைவோடு.....

## இன்றைய ஜோக்ஸ்

ரகு: டாக்டர், எனக்கு குரல் மட்டும் தான் கேக்குது.. ஆனா ஆள் முகம் எதுவுமே தெரிய மாட்டேங்கிறது..
கலா: எப்போ இப்படி ஆகுது..?
ரகு: போன்ல பேசும் போது மட்டும் டாக்டர்..

• • •

பேப்பர் போடுறவன் : பேப்பர்காரன்
பால் போடுறவன் : பால்காரன்
தபால் போடுறவன் : தபால்காரன்
பிச்சை போடுறவன் பிச்சைக்காரனா?

• • •

களிமண்ணுல செடி வளரும் பாத்துருக்கேன்!
முடி வளருமா?!?!
உனக்கு வளர்ந்திருக்கே!
என்னமோ போ! விசித்திரமான உலகம்!!!


## ஒரு பேப்பர் BUSINESS DIRECTORY

சிறு விளம்பரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
0208 640 4604
0208 286 9327

**ARTISTES**

Dance
Jeyanayagam Malathy
(Lewisham)
020 8318 5818

Dance
Mehala Rajkumar
07745933215

Vocal
A.Jegathambai
020 8903 2134

**BRIDAL MAKEUP**

A.Anuratha
Croydon
Wedding & Other Occasion
07780 687 748 / 020 8668 2676

J.Tamilarasy
Kingston
Hair Styles & Facial
07951 151 135

R. Nalini
Wembley
Touch of Beauty
07729 447 220

Pakee
Purley
All In One Makeup Service
020 8645 6445

**BUILDERS**

Nesan Builders
07859 064 650
020 8239 0536

Rhino Builders
07901 687 241

**TRANSPORT SERVICES**

El Transport
Eastham
24Hours Service
07980 602 548 / 020 8470 8588

Sri Sathialingam
020 8690 3700
07949 760 931

Kumaran
Tamil Taxi Service
020 8690 3700
07949 760 931

Linges (With Driver)
Croydon, Eatham
Van Hire Local & Europe Trours
07984 497 239/07811 200 510

**CAKES FOR ALL OCCASION**

Aaravi
Croydon
Cakes for all Occasion
020 8680 2665

Kumuthini
Croydon
020 8683 1614

Pakee
Purley
Cakes for all Occasion
020 8645 6445

Hayes
Cakes for all Occasion
020 8569 2202

**CATERING**

Bama
Croydon
சகல விதமான உணவுகளுக்கும்
020 8239 7616

**WEDDING SERVICES**

திருமகள் திருமண சேவை
Pinner
07939 324 638

Tharmalingam
Coulsdon
சாதக குறிப்புகள் கணிக்க
01737 550 147

**TAILORING**

Rani Tailoring
Charges from - £10
24 Hours Service
020 8687 6867

All type of Tailoring
Hayes
020 8569 2202

**பூமாலை - பூமணவறை**

Vimala
Wimbledon
020 8239 7616

ஐயா
Wimbledon
020 8544 1312
07956 940 050

Varathan
Croydon
020 8665 6238

## இளைய கானக்குயில் 2006




*சீலன்:* என்ன சிவா, போன சனிக்கிழமை ரதியோடை Greenford பக்கம் கண்டன்.

சிவா: ஓமடா போன சனிக்கிழமை Assembley hall இலை இளைய கானக்குயில் பாட்டுப் போட்டி நடந்தது. அதுதான் ரதி ஒற்றைக் காலிலை நிண்டு இழுத்துக் கொண்டு பொயிட்டா

ரதி: ஓம் ஓம் இவர் வரப் பஞ்சிப்பட்டவர் தான். பிறகு அந்தப் பிள்ளைகள் பாடினதை ஆவெண்டு பாத்துக் கொண்டிருந்தவர்

*சீலன்:* அதெண்டால் உண்மைதான். நான் ரெண்டு மனசோடை தான் போனனான். ஆனால் சுட்டும் விழிச்சுடரே சுட்டும் விழிச் சுடரே எண்டு ஒரு சுட்டிப் பையன் ஒரு போடு போட்டதிலை இருந்து அப்படியே நிகழ்ச்சி யோடை ஒன்றிப் பொயிட்டன்.

ரதி: எங்கடை பிள்ளைகள் தமிழ் தெரியாமல் வளருதுகள் எண்டு அடிக்கடி கவலைப்படுற னீங்களெல்லே. நீங்கள் இண்டைக்கு வந்திருந் தீங்களெண்டால் உங்கடை உச்சி குளிர்ந் திருக்கும்.

*சீலன்:* ஏன் ஏசி கூடிப்பொயிட்டுதே?

சிவா: சும்மா பகிடி விடாதை, அந்தப் பிள்ளை கள் எல்லாம் தமிழ்ப் பாட்டுக்களை எவ்வளவு அழகா உச்சரிச்சுப் பாடிச்சினம். ஒரு பிள்ளை கூட கொச்சைத் தமிழிலை பாட இல்லை. அது மட்டுமில்லை. எங்கடை குழந்தைகளின்ரை வித்தியாசமான ரசனைகளையும் திறமை களையும், அடையாளங் காணக் கூடிதாயிருந் தது. ஒருநாள் போதுமா இன்றொரு நாள் போதுமா எண்டு டொக்ரர் பாலமுரளிகிருஸ்ணா வின்ரை பாட்டை ஒரு பிள்ளை பாடுது. இன் னொரு பிள்ளை காரைக்காலம்மையார் படத் திலை வந்த K.P. சுந்தராம்பாள் பாடின தகதகதக தகதகவென பாடவா எண்ட பாட்டைப் பாடுது, இன்னொரு பிள்ளை P.சுசிலாவின்ரை ஏழு சுவரங்களுக்குள் எத்தனை பாடல் எண்டு பாடுது. அந்த வித்தியாசமான ரசனையைப் பாத்து உண்மையிலை பிரமிச்சுப் போனன்.

*சீலன்:* அதுசரி இதுமாதிரி நிகழ்ச்சிகளிலை வழமையாச் சொல்லப்படுற குற்றச்சாட்டு அறிவிப்பாளர்கள் பற்றித்தான் இருக்கும். அங்கை எப்படி?

சிவா: அநியாயம் சொல்லக் கூடாது. அலட்டல் இல்லாத அதே நேரம் சபையையும் கவரக் கூடிய மாதிரி எல்லா அறிவிப்பாளர்களும் நிகழ்ச்சியைத் தொகுத்தளிச்சினம்.

*சீலன்:* சரி வழமையான பிரதான பிரச்சினைக்கு வாறன். நடுவர்களின்ரை தீர்ப்பு எப்படி?

ரதி: அங்கை நாங்கள் தானே நடுவர்கள். கலந்து கொண்ட பார்வையாளாகளின்ரை வாக்கு களிலை தான் வெற்றியாளர்களைத் தெரிஞ் செடுத்தவை. என்னைப் பொறுத்தவரையிலை ஒரு அளவுக்குச் சரியான தீர்ப்புகளாகவும் தான் இருந்தது எண்டு நினைக்கிறன். ஆனால் இசைத்துறையிலை புலமையான நடுவர் களையும் வைச்சு அரை வாசி அவையளின்ரை புள்ளிகளையும் அரைவாசி பார்வையாளர் களின்ரை தீர்ப்பாகவும் இருந்தால் இன்னும் நல்லா இருந்திருக்கும்.

சிவா: மற்றது சீலன் சரியான நேரத்துக்குத் தொடங்கி ஒரு பிரச்சினையும் இல்லாமல் திறமா நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியிருந்தவையள்.

சீலன்: சரி சிவா நீதான் குறைபிடிக்கிறதிலை விண்ணனே, நிகழ்ச்சியிலை என்ன குறை கண்டினீ

சிவா: உண்மையாச் சொன்னா குறையெண்டு சொல்லுறதுக்குப் பெரிசா ஒண்டுமில்லை. ஆனா இசைக் கருவிகளின்ரை சத்தம் கூடிப் போச்சுது எண்டு பக்கத்திலை இருந்த ஆக்கள் முணுமுணுத்தது காதிலை விழுந்தது. அந்தச் சத்தத்திலை பிள்ளைகளின்ரை பாட்டை சரியா ரசிக்க முடியாமல் போச்சுது எண்டும் சனம் கதைச்சது காதிலை விழுந்தது

ரதி: இன்னொரு விசயம் சொல்ல வேணும். இப்படியான எங்கடை பிள்ளைகளின்ரை திற மையை வெளியிலை கொண்டுவாறதுக்காண்டி வருசம் தவறாமல் நிகழ்ச்சியை நடத்துற திரு தில்லைநாதன், திருமதி யோகா தில்லைநாதன் தம்பதிகளைப் தமிழபிமானிகள் எல்லாரும் பாராட்ட வேணும்

*சீலன்:* எங்கடை பிள்ளைகளின்ரை திற மைக்கு ஒரு களம் அமைச்சுக் குடுத்து உற்சாகப்படுத்திறதைக் கட்டாயம் பாராட்ட த்தான் வேணும். நான்தான் அருமந்த chanceஐ miss பண்ணிப் போட்டன். சரி அடுத்த முறை பாப்பம்.

## செய்தித் துணுக்குகள்

குற்றச்செயலால் பாதிக்கப் பட்டோருக்கு ஆலோசனை வழங்க ஒன்பது பேர் கொண்ட சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது இதனால் குற்றவியல் நீதி ஒழுங்கில் குற்றங்களால் பாதிக்கப் பட்டோர் குரலும் கேட்க வாய்ப்பு ஏற்படுகிறது.

• • •

இந்த மாதத்திலிருந்து அமுலிலுள்ள புதிய ஒழுங்கின்படி போதைப் பொருளுக்கு அடிமையாகி சமூக விரோதச் செயற்பாட்டில் ஈடுபடுவோரை கட்டாய இலவச போதைக்கு எதிரான வைத்தியத்திற்கு உட்படுத்த காவல் துறையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

• • •

இதுவரை நடந்த பேச்சவார்த்தை ஒழுங்குகள் முழுமைபெறும் பட்சத்தில், தங்களுக்கு என்று ஒரு சுயநிர்ணய அரசை, வட அயர்லாந்து மக்கள் அடுத்த ஆண்டு மார்ச் 26ல் அமைத்துக்கொள்வார்கள்.

• • •

தங்களை நோக்கி எறியப்பட்ட கைக்குண்டிலிருந்து தன் சகாக்களைக் காப்பாற்றுவதற்காக அக்குண்டை தன் மார்புடன் அணைத்து நிலத்தில் படுத்து, மைக்கல் மன்சூர் என்னும் ஈராக்கில் பணிபுரியும் கடற்படை வீரர் தன் உடலைச் சிதறடிக்கச் செய்துள்ளார்

• • •

கொபி அனானின் பதவிக்காலம் முடிவதால் வெற்றிடமாகும் ஐ நா செயலாளர் நாயகம் பதவிக்கு தென் கொரியாவின் வெளிநாட்டமைச்சர் பான்கி மூன் தெரிவாகியுள்ளார். இந்தியாவின் சசி தரூர் வாய்ப்புக் குன்றிய நிலையில் விலகியதால் இவர் போட்டியின்றித் தெரிவானார்.

• • •

சீனாவில் அவதானிக்கப் பட்டுள்ள 50கோடி ஆண்டுகள் கொண்ட ஒரு உயிர்ச் சுவட்டின் செயற்பாடு மூலம் பல பரிணாம மறைவுகள் வெளிவர உள்ளதாம்.

பரிசீலனையில் உள்ள விமானப்பயணிகள் ஒவ்வொருவருக்கும் மின்னியல் அச்சரம் கட்டும் முறை அமுலுக்கு வந்தால் அவை ஒவ்வொன்றும் மிகத் துல்லியமாக 3 அடிக்குள் உள்ள சந்தேகப் பொருட்களைக் காட்டிக் கொடுக்குமாம்.

• • •

மாவட்டங்கள் இணைந்து சுயநிர்ணய உரிமைகொண்ட பிரதேசங்களை அமைக்க வழிவகுக்கும் மசோதா ஒன்றை இராக்கிய பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

• • •

கொழுப்புக் கூடிய பழங்களில் ஒன்றாகக் கருதப்படும் அவகாடோ உயிரச் சத்து ஈ, போலிக் அமிலம், பொட்டாசியம் போன்ற சத்துக்கள் கொண்டது. அதிலுள்ள கொழுப்பும் உடலுக்கு பாதகமில்லாத அடர்த்தி குறைந்த கொலஸ்ரோல் அற்ற கொழுப்பைக் கொண்டது.

• • •

மக்களைக் கடத்தி ஒரு நவீன அடிமைமுறை உருவாகுவதைத் தடைசெய்யும் நோக்குடன் செவ்பீல்ட்டில் உருவாகியுள்ள மனிதக் கடத்தல் மையம் பல முகவர் அமைப்புளின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி செயற்பட உள்ளது.

• • •

சீனா தனது தோழமை நாடான வட கொரியாவின் ஒரு பகுதி எல்லைக்கு கொங்கிறீற்றாலும் முட்கம்பியாலும் ஆன பாரிய வேலித்தடை போடுகிறார்கள். கள்ளக் கடத்தலையும் சட்ட விரோத ஆள் போக்குவரத்தையும் கட்டுப்படுத்தவே இதைச் செய்கிறார்கள்.

• • •

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

## கை பேசியை கள்வரிடம் பறி கொடாதீர் !

உங்கள் கைத் தொலை பேசியை கள்வர்களிடம் பறி கொடாதீர்கள். இதை நான் சொல்லவில்லை. சென்ற வாரம் குற்றச் செயலுக்கு எதிரான பிரசாரத்தை ஆரம்பிக்கும் போது இதையே முக்கிய ஆலோசனையாக வழங்கினார்கள். குற்றச் செயல்களுக்கு எதிரான பிரசாரத்தின் முக்கிய நோக்கமே தவிர்க்கக் கூடிய கைத் தொலைபேசி, சங்கீத நாடா இயக்கும் சாதனம் போன்றவற்றின் திருட்டை இல்லாது செய்வதே.


மே 2006ல் வெளியான அறிக்கையின்படி இந்த ஆண்டுதான் குற்றங்கள் ஆகக் குறைந்த ஆளவில் பதிவாகியுள்ளதாம். வீடு உடைக்கப்பட்டு நடைபெறும் களவு அரைவாசியாய் கடந்த 10 ஆண்டுகளுள் குறைந்துள்ளதாம். அதையிட்டு நாம் திருப்தியில் அக்கறை அற்று இருந்தால் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் திருடர்கள் மறுபடியும் தங்கள் கைங்கரியத்தை ஆரம்பித்துவிடுவார்கள் இதனாலேயே இந்தக் குற்றச்செயல் விழிப்பு பிரசாரம் தேவைப்படுகிறது. அதிலும் பல இலட்சம் கைத் தொலைபேசிகள் உபயோகத்தில் உள்ளதால் அவற்றின் களவு குற்றச் செயலின் ஒரு பகுதியாக உள்ளதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இங்கிலாந்திலும் வேல்ஸ் சிலும் நடக்கும் களவுகளில் ஐந்தில் ஒன்று தனிய கைத் தொலைபேசி சம்பந்தப் பட்டதுதானாம்.

ஆலோசனையுடன் மட்டும் நிற்காது, குற்றவியலின் விசேட பிரிவினர் களவுபோகும் கைத் தொலைபேசிகளை புதிய தொழில் நுட்பம்மூலம் செயல் இழக்கச் செய்யும் வழிமுறையையும் கையாளுகிறார்கள். இதனால் கள்வர் எடுக்கும் தொலைபேசிகளை அவர்களும் உபயோகிக்க முடியாததும் வெளியில் விற்க முடியததுமான சூழல் தோன்றி களவே நடக்காது.


NAG & CO
Solicitors

Happy Diwali


Tel: 020 7737 1211 / Fax: 020 7737 0809
Unit 3, Holles House, Overton Road
Myattsfield Road South, London Sw9 7JN
(Nearest underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line)



பல் வெண்மையாக்கல்
**Tooth Whitening**




பல் ஒழுங்கு சிகிச்சை
**Orthodontics**



இம்பிளான்ற்
**Implantology**

பல் சம்பந்தமான சகல சிகிச்சைகளும்
ஒரே இடத்தில்




**Tooth Whitening**




டாக்டர் டி.வீ.பழனிவேல்
**FDSRCS (England)**
**290 High Street North**
**Manor Park, Eastham**
**London**
**E12 6SA**

**0208 552 1626**

**Underground**
**Eastham**
ஐந்து நிமிடம்




**Restoration**
சிதைந்த பற்களை
மீளமைத்தல்




இம்பிளான்ற்
**Implant**



முரசு அழற்சிக்கு சிகிச்சை



பல் அழகியல்



**Cosmetic Dentistry**

# தமிழ் வளர்க்கும் பாடசாலைகளின் அறிமுகம் - கெண்டன் தமிழ்ப் பாடசாலை







## கெண்டன் தமிழ் பாடசாலையின் வரலாறு

தமிழ் மொழியிலும், கலையிலும் ஆர்வம் கொண்ட பெற்றோர், நலன்விரும்பிகளினால் கெண்டன் தமிழ் பாடசாலை கார்த்திகை மாதம் 2002 இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை கார்த்திகை 2005 வரை Hendon High School இல் நடைபெற்று வந்தது. அதிக பிள்ளைகளின் எண்ணிக்கையினாலும், வகுப்பறைகள் பற்றாக்குறையினாலும் Cannon High School, Shaldon Road, Edgware, Middlesex, HA8 6AN (Queensbury circle) என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் 1.30 மணி வரை நடைபெறும் பாடசாலையில் 2 மணித்தியாலங்கள் (9.00-11.00) தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படுகிறது.

தற்பொழுது200க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ் மொழி, சமயம், பரதநாட்டியம், வயலின், வீணை, மிருதங்கம், வாய்பாட்டு, புல்லாங்குழல், சுரத்தட்டு, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை மிகவும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடம் இருந்து கற்று வருகிறார்கள்.

இப்பாடசாலை ஒரு பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை. ஒன்பது பேர் கொண்ட நிர்வாகக் குழு, ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும், சமூக நலன்விரும்பிகளினதும் உதவியுடன் பல கஷ்டங்களின் மத்தியிலும், தமிழ்ப் பிள்ளைகளினதும், தமிழினத்தினுடைய எதிர்கால நன்மை கருதியும் திறம்பட நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

தாயகத்தில் துன்பமுறும் மக்களின் விடிவு கருதி பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் தாயக உணர்வோடு பல நிகழ்ச்சிகளிலும் முன்னின்று பல உதவிகளைச் செய்து வருகின்றார்கள். சுனாமிப் பேரழிவு நடந்து ஒரு கிழமைக்குள் 5000 பவுண்களை மாணவர்கள் சேகரித்து வெண்புறா நிதிக்கு கொடுத்து உதவினார்கள். பாடசாலை மாணவர்கள் பல தரப்பட்ட பரீட்சைகளில் பங்குபற்றி திறமைச் சித்தியை எய்தியுள்ளார்கள். அண்மையில் நடந்த Cambridge (O/L) Tamil பாடத்தில் `A` பிரிவிலும் சித்தியடைந்துள்ளார்கள். இப்பாடசாலையில் படித்த இரு மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது. பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத் துறையிலும் பல வெற்றிகளை சாதித்துள்ளார்கள். இப்பாடசாலையில் பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, பேச்சுப் போட்டி, சரஸ்வதி பூசை, பொங்கல் விழா, நத்தார் கொண்டாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் வருடாவருடம் ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் அயரா முயற்சியினால் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

## இளையோர் ஆக்கங்கள்

### How life is in Tamil Eelam



When I grow up I want to be a nurse or perhaps a doctor for the people of Tamil Eelam. A actually don't mind, I just want to be a helping hand for the people of Tamil Eelam Because I feel so sad for the people of Tamil Society when I look at Tamil news in TTN (Tamil Television Network)

I love going to Tamil Eelam because I go to see my grandparents and my aunty, I also love traveling around Tamil Eelam looking at the different places, jobs, buildings, cricket grounds and shops.


Life is harder in Tamil Eelam compared to United Kingdom because of the war between the Sri Lankan and Tamil Tigers

The Sri Lankan government is very unfair because most of the Sinhalese people are prime ministers, Presidents and members of Parliament there is only a few Tamil people that are members of parliament they do not have as much power as the Sinhalese. I wish this changes soon, I hope you do too!

*- Geerthani .G (11 yrs)*





தமிழே எங்கள் தாய் மொழியாம்
தமிழே எங்கள் உயிர் மொழியாம்
தமிழர் என்று சொல்வோமே
தமிழைப் பேசத் தயங்கோமே

உங்கள் பாடசாலை சம்பந்தப்பட்ட விபரங்களும் இப்பகுதியில் இடம்பெற எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

### ஆத்திசூடி

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்

WORCESTER PARK MINI MARKET

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

180 Central Road, Worcester Park, Surrey KT4 8HQ

Tel: 020 8330 1113

# தமிழ் ஒளி



**தரணி எங்கும் தமிழர் விம்பம்**

www.tvttn.com

இலண்டன் 020 8100 0000 பாரீஸ் 331 48393429

## 21.10.2006 முதல் 03.11.2006 வரை நிகழ்ச்சி நிரல்

### சனி

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | புன்னகைப் பூக்கள் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | புதினக் கண்ணாடி |
| 11:30 | சங்கே முழங்கு |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | புதிய பாடல்கள் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | பார்த்தேன் பகர்ந்தேன் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | திரைச்சித்திரம் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | நலவாழ்வு |
| 17:30 | வண்ண சிறகடித்து |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | நிருத்திய சங்கமம் |
| 18:30 | பாடல் கலசம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | வைத்திலிங்கம் சோ |
| 19:30 | ராக மாலிகா |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | செய்திக் களம் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | திரை விருந்து |

### ஞாயிறு

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | சிறுவர் கதம்பம் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | வணக்கம் ஐரோப்பா |
| 10:30 | வணக்கம் ஐரோப்பா |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | ஒளிக்கீற்று |
| 11:30 | ஒளிக்கீற்று |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | அறிவுச்சமர் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | பாடல் பிறந்த ராகம் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | புதிய பாடல்கள் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | அபிநயதாரகைகள் |
| 17:30 | திரை விமர்சனம் - உயிர் |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | நாத விநோதம் |
| 18:30 | நாத விநோதம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | படலைக்கு படலை |
| 19:30 | தில்லலே தில்லாலே- சுரேஸ் கிருஸ்ணா ? |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | சுப்பர் மடம் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | திரை விருந்து |

### திங்கள்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | ராக மாலிகா |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நிலவரம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | புதினக் கண்ணாடி |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | நோர்வே நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | வண்ணத்திரையில் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - நிலவரம் |
| 21:30 | திரை விருந்து |

### செவ்வாய்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | அபிநய தாரகைகள் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நகைச்சுவை நேரம் |
| 11:30 | நிருத்திய சங்கமம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | சிறுவர் கதம்பம் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | சுவிஸ் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா |
| 22:30 | செய்திக்கண்ணோட்டம் |
| 23:30 | கேட்டதில் இனித்தது |

### புதன்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | பாடல் கலசம் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நகைச்சுவை நேரம் |
| 11:30 | சுப்பர் மடம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | வாராந்த அரசியல் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | அறிவுச்சமர் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | இலண்டன் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | அதிர்வு |
| 22:30 | வாராந்த அரசியல் |
| 23:00 | இனிய ராகங்கள் |

### வியாழன்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | திரை விமர்சனம் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | தில்லேலே தில்லேலே |
| 11:30 | வைத்திலிங்கம் சோ |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | சிறப்புவிருந்தினர்-நடிகர் அலெக்ஸ் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - அதிரடி அலசல் |
| 21:30 | ஆடுகளம் |
| 22:30 | குறும்படம் |
| 23:00 | இலண்டன் நேரம் - தேமதுரம் |
| 23:30 | என்றும் இனிமை |

### வெள்ளி

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | அதிரடி அலசல்? |
| 11:30 | படலைக்குப் படலை |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | சங்கே முழங்கு |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | ஜேர்மன் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | இது உங்கள் நேரம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - அம்பலம் |
| 21:30 | திரை விருந்து |

## தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகள்

- புதிய திரைப்படம் இம்சை அரசன் 23ம் புலிகேசி 21.10.06 21.30pm
- பட்டிமன்றம்
- சுசீலா & ஜானகி இசைநிகழ்ச்சி 2006
- தமிழ்நாட்டு இளம் முன்னணி நட்சத்திரங்களின் நேர்காணல் லண்டனிலிருந்து
- ஐரோப்பிய வாழ் தமிழ் மக்களால் ஐரோப்பாவில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள்

### சனி

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | புன்னகைப் பூக்கள் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | புதினக் கண்ணாடி |
| 11:30 | சங்கே முழங்கு - |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | புதிய பாடல்கள் |
| 12:30 | நான் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | பார்த்தேன் பகர்ந்தேன் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | திரைச்சித்திரம் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | நலவாழ்வு |
| 17:30 | வண்ண சிறகடித்து |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | நிருத்திய சங்கமம் |
| 18:30 | பாடல் கலசம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | வைத்திலிங்கம் சோ |
| 19:30 | ராக மாலிகா |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | செய்திக் களம் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | திரை விருந்து |



### ஞாயிறு

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | சிறுவர் கதம்பம் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | வணக்கம் ஐரோப்பா |
| 10:30 | வணக்கம் ஐரோப்பா |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | ஒளிக்கீற்று |
| 11:30 | ஒளிக்கீற்று |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | அறிவுச்சமர் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | பாடல் பிறந்த ராகம் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | புதிய பாடல்கள் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | அபிநயதாரகைகள் |
| 17:30 | திரை விமர்சனம் - உயிர் |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | நாத விநோதம் |
| 18:30 | நாத விநோதம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | படலைக்கு படலை |
| 19:30 | தில்லலே தில்லாலே- சுரேஸ் கிருஸ்ணா |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | சுப்பர் மடம் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | திரை விருந்து |





### திங்கள்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | ராக மாலிகா |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | என்றென்றும் புன்னகை |
| 11:30 | நிருத்திய சங்கமம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | திரைமெட்டுக்கள் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | புதினக் கண்ணாடி |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | நோர்வே நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | வண்ணத்திரையில் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - நிலவரம் |
| 21:30 | திரை விருந்து |



### செவ்வாய்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | அபிநய தாரகைகள் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நிலவரம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | திரைமெட்டுக்கள் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | சிறுவர் கதம்பம் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | சுவிஸ் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா |
| 22:30 | செய்திக்கண்ணோட்டம் |
| 23:30 | கேட்டதில் இனித்தது |



### புதன்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | பாடல் கலசம் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | என்றென்றும் புன்னகை |
| 11:30 | திரை விமர்சனம் - இம்சை |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | திரை சித்திரம் |
| 12:30 | வாராந்த அரசியல் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | அறிவுச்சமர் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | இலண்டன் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | அதிர்வு |
| 22:00 | திரை விருந்து |



### வியாழன்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | தில்லேலே தில்லேலே |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | என்றென்றும் புன்னகை |
| 11:30 | வைத்திலிங்கம் ஷோ |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | திரைமெட்டுக்கள் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | பார்த்தேன் பகர்ந்தேன் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | சிறப்புவிருந்தினர் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - அதிரடி அலசல் |
| 21:30 | ஆடுகளம் |
| 22:30 | குறும்படம் |
| 23:00 | இலண்டன் நேரம் - தேமதுரம் |
| 23:30 | என்றும் இனிமை |



### வெள்ளி

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | கோவில் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | அதிரடி அலசல்? |
| 11:30 | படலைக்குப் படலை |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | திரைமெட்டுக்கள் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | ஞானசௌந்தரி |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | ஜேர்மன் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | இது உங்கள் நேரம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - அம்பலம் |
| 21:30 | திரை விருந்து |



நிகழ்ச்சிகளில் நேர மாற்றங்கள் முன் அறிவித்தலின்றி மாற்றப்படலாம்.

# சாமத்திய சடங்கு தேவைதான்!

கடந்த வாரங்களில் பெண்களுக்குரிய பக்கத்தில் வந்த சந்திரவதனாவின் சந்தேகங்களுக்கு விடை கிடைக்க வேண்டும். அது தர்க்கரீதியானதாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

சந்திரவதனாவின் சந்தேகத்திற்கு விடை, ஒரு ஆண் மகன் பிறக்கும் போதே விதைகளின் தொழிற் பாடு செயற்படுவதால் அவன் எந்த நேரத்திலும் விந்தினை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் பெண் கரு உற்பத்திக்கு தயாராக இருக்கும் பருவம் சாமத்திய சடங்குதான். ஆணின் விந்து உற்பத்தியின் முடிவுக் காலம் இல்லை. ஆனால் பெண்ணின் கரு உற்பத்தி ஒரு குறிக்கப்பட்ட காலப்பகுதி தான். இதை சுந்தரி அவர்களும் மறைமுகமாக குறிப்பிட்டுள்ளார். சிறுவர், சிறுமிகளுடன் ஓடித் திரிந்து விளையாடிய சிறுமிக்கு எங்கள் நாட்டில் சீதனம் என்ற பதம் நடை முறையில் இருப்பதால், பெற்றோர்கள் அந்த சிறுமிக்கு சாமத்திய சடங்கு மூலம் வாழும் வழி முறைகளைக் கற்று கொடுப்பதோடு கூடித் திரிந்து விளையாடிய சிறுவர் சிறுமிகளிடத்து வேறுபடுத்திக் காட்டுவதுடன் உற்றார் உறவினர் அயலவர் அனைவர்க்கும் இவளுக்கு இனி பாதுகாப்புத் தேவை என்பதை தெரியப்படுத்துவதற் காகவும் கொண்டாடப் படுகிறது.

இந்த சாமத்திய சடங்குகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் இல்லாததினால் தான் எத்தனை சிறுமிகள் முதல் கருவிலேயே கர்ப்பம் தரித்து குழந்தைகளை பெற்றிருக்கிறார்கள் என்பதை சந்திரவதனா உணர வேண்டும். உலகிலேயே மிகச் சிறிய வயதில் குழந்தையை பெற்றது என்றால் அது இந்த வளர்ச்சி யடைந்த நாடுகளில் தான். எந்தளவிற்கு மருத்துவ வசதிகள் இருந்தும் இந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் இப்படி குழந்தையை பெற்றெடுக்கிறார்கள் என்றால் வளர்ச்சியடைந்து வரும் எங்கள் நாட்டில் எப்படி இருக்கும்? இதற்காகத்தான் எமது இன மக்கள் எமது பாரம்பரியத்தை கடைப்பிடித்து வருகிறார்கள்.

வீடியோ என்பது பொதுவாக எல்லா வைபவங்களுக் கும் எடுப்பது நன்று. ஏனெனில் ஒரு நாளில் நடக்கும் விடயம் அதை எப்போதுமே பார்த்து சந்தோசமாக இருக்கவும் அந்த வைபவத்திற்கு சமூகமளிக்காதவர்கள் பார்ப்பதற்கும் நன்று என்பதால் எடுக்கப்படுகிறது. மற்றது சுந்தரி அவர்கள் கூறிய ஒரு விடயம். இந்த வெளிநாடுகளில் இப்படியான வைபவங்களை சந்திர வதனா குறை கூறவில்லையே என்று சில சம்பிரதாயங் களை எடுத்து கூறினார். இந்த வைபவங்களில் திருமணம் என்ற ஒரு விடயத்தில் எனக்கு ஒரு சந்தேகம். திருமண வீடன்று எழுத்தும் நடக்கிற வைபவத்தில் பந்தி இருத்தும்போது மாமிச உணவு பரிமாறப்படுவதில்லை. சைவ உணவுதான் பரிமாறப்படுகிறது. அதே இடத்தில் எழுத்திற்கு கேக் வெட்டி உணவாக பரிமாறுகிறார்களே. அதுதான் விளக்கமில்லை. ஏன் இந்த இரட்டை வேடம்?

மற்றது சந்திரவதனாவின் புரியாத புதிர் ஒன்றை முன்னைய இதழில் கேட்டிருந்தா. அதாவது நம்ம ஊர் காதல் மட்டுமா காதல் என்று கேட்டு. அதற்கு விளக்கமும் கொடுத்திருந்தா. நம்ம ஊரில் பேசி செய்யப்பட்ட திருமணங்களால் எத்தனையோ பெண்கள் துன்பங்களை சுமந்து கொண்டு விவாகரத்துப் பெறாமல் வாழ்கிறார்கள் என்றும் காதலித்து திருமணம் செய்தவர் களும் துன்பப்பட்டு வாழ்கிறார்கள் என்றும் கூறியிருந்தா. அதேநேரம் இங்கு நீண்டகாலமாக ஒருவரோடு பேசி அவரைப் புரிந்துகொண்டு திருமணம் செய்து நீண்ட காலமாக வாழ்கிறார்கள் என்று கூறியிருந்தா.

இந்த நாடுகளில் எத்தனை காதலை விவாகரத்து செய்து புதுப் புதுக் காதலை உடன் தேவைகளுக்காக வளர்க்கிறார்கள் தெரியுமா? சந்திரவதனா கூறிய கலந்து பேசி காதலிக்கிறார்கள் என்பது பொய். இங்கு கண்டதும் காதல் ஒன்று. காசு இன்னொன்று, கார், பங்களா, இன்னொன்று உடலமைப்பு. இவைகளைக் கண்டதும் காதல். இங்கு வெள்ளையினப் பெண்கள் கறுப்பின ஆண்களை கூடுதலாக நாடுவது ஏன்? கலந்து பேசிய காதலா? தயவு செய்து எங்கள் நாட்டு கலாச்சாரத்தை இங்கே ஒப்பிடாதீர்கள். அந்த கலாச்சாரத்தை பின்பற்று பவர்கள் மனம் தளரக்கூடாது. தரமான கேள்விகளை கேட்டு தரமான பதில்களை மக்களுக்கு உரைத்து நல்ல சமுதாயம் மலர வைப்பீர்களாக.

*- கிளியின் கண் ஊரான்*

## ஆச்சியிடம்... அட்வைஸ்!

aachi@orupaper.com

*கேள்வி:* எனது பெயர் திருமதி. சறோஜாதேவி நான் லண்டன் வந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. எனது கடைசி மகனுக்கு இங்கு வரும் போது வயது 11, வந்த அடுத்த வருடமே குடும்ப தகராற்றினால் எனது கணவருடன் இருந்து பிரிந்து தனிய பிள்ளைகளுடன் வசிக் கின்றேன்.. எனது மகன் நான் கண்டித்தால் தகப்பனிடம் போய் இருப்பார். பிறகு அவர் கண்டித்தால் என்னிடம் வேறு கதையுடன் வருவார். எனக்கு உறவினர் நண்பர் களும் இல்லை இப்பிடியே வளர்ந்து இப்போ 16 வயது முடிந்து விட்டது இப்போது ஒருவரின் சொல்லும் கேட்ப தில்லை, படிப்பும் ஏறவில்லை. நடை உடையும் மாறிகூடும் கூட்டுக்களும் சரியில்லை. கேள்வி கேட்டால் சரியான பதிலும் சொல்வதில்லை. தன்னுடைய அறைக்குள் ஒருவரையும் விடுவதில்லை. என்னையும் மதிப்பதில்லை. நான் என்ன செய்வது?.

### ஆச்சியின்... அட்வைஸ்!

பிள்ளைகளின் இளவயதில் குடும்பங்கள் பிரிவது, பிள்ளை களை மனரீதியாக மிகவும் பாதிக்கும் விடயம். ஒப்பீட்டு ரீதியில் எமது சமூகத்தில் பிரிவது குறைவு என்பதால் இதில் சமூகத்தில் இருந்து வரும் தாக்கங்களையும் எதிர் கொள்ள வேண்டும். குடும்ப பிரச்சனைகள் பிள்ளை களுக்கு தெரியத் தேவையில்லை என்று மூடி மறைக்காது அவரவர் வயதிற்கு ஏற்ப மனம் விட்டுக்கதைத்தால் பெற்றோரின் பிரச்சனைக்குள் தாம் குளிர்காயாது, அதை விளங்கிக் கொண்டு நடக்கப் பழகுவார்கள்.

16 வயது, கொஞ்சம் காலம் பிந்தி விட்டாலும் இன்னும் முயற்சிக்கலாம். அல்லது பிள்ளைகள் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் ஒருவரின் மூலமாகவும் (உறவினர், வைத்தியர், ஆசிரியர், சிறுவர் நல ஆலோசகர்) முயற்சிக்கலாம். அவர்களின் உடை மாற்றம் தலைவெட்டு என்ற வெளித்தோற்றத்தைப் பற்றி விமர்சித்து கேள்விகள் கேட்டு உங்களுக்கிடையான இடைவெளியை அதிகமாக்காது. அவரின் உளமாற்றங் கள், குடும்பம் பற்றிய எதிர்பார்ப்புக்கள், பொழுதுபோக்கு கள் என்பது பற்றி பக்குவமாக ஒரு சினேகிதன் போலக் கதைத்து இடைவெளியைக் குறைத்துக் கொள்ளுங்கள். மாற்றம் தானாகவே தெரியும்.

*ஆச்சியிடம் அட்வைஸ் கேட்க விரும்புபவர்கள், உங்கள் கேள்விகளை ஒரு ஒரு பேப்பர் முகவரிக்கோ, மின்னஞ்சலுக்கோ எழுதி அனுப்பலாம். உங்கள் தனிப்பட்ட விபரங்களின் நம்பகத்தன்மை பேணப் படும்.*

## சுகந்திக்கு வசந்தி எழுதும் கடிதம்

நலம் நாடலும் அதுவே!

அன்புத் தோழி சுகந்திக்கு வசந்தி எழுதுவது, உன் கடிதங்கள் இப் போதைக்கு எனது கரங்களுக்குக் கிடைக்கவில்லை. கப்பலில் கட்டு வந்ததாகக் கூறுகிறார்கள். ஒருவேளை உன் கடிதங்கள் அவற்றில் வந்திருக்கலாம். கைக்கு எப்ப வந்து சேரும் என்று சொல்ல இயலாது நிலமை அப்படி.

என்னமோ இப்ப கொஞ்ச நாட்களாக எங்கட சீவியம் பெரிய கேள்விக்குறியா மாறிக் கொண்டிருக்கு. எப்ப ஆமி வந்து சுத்தி வளைக்கிறான் தேடுதல் நடத்துகிறான் என்று விளங்கிக் கொள்ளவே முடியுதில்லை. ஆனா ஒன்று மட்டும் விளங்குது சரியான கிலிப்பிடிச்சுக் கிடக்கிறாங்கள். சொன்னாச் சிரிப்பாய்! இவனுகள் தேடுதல் வேட்டை என்று ஊரையே சுத்தி வளைச்சு முழத்திற்கு ஒருவனாக உள்ள இடமெல்லாம் நின்று உபத்திரவம் குடுத்துக் கொண்டிருந்த அண்டைக்கு நாங்களும் என்ன செய்ய மனசுக்குள்ள திட்டித் தீர்த்தபடி முற்றத்தில நிற்கிறம்.

இவனுங்கள் வீட்டுக்குள்ள தேடுதல் நடத்த வெளிக்கிட அந்த நேரம் பார்த்து எங்கட வீட்டுப் பூனையும் அணிலும் ஓடிப்பிடிச்சு விளையாட குசினித் தட்டில கழுவிக் காயவிட்டுக் கிடந்த இரும்பு உரல் தட்டுப்பட்டு விழ சத்தத்தைக் கேட்டவங்கள் ஓடித்தப்ப வெளிக்கிட்டு தூதுவளைப் பந்தலுக்குள் அகப்பட்டு விழுந்து குசினியை நோக்கி 500, 600 குண்டுகளைப் பொழிஞ்சாங்கள் பார்.

விசயம் தெரிஞ்ச நாங்களே வெலவெலத்துப் போனம். அதோட விட்டாங்களோ? எங்களைக் கவசமாக்கிக் கொண்டு குசினிக்குள் உவங்கள் நுழையப்பட்டபாடு? வாழ்க்கையில இப்படி ஒரு இராணுவ நகைச்சுவையை நேரடியாக ஆரும் பாத்திருக்க ஏலாது.

கதையோட கதையாக உங்கட இடத்தில பொம்பிளையளுக்கு நல்ல சலுகையள் என்று சொன்னனீதானே அது எப்பிடிப்பட்டது என்று எனக்கும் விளக்கமா எழுதினா என்ன குறையவா போகிறாய்? ஏன் கேட்கிறன் என்று யோசிக்க வேண்டாம். அங்க இருந்து வாறவை சொல்ற கதைகள் எவ்வளவுக்கு உண்மையென்று அறியத்தான்.

மற்றது எங்க வீட்ல வெளிநாட்டு மாப்பிள்ளை வேணுமென்று தேடித் திரியினம். சரியாகப் பொருந்தி வாறவை வெள்ளைத்தோல் வேணுமாம் அதோட. அதைப்பிறகு அடுத்த கடிதத்தில எழுதுகிறன். எனக்கு வெளி நாட்டுக்கு வர விருப்பம் இல்லை ஆனா என்னுடைய எண்ணங்களை ஆருக்கும் சொல்ல முடியேல்லை.

சொன்னாலும் கேட்கிற அளவுக்கு என் பெற்றோரும் இல்லை. நியாயப் படுத்திறதிற்கு நாட்டு நிலமையும் இடம் கொடுக்குதில்லை. இதை விளக்கி எழுதத்தொடங்கினா பாரதம் மாதிரி நீளும் அதால இந்தக் கடிதத்தை இப்ப நிறைவு செய்கிறன். பிறகு மற்றக் கடிதத்தில் எழுதுகிறன்.

இப்படிக்கு

*உன் இனிய தோழி வசந்தி*

## மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னைக் கொளுத்துவோம்

போன முறை சாமத்திய சடங்கு தேவைதான் என்று எழுதிய கட்டுரை க்கு சாதமாகவும் பாதகமாகவும் தொலைபேசியின் ஊடாக கருத்துக்கள் சொன்னார்கள். நன்றி. அதை அப்பிடியே கொஞ்சம் இருந்து எழுதி போட்டி ருந்தாலோ அல்லது emailலில் அனுப்பியிருந்தாலோ உதவியாக இருந்திருக்கும். ஒரு வேளை எமக்கு ஓடியோ டைப்பிங் தெரியும் என அவர்கள் நினைத்திருக்கலாம்!.. ம்.. அதையும் பழக வேண்டியதுதான்.

தாயகத்திற்கான கடிதத் தொடர்பு பிரச்சனையால் வசந்தியும் சுகந்தியும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் புறா விடு தூதுக்கு, அதிக தூரம் பறக்கக் கூடிய புறாக்கு விளம்பரம் கொடுப்பது பற்றி ஆலோசித்து வருகிறோம். மற்றும்படி இப்போ கொஞ்ச நாள்களாக அட்டைப் பக்கத்தில் வரும் பெண்கள் யார்? என்றும் கேட்டிருந்தீர்கள்..வேறு யார்!.. சீமான் பொது சனம் தான்!!

- ஒரு பேப்பர் காரிகள்

SATHY ESTATES LTD.

'To Buy or Sell your Home'

'To Rent or Let your Home'

Residential Sales and Lettings.

In London Boroughs of Brent, Harrow, Ealing, Barnet, Hammersmith, Fulham & Westminster.

We always have a large selection of houses & flats to choose from, to meet your needs!

www.sathy.com

**Harlesden Office**
220 High Street
Harlesden, London
NW10 4SY
Tel: 020 8961 9613
Fax: 020 8961 9614

**Stanmore Office**
306 Honeypot Lane
Stanmore, Middx.
HA7 1LY
Tel: 020 8204 9444
Fax: 020 8204 2666

**Harrow Office**
117 Headstone road
Harrow, Middx.
HA1 1PG
Tel: 020 8861 1110
Fax: 020 8861 1011

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக *ஒரு பேப்பர்* நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'4" உயரமுள்ள, லண்டனில் 10 வருடங்களாக வசிக்கும் மணமகனுக்கு சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 906

2) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5'5" உயரமுள்ள, லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும் O/L படித்த மணமகனுக்கு தகுந்த வரனை உறவினர் தேடுகின்றனர். Ref: 905

3) Jaffna Uncle looking for his nephew 34 years, 5'8" tall, a British Citizen, Graduate in Information Technology, employed as Software Engineer in a multinational company in Cambridge, a professional partner living in U.K. Ref: 904

4) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'11" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் Ph.D பட்டதாரி, விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு லண்டனிலுள்ள சகோதரி தகுந்த வரனைத் தேடுகின்றார். Ref: 903

5) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'7" உயரமுள்ள, A/L படித்த, பிரிட்டிஷ் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த வரனை உறவினர் தேடுகின்றனர். Ref: 902

6) சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது பிரான்சில் வசிக்கும் 30 வயது 5' உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை சகோதரி தேடுகின்றார். Ref: 901

7) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'7" உயரமுள்ள M.Sc பட்டதாரி, மருத்துவத்துறையில் உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு சகோதரி தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 900

8) Jaffna Parents looking for their son 45 years, 5'7" tall, Canadian Citizen, working in Canada as an Accountant, a suitable groom. Ref: 799

9) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'7" உயரமுள்ள, 6 வருடங்களாக லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 798

10) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'7" உயரமுள்ள, லண்டன் நிரந்தர வதிவிடஉரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த வரனை சகோதரன் தேடுகின்றார். Ref: 797

11) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 24 வயது 5'7" உயரமுள்ள, தற்போது மட்டக்களப்பில் Computer Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் உள்ள அக்கா தேடுகிறார். Ref: 796

12) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'7" உயரமுள்ள, MBBS Doctor ஆக வவுனியாவில் வேலைசெய்யும் மணமகனுக்கு தகுந்த வரனை லண்டனில் உள்ள சகோதரி தேடுகிறார். Ref: 795

13) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'7" உயரமுள்ள, கனடாப் பிரஜாவுரிமையுள்ள Engineer ஆக வேலைசெய்யும் மணமகனுக்கு தகுந்த வரனை தாயார் தேடுகிறார். Ref: 794

14) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 53 வயது 5'11" உயரமுள்ள லண்டனிலுள்ள விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு கனடாவில் மணப் பெண்ணை தேடுகிறார்கள். பிள்ளைகள் உள்ள விதவைகளும் விண்ணப்பிக் கலாம். Ref: 793

15) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'4" உயரமுள்ள Ecectronic Engineering படித்த லண்டனில் உள்ள மணமகனுக்கு சகோதரி தகுந்த மணமகளைத் தேடுகிறார். Ref: 792

16) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'7" உயரமுள்ள 6 வருடங்களாக லண்டனில் தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை U.S.A/Canada/Europe இல் பெற்றோர் தேடுகின்றனர். Ref: 791

17) Jaffna Parents looking for their son 41 years 5'7" tall, an UK, B.Sc IT Graduate, now in real estate business, a suitable bride. Ref: 790

18) Jaffna mother looking for her son 36 years old 5'7" tall, educated & now working as Duty Manager at a leading super market in UK, a suitable bride. Ref: 789

19) Brother looking for his brother, 36 years 5'7" tall, working as a Information officer at NGO in Colombo, a suitable bride. Ref: 788

20) கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 39 வயது 5'7" உயரமுள்ள, லண்டனில் Assistant Manager ஆக வேலைசெய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை சகோதரி UK/Canada இல் தேடுகிறார். Ref: 787

21) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது 5'3" உயரமுள்ள UK இல் PR உடன் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை ஜேர்மனியில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார். Ref: 786

22) Jaffna parents, living in U.K seeking for their professionally qualified son, a UK citizen, 28 years 5'11"tall, a suitable bride. Ref: 784

23) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 42வயது 5'7" உயரமுள்ள, MBBS பட்டதாரி விவாகரத்துப் பெற்ற பிள்ளைகள் அற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 783

24) Jaffna parents, living in U.K seeking for their son 27 years 5'8"tall, a Graduate working as an Accountant a suitable bride with traditional values. *Ref: 780*

25) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இங்கிலாந்தில் நிரந்தர வதிவிடவுரிமை பெற்ற பட்டதாரி, 33 வயது 5'7"உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 779

26) Sister seeks for her brother 38 years old 5'6" tall a British citizen working as a computer consultant, westernised, a suitable, fluent in English bride.Ref: 778

27) Jaffna Parents seek for their son, 33 years, 5'6" tall, UK educated ,B.Sc qualified, a citizen of UK & a divorcee, a suitable bride in UK/Canada/ USA. Ref: 777

28) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'5" உயரமுள்ள, கண்டியில் டாக்டராக பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையில் சகோதரன் தேடுகின்றார். Ref: 775

29) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5'7", 8 வருடங்களாக லண்டனில் தொழில் புரியும் மணமகனுக்கு சகோதரி தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 771

30) சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டனில் வசிக்கும் 32 வயது 5'11" உயரமுள்ள, லண்டன் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள A/L படித்த மணமகனுக்கு சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 769

31) சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டனில் வசிக்கும் 29 வயது 5'4" உயரமுள்ள, லண்டன் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள A/L படித்த மணமகனுக்கு சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 768

## மணமகன் தேவை

1) Jaffna Parents living in U.K, looking for their UK born daughter 33 years, 5'3" tall, working as IT Analyst, at a well known company in London, a suitable groom. Ref: 1203

2) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'4" உயரமுள்ள, Assistant Account ஆக லண்டனில் வேலைசெய்யும் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு தகுந்த படித்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1202

3) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'4" உயரமுள்ள, திருகோணமலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் மணமகளுக்கு தகுந்த வரனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1201

4) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5'7" உயரமுள்ள, பட்டதாரி ஆசிரியையாக வேலணையில் கடமையாற்றும் மணமகளுக்கு தகுந்த வரனை லண்டன்/கனடா ஆகிய நாடுகளில் பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1200

5) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'5" உயரமுள்ள, IT in Professional படித்த மணமகளுக்கு தகுந்த வரனை பிரான்சிலுள்ள சகோதரன் தேடுகின்றார். Ref: 1099

6) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5'7" உயரமுள்ள, தற்போது அங்கே Diploma Teacher ஆக கடமையாற்றும் மணமகளுக்கு லண்டனிலுள்ள சகோதரி தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றார். Ref: 1098

7) முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'6" உயரமுள்ள, Management Degree படித்த, தற்போது அங்கே Program Assistant ஆக கடமையாற்றும் மணமகளுக்கு தகுந்த வரனை கனடாவிலுள்ள சகோதரன் தேடுகின்றார். Ref: 1097

8) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 39 வயது 5'3" உயரமுள்ள, அரச உத்தியோகத்தில் உள்ள படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் உள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1096

9) Jaffna Parents living in U.K, looking for their daughter 27 years, 5'3" tall, B.Sc (Hons) in Diagnostic Radiogaphy, working in St.Healier Hospital, a suitable groom. Ref: 1095

10) Jaffna Parents looking for their daughter 34 years, 5'6" tall, B.Sc Graduate, working in Sri lanka, a suitable groom. Ref: 1094

11) சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5'3" உயரமுள்ள, O/L படித்த மணமகளுக்கு பிரான்சிலுள்ள சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1093

12) Jaffna Parents looking for their daughter 39 years, 5'3" tall, B.A(Hons), U.K citizen, working as an accountant, a suitable groom. Ref: 1092

13) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'3" உயரமுள்ள, O/L படித்த மணமகளுக்கு ஜேர்மனியில் வசிக்கும் சித்தி தகுந்த வரனைத் தேடுகின்றார். Ref: 1091

14) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள தற்போது வவுனியாவில் வேலை பார்க்கும் மணமகளுக்கு தகுந்த வரனை லண்டனில் உள்ள சகோதரன் தேடுகின்றார். Ref: 1090

15) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'4" உயரமுள்ள, கொழும்பில் Science Trained teacher ஆக வேலைசெய்யும் மணமகளுக்கு தகுந்த வரனை பிரான்சிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1089

16) Jaffna Parents living in U.K looking for their British citizen daughter 26 years old, 5'3" tall, professionally qualified and working as an accountant, asuitable groom. Ref: 1088

17) Jaffna parents looking for their daughter 35years old, 4'9" tall, trained teacher in Jaffna, a suitable groom. Ref: 1087

18) சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'3" உயரமுள்ள, CIMA final year படித்துக்கொண்டு Finance officer ஆக பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த வரனை லண்டனில் உள்ள சித்தி தேடுகின்றார். Ref: 1086

19) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 50 வயது 5'3" உயரமுள்ள, 4 வருடங்களாக பிரான்சில் வசிக்கும் A/L படித்த மணமகளுக்கு தகுந்த வரனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1085

20) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது டென்மார்க்கில் வசிக்கும் 26 வயது 5'3" உயரமுள்ள, B.A பட்டதாரி மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1084

21) Jaffna Parents living inColombo looking for their daughter 43 years, 5'3" tall, well educated & working in London, a suitable groom. Ref: 1083

22) வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது கனடாவில் வசிக்கும் 39 வயது 5'2" உயரமுள்ள, மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரி தேடுகின்றார். Ref: 1082

23) வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது 5'2" உயரமுள்ள, பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகனை சகோதரி தேடுகின்றார். Ref: 1081

24) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 39 வயது 5'1" உயரமுள்ள, B.A பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1080

25) Jaffna Parents living in Canada looking for their daughter 26 years, 5'4" tall, a professional with master degree , born in Srilanka brought up in Africa and Canada, a suitable bride groom in Canada or USA. Ref: 1079

26) முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 39 வயது 5'1" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரர் தேடுகின்றனர். Ref: 1078

27) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 24 வயது 5'2" உயரமுள்ள, பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு லண்டனில் தகுந்த மணமகனை சகோதரி தேடுகின்றார். Ref: 1077

28) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'3" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு லண்டனிலுள்ள சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1076

29) Jaffna mother living in London looking for her daughter, 33 years, 5'5" tall, UK Citizen, a suitable groom. Ref: 1075

30) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5'2" உயரமுள்ள, BBAபடித்த கனடாவில் நிரந்தர வதிவிட வுரிமையுள்ள மணமகளுக்கு தகுந்த மணமகனை UK/USA இல் தேடுகின்றனர். Ref: 1074

31) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'2" உயரமுள்ள, யாழ்ப்பாணத்தில் நர்ஸாக வேலை பார்க்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை UK/Canada இல் தேடுகின்றனர். Ref: 1073

32) Jaffna Parents looking for their daughter 33 years old, 5'2" tall, working as a programming assistant in Vavuniya, a suitable groom in Sri Lanka, London or Canada. Ref: 1072

33) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 24 வயது 5'2" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு பெற்றோர் கனடா/லண்டன் இல் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1071

34) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 45 வயது 5'3" உயரமுள்ள, படித்த மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref:1070

35) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கொழும்பில் ஆசிரியராகக் கடமையாற்றும் 38 வயது 5'4" உயரமுள்ள, BA Jaffna Uni.Graduate மணமகளுக்கு கொழும்பில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1069

# கவிதை

## புகலிடத்து வசந்தம்

வாழவே செழிப்பாய் எண்ணி
வந்துமே தசாப்தமாகி
மீளவே வழியும் தேடி
மிகச்சுமை தலையில் தாங்கி
தாளவே பறந்து வாழ்ந்தும்
தக்கதோர் இருப்பும் இன்றி
நீளவே காலம் போக்கி
நிற்கிறேன் புகலிடத்தில்.

கூலியின் நிலையில் நின்று
கும்பிடு நாளும் போட்டு
காலியாய் இருந்த கோப்பை
கழுவியே கைகள் தேய்ந்தும்
போலியாய் வேடம் காட்டி
பொருள்பணம் சிலிர்த்துக் காட்டி
வேலியால் பார்ப்போர்க்கெல்லாம்
வேடமோ நாளும் போதும்.

வெள்ளையன் இரத்தம் எல்லாம்
வெட்டினால் நிறமும் வேறாய்
முள்ளையும் மலரும் காட்டி
முடிச்சுமே போடும் பாங்கில்
பிள்ளையைக் கிள்ளல் போட்டு
பெரிதுமாய் தொட்டில் ஆட்டி
கொள்ளையாய் பணத்தை சேர்க்க
கோலம்என் நரைதான் மீதி.

ஏவலால் அடிமையாகி
எத் தொழில் ஏது பாரா
காவலாய் நானும் மாறி
காலினில் விழுந்து தஞ்சம்
நாவதால் நன்றே சொல்ல
நம்பியே சுழன்றும் ஆடி
கூனலும் என்னை நாட
குனிந்தனன் தரையை நோக்கி.

- த.சு.மணியம்

## புண்ணிய நதி

மலைகளின் மௌனம் கலைத்து
முகில்களின் ஆடை கிழித்து
வனங்களின் இரகசியம் அறிந்து
தான் கூடுமிடத்தில் கண்டதை கலந்து
கும்மாளம் கொட்டி
தானே தனக்கு வழி சமைத்து
சங்கமமாகு முன்
சமுத்திரத்தில் எத்தனை புண்ணியம்
தான் வரும் பாதையில்!

- வ.கணேஷ்.

## பற்றிக் கொள்ளடா

பற்றுக் கொள்ளடா... நீ பற்றுக் கொள்ளடா
எல்லைகள் தாண்டி நீ தமிழ் பற்றுக் கொள்ளடா
பற்றிக் கொல்லடா ....நீ பற்றிக் கொல்லடா
தமிழர் நம்மை இழிப்போரை பற்றிக் கொல்லடா
வெற்றி நமதடா...வெற்றி நமதடா
வெறியர்களை அடக்கி விடும் வெற்றி நமதடா
அன்புடன்

- சிவா

## கண்ட நாள் முதல்

கம்பத்தில் பறக்க விடப்பட்ட கொடிபோல்
என் வாழ்க்கை அங்கும் இங்குமாக
பறந்த போது உன்னைக் கண்ட போதுதான்
வாழ்க்கையின் அர்த்தம் புரிந்தேன்.

நான் அறிவுதேடச் சென்றவிடத்து
என்னைக் கொள்ளையிட வந்தவளே!
சந்திரவதனத்தைக் கண்டவுடன்
முட்டைக்குள்ளிருந்து வெளியேறும் குஞ்சு மாதிரி
என் அகத்தினில் மலர்ந்தது காதல்.

இராத்திரியின் நீளம் அறிந்தேன்
கனவின் இனிமை உணர்ந்தேன்
காதலின் ஊடல் அறிந்தேன்
உன்னைக் கண்ட நாள் முதல்.

உறக்கத்திலும் உருவம் தெரியுதடி
முகம் பார்க்கும் கண்ணாடியிலும்
உன் விம்பம் தெரியுதடி
உண்ணுகின்ற போதும் நீயெனக்கு
உணவாக தெரியுதடி
உன்னைக் கண்ட நாள் முதல்.

உலக அதிசயங்கள் ஏழு என்றுதான் இருந்தேன்
உன்னைக் கண்ட போதுதான் அதிசயித்தேன்
எட்டாவது உலக அதிசயம் நீயென.

மனிதர்களை வாழவைப்பது மறதி
என்னை வாழவைப்பது உன் ஞாபகம்
உன் அழகிய வதனத்தை கண்ட நாள் முதல்.

-சீ.ஞானவேல்

## உணர்வுகள்

மழைத்துளியின் சோகங்கள்
மண்ணுக்குத் தெரிவதில்லை
மழலையின் இனிய மொழி
மற்றவர்க்குப் புரிவதில்லை
மலர்களின் வாசம் தன்னை
மலர்க்கூந்தல் அறிவதில்லை
மங்கையின் மன ஆழத்தை
மன்மதனும் அறிந்ததில்லை
இதயத்தின் உணர்வுகளை
இதயங்கள் உணர்வதில்லை
தந்தையின் சுமைகள்
இளமையில் புரிவதில்லை
தாயின் அன்புதன்னை
தானிருக்கும்போது புரிவதில்லை
கண்ணீரின் ஈர வலியது
கண்களுக்குப்புரிவதில்லை
வானவில்லின் வர்ண ஜாலம்
சந்திரனுக்குத் தெரிவதில்லை
உடலின் முடிவுதன்னை
உணர்வுக்குப் புரிவதில்லை
காலனின் வருகைதன்னை
காலத்துக்கும் தெரிவதில்லை
காதலின் வலிகள்
காமுகர்க்குப் புரிவதில்லை
நட்பின் இலக்கணம்
நயவஞ்சகர்க்குப்புரிவதில்லை
இலக்கியனின் உணர்வுகள்
இங்கு உங்களுக்குப் புரிவதில்லை

- இலக்கியன்

## சுட்டெரிக்கப் பழகு

கதிரவன்...
இவனது மறுபெயர்தான்
"கம்பீரம்"

உறக்கம் மறந்த
உழைப்பாளி இவன் ஒருவனே.
சோம்பலில் சலித்துக் கொண்டதாய்
சரித்திரம் இல்லை.

மனிதா..புரிந்ததா..?
உறக்கம் மறந்து
சுட்டெரிக்கப் பிறந்தவன்தான்
உலகை ஆள்கிறான்.

உலகை ஆள
நீயும் சுட்டெரிக்கப் பழகு.
உன்னை ஆளும்
உருப்படாத அசுத்தங்களை....

- புதியவன்

## கலப்பு

தங்கத்தில் செம்பு கலந்தால்
நகை செய்யமுடியும் என்றாய்

பாலில் நீர் கலந்தால்
ஜீரணிக்கும் என்றாய்

கவிதையில் பொய் கலந்தால்
சுவை கூடும் என்றாய்

கூடலில் ஊடல் கலந்தால்
இன்பம் கூடும் என்றாய்

காதலில் ஏன்
துரோகம் கலந்தாய்?

- தி. கோபாலகிருஷ்ணன்

## தேடும் தொலைந்த பொருட்கள்

அம்மாவின் மடி,
ஆகாயத்தின் நீலம்,
இதமான தமிழ்,
ஈகை தரும் நிறைவு,
உயிர் தொடும் நட்பு,
ஊரெல்லாம் பூக்கள்,
என்றென்றும் கவிதை,
ஏழையின் சிரிப்பு,
ஐந்தறிவிடம் நேசம்,
ஒரு தெய்வம்,
ஓடைக்கரையில் வீடு,
ஔவையின் வரிகள்.
ஆயுதமில்லா உலகம்...!

- நிலா ரசிகன்

## அழகு...

முகம் அல்லடி அழகு
முகத்தின் நாணம்தானடி
அழகு

விழி அல்லடி அழகு
விழியின் மொழிகள்தானடி
அழகு

புருவமல்லடி அழகு
புருவக் கேள்விகள்தானடி
அழகு

நெற்றி அல்லடி அழகு
நெற்றியின் நினைவுகள்தானடி
அழகு

இதழ் அல்லடி அழகு
இதழின் முத்தம்தானடி
அழகு

சொல் அல்லடி அழகு
சொல்லின் பாவம்தானடி
அழகு

கழுத்தல்லடி அழகு
கழுத்தின் குழைவுகள்தானடி
அழகு

மூக்கல்லடி அழகு
மூக்கின் முனகல்தானடி
அழகு

கை அல்லடி அழகு
கைகள் வளைவதுதானடி
அழகு

கால் அல்லடி அழகு
கால்களின் பூமடிதானடி
அழகு

விரல் அல்லடி அழகு
விரலின் தீண்டல்தானடி
அழகு

இடை அல்லடி அழகு
இடையின் இணக்கம்தானடி
அழகு

கூந்தல் அல்லடி அழகு
கூந்தல் பொழிவுகள்தானடி
அழகு

மார்பல்லடி அழகு
மங்கை உள்ளம்தானடி
அழகு

- கவிஞர் புகாரி

## வரம்

விழியாய் வேண்டாம்
உறங்கிவிடும்!
நினைவாய் வேண்டாம்
அழிந்துவிடும்!
உயிராய் வேண்டாம்
பிரிந்துவிடும் !
நிழலாய் மட்டுமே வேண்டும்
இருந்தாலும் இறந்தாலும்
தொடர்வதற்கு...!

- பாலா


புலம்பெயர் வானில் புதியதோர் வானொலி!

மிக விரைவில்...

சிரிக்க... சிந்திக்க... சினக்க...!

ஒரு ரேடியோ

இது

உங்கள் ரேடியோ!

* அறிவிப்பு
* நிகழ்ச்சி அமைப்பு
* நிகழ்ச்சித் தொகுப்பு
* நிர்வாகப் பிரிவு
* விளம்பரப் பிரிவு

தோன்ற வெற்றிடங்களை நிரப்ப
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்!

கருத்துக்கள், ஆலோசனைகள்
போன்றவை வரவேற்கப்படுகின்றன.

லண்டன் 020 8715 4775
பாரிஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
கனடா 416 848 7253

ஒரு ரேடியோ

விரியுமறிவை நிலை காட்டுவோம்
விழும் சிறுமைகளை ஓட்டுவோம்

# அறுவைப் பக்கம்

## ஆராச்சும் சொல்லுங்கப்பு



உங்களுக்கு ஹொஸ்பிட்டல்ல யாரையாச்சும் உயிருக்கு ஆபத்தான நிலைமையிலே அட்மிட் பண்ணி பார்த்துகிட்ட அனுபவம் இருக்கா? நமக்கு அப்படிப்பட்ட அனுபவத்தை என் நைனா கொஞ்ச வருஷமா வாரி வழங்கிட்டு இருக்காரு.

நம்ம ஊரு டாக்டருங்க இருக்காங்களே ரொம்ப கூலா பேஷண்டை பார்த்துக்குற ஆண் வாரிசுகிட்டே அப்பபோ பொம்மெல்லாம் போட்டுகிட்டே இருப்பாங்க. தம்பி எதுவும் இன்னும் 48 மணி நேரம் போனாதான் சொல்ல முடியும் பார்த்துகுங்க! உடனே ஒரு மூணு லட்சுமி வெடிய ஒன்னா திரிய கோர்த்துகிட்டு மனசுகுள்ள வெடிக்கும்.

தம்பி டாக்டர் உங்கூட பேசனும்குறார் அப்படீன்னு யாராச்சும் வந்து சொன்னா போதும். இப்போ என்ன குண்டத் தூக்கி போடப் போறாங்களோன்னு பயந்து கிட்டேபோய் ஒரு கட்டத்துலே என்ன வேணாலும் சொல்லிக்கிங்க டாக்டர் எம் மனசு கல்லாயிடுச்சுன்னு நின்னுகிட்டு வரதோணும்.

அப்படியே பேசிட்டு நொந்து நூலாகி வெளிய வருவோம் பாருங்க இதுலே இந்த வெள்ளை ட்ரெஸ் போட்ட பிசாசுங்க யாரு அதாங்க நர்ஸ்சுங்க அதுக Parallel லா சைடுல இப்படி ஆச்சு அப்படி மூச்சு இழுதுகிட்டாருன்னு போற போக்கிலே கொழுத்தி போட்டுகிட்டு போவாங்க. ஏம்மா ஒத்தைப் பையன் என்னைய பார்த்தா பாவமா இல்லையா ஒருத்தன் எத்தனை அதிர்ச்சியத்தான் தாங்குவான்னு கேட்கத்தோணும் !

எங்கே சிலதுக சிரிக்கிற சிரிப்புல அதுவும் மறந்து போய்டும். இப்படியாக அதிர்ச்சி மேல அதிர்ச்சி வாங்கி இடிதாங்கியா ஆகிபோன மனசோட ஆஸ்பத்திரியில் சுத்திகிட்டு இருந்தப்போதான் சிந்தியா என் அப்பா இருக்கும் floorக்கு Duty nurse ஆக வந்தாள். நாந்தான் அப்பாவுக்கு பணி செய்வதே என் தலையாய கடமையாக இருந்தேனே. சுத்து வட்டாரத்துலே என்ன நடக்குது என்ன போகுதுன்னு நமக்கு எங்கே தெரியுது? நாக்கை நாலா மடக்கி வாய்குள்ள வச்சுகிட்டு என் கடமையை ஆத்து ஆத்துன்னு ஆத்திகிட்டு இருந்தேனா பார்த்துகுங்களேன். இந்த காலத்துலே இப்படி ஒரு பையனா? இவ்ளோ சின்சியரா இருக்கானேன்னு பல பேரு பார்த்துருப்பாங்க போல ஆஸ்பிடல்ல அதுல நம்ம சிந்தியாவும் ஒருத்தின்னு உங்களுக்கு தெரியாதா என்ன? சிந்தியா சிரிப்பை சிந்துனா அதுல கூட, லேசா Cobra பீரை ஊத்துனா லேசா பொங்குற நுரை மாதிரி ஒரு மெல்லிய சோகம் கொப்பளிக்கிறது தெரிஞ்சுது. அட என்னைய போலவே ஒருத்தி சோகமா இருக்காளேன்னு லேசா மனசு மெயின் ட்ராக்கிலே இருந்து ஒதுங்குனா கூட உடனே மெயில் ட்ரக்கான அப்பா caring வந்து எல்லாத்தையும் ஓரங்கட்டி ஒதுக்கிடும்.

அப்படித்தான் ஒரு இளங்காலைப் பொழுதுலே ஹொஸ்பிடல் ரூம்ல இருந்து வந்தப்போதான் பார்த்தேன் சிந்தியாவை.அப்போதுதான் Duty ஆரம்பித்து இருக்கும் போல லேசா மனசு கபடி ஆட ஆரம்பிச்சது நெசந்தான். ஒரு சின்ன வெள்ளை தொப்பி. ஒரு வெள்ளை Frock போட்டுகிட்டு சிந்தியா சிலுப்பிகிட்டு அடிக்கடி அப்புறம் என்னை கடந்து போனா. போற போக்கிலே அப்படியே என்னைய பார்த்து ஒரு மந்தகாசப் புன்னகை வேற சிந்திட்டு போனா.

உன் floor ல் இருந்தா அப்படிதாண்டா நாயேன்னு நீங்க கத்துறது கேட்குதுங்கோ. ஆயிரம் தான் இருந்தாலும் அப்பாவைப் பார்த்துக்குற கடமை வேறு பின்னால் அழைக்குது சிந்தியாவோட சிரிப்பு சத்தம் முன்னால் அழைக்குது என்ன பண்ணுவேன் நான். டேய் பாண்டி இந்த நேரத்திலே தான் steadyயா இருக்கணும் என என் கடமையில் கருத்தும் சிந்தியாவின் மேல் கண்ணுமாக அல்லாடிக் கொண்டிருந்தேன். இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலை எனக்கு.

அப்போதான் ஒரு அதிகாலைப் பொழுதிலே வழக்கமான check upபுக்கு சிந்தியா ரூமுக்கு வந்தாள். வழக்கம் போல ரெண்டு ஊசியப் போட்டுட்டு அப்பாவுக்கு pressure பார்க்க ஒரு பெட்டி வச்சிருப்பாங்களே அதை திறந்தா. அப்போதான் கவனிச்சேன் அந்த பொட்டிகுள்ள இருந்து ஏதோ கீழ விழுந்துச்சு. ஆனா அதை நம்ம சிந்தியா கவனிக்கலை. சிந்தியாவுக்கு உதவுற பாக்கியத்தை நான் விடுவேனா Never !! பாய்ஞ்சு போய் எடுத்தேன்.

அட தங்கச்சங்கிலி.!! இம்மாம் பெருசா இருக்கே. அங்க பார்த்தா சிந்தியா ஏதோ Pressure பார்ப்பதே தன் வாழ்வியல் கடமையாக சின்சியரா பார்துகிட்டு இருந்துச்சு. சரி சரி பார்க்கட்டும். இந்த செயினை கொடுத்தா எப்படியெல்லாம் எனக்கு நன்றி சொல்ல போறாளோ??

ரூமை விட்டு வெளியே போய்ட்டா சிந்தி ( செல்லமா) பின்னாடியே ஓடிபோய் கூப்பிட்டேன். சிந்தியா உங்க pressure பார்க்கர boxல இருந்து இந்த செயின் கீழே விழுந்துருச்சுங்க!!. சிந்தியா முகத்தில் ஒரு 1000 வாட்ஸ் வெளிச்சம். இருக்காதா பின்னே!!? அட இதைதாங்க நான் காலைல இருந்து தேடிகிட்டு இருக்கேன் இங்கதான் இருக்குதா. நல்ல வேளை. என் தாலிக்கொடிங்க இது!!

சிந்தியா சொல்லிக்கொண்டே போக எனக்கு அய்யோ அம்மா ஹார்ட் அட்டாக் வர மாதிரி இருக்கே. சிந்தியா வுக்கு கல்யாணம் ஆயிடுச்சுங்கறதே ஒரு மிகப்பெரிய அதிர்ச்சியா இருந்துச்சு இதுலே தாலிய வேற அம்மணி இப்படி கழட்டி வச்சுகிட்டு சுத்திகிட்டு இருந்தா எப்படி என்னைய மாதிரி ஆளுக எல்லாம் பிறன் மனையா இல்லை காலி மனையான்னு கண்டுகரது மார்டன் அம்மணிகளே இதெல்லாம் ஞாயமா? ஆராச்சும் சொல்லுங்கப்பூ !!

*- பாண்டி*

## ஞாயமான சந்தேகம்



1) சீலை கட்டினா இடுப்புத் தெரியுது வயிறு தெரியுது எண்டு சுடிதாருக்கு மாறினீங்களே, இப்ப அந்த சுடிதாரிலயும் மிடி சுடி எண்டு இடுப்புக்கு ஒரு சாண் மேல இருந்து கிழிச்சு விட்டுப் போட்டு என்ன மாதிரி அப்பாவிகளின்ர கண்களை கண்ணா பின்னா எண்டு அலைபாய விடுறியளே, இது சரியோ ஊரில இருக்கிற ஜீன்ஸ் போட்ட மகா லட்சுமிகளிட்ட இதைக் கேக்கிறன்! நியாயமோ இது?

2) கல்லூரியின்ர முதல் வருசத்தில இருந்து பின்னாலயே நாய் மாதிரி சுத்திக் கொண்டு உங்களுக்காக வாலிப வயசுச் சந்தோசம் எண்டு சொல்லுற புகை மது எண்டு எல்லாத்தையும் தியாகம் பண்ணிப் போட்டு கலியுக முனிவர்களா சடாமுடி இல்லாத குறையோட தெய்வீக காதலோட உங்களையே அம்மாளா நினைச்சு சுத்திக் கொண்டு இருக்கிற அப்பாவி அய்யா சாமிகளை விட்டுட்டு BMWல விலாசம் காட்டிக் கொண்டு மட்டையும் போட்டுக் கொண்டு ஒரு நாளைக்கு 75 சிகரட்டை ஊதிக் கரியாக்கிற உதவாப் பெடியளோட அலட்டிக் கொண்டு அவியளின்ர BMWல திரியிறியளே இது ஞாயமா? அதெப்பிடி நீங்க மட்டும் சரியாத் தேடிப் பிழையான ஆக்களை தெரிஞ்சு எடுக்கிறியள் ஒருக்காச் சொல்லுங்கோ.

3) உங்களுக்கு வாங்கிக் குடுக்கிற சீஸ் பேகருக்கு ஒரு சாதாரண கடையில மூண்டு நேரத்துக்கு நல்லா சாப்பிடலாம் எண்ட விசயம் உங்களுக்குத் தெரியுமோ? நாங்க எல்லாம் தனிக் 'கோக்'கை இழுத்து இழுத்துக் குடிச்சாலும் இரண்டு நிமிசத்தில அது முடிஞ்சு போடும், சிலவேளை லைட்டா அதில கொஞ்சம் அப்பிடி இப்பிடி எண்டு இருந்திட்டு ஏதாவது கலந்தால் ஒரு பத்து நிமிசத்துக்கு இழுத்தடிக்கலாம்! ஆனால் 300 மில்லி கோக்கை வாங்கி வச்சிக்கொண்டு எப்பிடித்தான் நீங்க 3 மணித்தியாலத்துக்கு இழுத்துக் குடிக்கிறீங்கள்? சொட்டு நீர்ப்பாசனம் போல 'சொட்டுக்கோக்' பாசனம் எண்டு புதுசா ஏதாவது படிச்சு இருக்கிறீங்களா?

4) எங்களுக்குக் கொட்டாவி விடவே வாயத் துறக்க ஏலாமல் இருக்கு ஆனால் எப்பவும் தொடந்து FM றேடியோ மாதிரி 24 மணி நேரமும் கதைச்சுக் கொண்டே இருக்கிறீங்களே உங்களுக்கெல்லாம் வாயே நோகாதா? அது வாய்தானா? அடுத்தவன் எப்பவாவது கதைக்க வேணும் எண்டு நினைச்சுப் பாத்து இருக்கிறீங்களா?

5) ஏதோ பிறக்கேக்கயே கவசகுண்டலத்தோட பிறந்த மாதிரி எந்தநேரமும் மொபைல் போனும் காதுமா சுத்துறீங்களே, உண்மையிலேயே கதைக்கிறீங்களா? அல்லது வெறும் பம்மாத்தா? அதெப்பிடி நாங்க அதால வாற நேரம் பாத்து குறுக்கால போனவன் எண்டு குருட்டுத்தனமாப் கதைக்கிறியளே ஏன்?

இப்போதைக்கு இவ்வளவு சந்தேகங்கள்தான் வந்தது. ஆனால் எல்லாம் ஞாயமான சந்தேகங்கள்தான் எண்டு நினைக்கிறன். நல்லாப் படியுங்கோ. படிச்சுப் போட்டு தாய்க்குலங்கள் எல்லாம், இல்லை... குமர்க் குலங்கள் எல்லாம் என்ர முதுகில தீபாவளி கொண்டாடிப் போடாதேங்கோ. முடிஞ்சா பதில் சொல்லுங்கோ. இல்லாட்டி ஒரு மூலையில இருந்து உங்கட சிந்தனைக் குதிரையின்ர வாலைத் திருகி விடுங்கோ. ஏதாவது பதில் வருதா பாப்பம்.

*- ஜொ.பேட்டை*



*காற்றுள்ள போதே தூற்றிக் கொள்!*

## கலியாணம் கட்டிப்பார்

*கலியாணம் கட்டிப்பார்*

*முதுகைச் சுற்றி புள்ளியாய் பல வட்டம் தோன்றும்*

*சிலவேளை பல் துலக்குக்கத் தூண்டும்*

*கடன்காரன் தவிர எவனும் உனை மதியான்*

*தெருவில் போறவன் உனை பார்த்தும் சிரியான்*

*வங்கிக் கடன் — அதிகமானலும்*

*கிறடிட் கர்ட் பில் — ஏறிப்போனாலும்*

*கலியாணம் கட்டிப்பார் !*

*சொர்க்கத்தைத் தவிர எல்லாம் — வாற*

*மனிசியால இங்கையே*

*இப்பவே நிச்சயம்!*





# சினித்துளி

## தம்பி



ஸ்லோ பட் ஸ்ரெடி என்பார்களே.. மாதவனின் சினிமா மார்க்கெட் அப்படிப்பட்டது. இந்தி பெங்காலி தமிழ் என சுழன்றடிக்கிறார் மனிதர். தமிழை பொறுத்தவரை 'தம்பி' தனக்கொரு அடையாளம் தந்ததாக பெருமிதப்படுகிறார் மாதவன். இந்த நட்பு இனிவரும் காலங்களிலும் இப்படியே நீடிக்கும் என்பதற்கு அடையாளமாக மீண்டும் சீமானும் மாதவனும் இணைகிறார்கள். ஒன்றல்ல இரண்டு படங்களில். சீமான் மாதவனை வைத்து இயக்கப் போகும் முதல் படத்திற்கு 'மகிழ்ச்சி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அடுத்து இவர்கள் இணையும் படம் 'பகலவன்'. சுட்டெரிக்கும் சமுதாய கருத்துள்ள படம். 'தம்பி' மாதிரி ஒரு பவர்புல் வேடம் மாதவனுக்கு.

## உஷார்



இப்போதுள்ள நடிகைகள் மிகவும் உஷார். கொஸ்ட்யூம் அளவை மட்டுமில்லை பாடலின் வரிகளையும் மிகவும் கவனிக்கிறார்கள். சமீபத்தில் 'ஈ' படத்தின் பாடல் காட்சியை படம் பிடித்துக் கொண்டிருந்தார் இயக்குனர் எஸ்.பி. ஜனநாதன். ஸ்பீக்கரில் பாடல். ப்ளோரில் நயன்தாரா மற்றும் டான்ஸர்கள். மாஸ்டர் சொல்லிக் கொடுத்ததை ஆடவேண்டிய நயன்தாரா ப்ளோரை விட்டிறங்கி இயக்குனரிடம் வந்தார். ஒலித்துக் கொண்டிருந்த பாடலில் இருந்த சில வரிகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தார். பாடல் வரிகளை மாற்றினால் மட்டுமே நடிப்பேன் என்று உறுதியாக கூற ஜனநாதனும் ஒப்புக்கொண்டார். தற்போது பாடல் வரி மாற்றப்பட்டுள்ளது.

## அறக்கட்டளை



'முனி' படத்தை இயக்கிக் கொண்டே படங்களில் நடன இயக்குனராவும் பணியாற்றி வருகிறார் லோரன்ஸ். இவர் லேட்டஸ்டாக நடனம் அமைத்தது 'சிவாஜி' படத்தில் நடிக்கும் ரஜினிக்கு! சின்ன வயதில் மூளைக் காய்ச்சலில் பாதிக்கப்பட்டு சிறிது நாள் கை கால்களில் அசை வில்லாமல் இருந்திருக்கிறார் லோரன்ஸ். இந்த சம்பவம் அவரை மிகவும் பாதித்திருக்கிறது. இந்த பாதிப்பில் ஊனமுற்ற இளைஞர்களை வைத்து அறக்கட்டளை ஒன்றை ஆந்திராவில் தொடங்கினார். இதனை சென்னை வரை விரிவுபடுத்தும் முகமாக சென்னையிலும் அலுவலகம் ஒன்று திறக்கப்பட உள்ளது. இதையொட்டி பிரமாண்ட கலை நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடாகி உள்ளது.

## கோல்ஷீட்

நடிகை பாவனா கோல்ஷீட் குளறுபடி செய்வதாக வெளியாகும் செய்திகளை பார்த்து வருந்தத்தில் உள்ளார். இதுபற்றிய மனக்குமுறலை சமீபத்தில் கொட்டி தீர்த்தார் அவர். நான் எந்த படத்திலும் கோல்ஷீட் குளறுபடி செய்தது இல்லை ஏற்கனவே கொடுத்த தேதியை படக்கம்பனிகள் சரியாக பயன் படுத்தாததால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உதாரணத்துக்கு "தீபாவளி" பட நாயகன் "ஜெயம் ரவிக்கு" சிக்குன்குனியா ஏற்பட்டதால் படப்பிடிப்பு நடக்கவில்லை. மீண்டும் படப்பிடிப்பு தொடங்கும் போது கால்ஷீட் பிரச்சினை என்னை சுற்றி எழும். சந்தர்ப்ப சூழ்நிலையால்தான் இதுபோன்ற பிரச்சினைகள் உருவாகிறது மற்றபடி எல்லாம் வதந்தி என்றார் நடிகை பாவனா.

## சிறுதுளி !

திரிஷா மாடர்ன் டிரஸ் அணிவதில் பிரியம் உள்ளவர். பொது நிகழ்ச்சிகள் மற்றும் சினிமா விழாக்களில் மேற்கத்திய ஆடையுடன் தோன்றுவார். பண்டிகைக்கு விதம் விதமாக மொடர்ன் டிரஸ் உடுத்தி அசத்துவார். ஆனால் வருகிற தீபாவளியை முன்னிட்டு புடவை கட்டி கொண்டாட முடி வெடுத்துள்ளாராம். இதற்காக புதுரக புடவைகளை வாங்கி குவித்துள்ளார்

❖ ❖ ❖

காமெடியில் நம்பர் வன் இடத்துக்கு உயர்ந்திருப்பவர் வடிவேலு. இம்சை அரசன் 23ம் புலிகேசியில் கதாநாயகனாக நடித்து சக்கை போடு போட்டார். இப்படம் 100 நாட்களை தாண்டி ஓடுகிறது. குடும்ப பாங்கான "எம்டன் மகன்" படத்திலும் தூள் பறத்தியுள்ளார். வடிவேலு மவுசு கூடியுள்ளது. தயாரிப்பாளர்கள் பலர் வடிவேலுவை கதாநாயகனாக ஒப்பந்தம் செய்ய காத்து கிடக்கிறார்கள்.

❖ ❖ ❖

சிவாஜியில் ரஜினியுடன் நடிக்கும் ஸ்ரேயா அப்படம் ரிலீசான பின் தமிழில் தனக்கு நிரந்தர இடம் கிடைக்கும் என்று நம்பினார். ஆனால் படம் வரும் முன்பே அம்மணிக்கு வாய்ப்புகள் குவிகிறது. தனுசுடன் திருவிளையாடலில் கலக்குகிறார். அடுத்து விஜய்யுடன் ஜோடி சேருகிறார். படத்துக்கு அழகிய தமிழ் மகன் என்று பெயர் சூட்ட ஆலோசிக்கிறார்களாம்.

❖ ❖ ❖

செல்லமே, சண்டைக்கோழி, திமிரு என மூன்று வெற்றிப்படங்களில் நடித்த மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் விஷால் தற்போது ஹரியின் தாமிர பரணியில் நடிக்கிறார். அடுத்து அவரது அண்ணன் விக்ரம் கிருஷ்ணா தயாரிக்கும் படமொன்றில் நடிக்கிறார். இப்படத்துக்கு சத்யம் என பெயர் வைத்துள்ளனர்.

❖ ❖ ❖

பல தமிழ் படங்களிலும் டெலிவிஷன் தொடர்களில் நடித்தவர்? கலக்கியவர் ரஞ்சிதா. இவருடைய நீண்ட நாள் லட்சியம் இயக்குனர் ஆவது. அவரது லட்சியங்களை நிறைவேறும் விதமாக இந்திப்பட வாய்ப்பொன்று கதவை தட்டியுள்ளது. இந்திப் படத்தை இயக்குவதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். கதா நாயகன் கதாநாயகி தேர்வு கதை விவாதம் போன்றவற்றில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளார்.

❖ ❖ ❖

உனக்கும் எனக்கும் படத்தில் ஹிட் ஆன கோழி வெடக்கோழி பாட்டை எழுதியதன் மூலம் கவிஞர் விவேகா பிசியாகி உள்ளார். ஏழு படங்களுக்கு முழு பாடல்களையும் எழுத வாய்ப்பு வந்துள்ளது. விவேகா ஏற்கனவே 250 க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார்.



## "பத்மினி"

தமிழ் ரசிகர்களின் இதயத்தில் ஒரு அழியாத இடத்தைப் பெற்ற நடிகை திருமதி. பத்மினி (ராமசந்திரன்) யூன் பன்னிரண்டாம் தேதி 1932 ஆம் வருடம் திருவனந்தபுரத்தின் பூஜாப்புராவில் தங்கப்பன் பிள்ளை - சரஸ்வதி அம்மாள் தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். தம் நான்காம் வயதிலேயே பரதம் கற்கத் துவங்கிய பத்மினி பத்து வயதில் அரங்கேற்றம் செய்தார். புகழ் பெற்ற திரைப்பட இயக்குனர் சுப்பிரமணியம் அவர்களே அவருடைய தனித்திறமையைக் கண்டறிந்தார். சரித்திரம் படைத்த நடனக்கலைஞர் உதய சங்கருடன் 'கல்பனா' என்ற ஹிந்தி மொழித் திரைப்படத்தில் 1950 ஆம் வருடம் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு பத்மினி அவர்களுக்கு அவருடைய பதினேழாம் வயதில் கிடைத்தது.

1950 ஆம் வருடம் பத்மினி நடித்த 'மணமகள்' (எம்.எல்.வி அவர்கள் பாடிய சின்னஞ் சிறு கிளியே) திரைப்படம் பெரும் வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் இணைந்து நடித்தார். 'தூக்குதூக்கி' என்ற திரைப்படத்தில் திருவாங்கூர் சகோதரிகள் நடனமாடி நடித்த 'சுந்தரி சௌந்தரி நிரந்தரியே' என்ற பாடலும், 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்', 'கண்களே பெண்களை நம்பாதே' என்ற பாடல்களும் நம்மை இன்றும் அக்காலத்திற்கு அழைத்துச் செல்லும் விந்தையை நம்மில் பலர் உணர்கிறோமல்லவா?

திருமதி.பத்மினி ஹிந்தி தமிழ். தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தென்னிந்திய மொழிகளிலும் நடித்து நடிப்பிற்கு மொழி ஒரு தடையன்று என்று நிருபித்தார். அவர் எம்மொழிப் படமானாலும் பின்னணிக் குரலின்றி தாமே பேசி நடிக்கும் திறன் பெற்றவர்.

அவர் தம் தொடர்ந்த நாட்டியப் பயிற்சியினால் மாநில எல்லைக்கோடுகளைக் கடந்து தம் திறமையை வெளிக்கொணர்ந்ததுடன் பரத நாட்டியத்தைப் போலவே மேற்கத்திய நடனத்திலும் தேர்ந்து விளங்கினார். அவர் தம் சம காலத்தில் புகழ் பெற்று விளங்கிய கதாநாயகர்களான பாலிவுட்டின் தேவ் ஆனந்த், ராஜ்கபூர். தமிழில் எம்.ஜி.ஆர். சிவாஜி, மலையாளத்தில் பிரேம் நசீர், கன்னடத்தில் ராஜ்குமார் என்று அனைவருடனும் சிறந்த கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். பதின்மூன்றே நாட்களில் தயாரிக்கப்பட்ட மலையாளப்படமான 'அத்யாபிகா' மூலம் அவருக்கு நேசிய விருது கிடைத்தது. சிக்கல் ஷண்முக சுந்தரத்தின் நாயன வாசிப்பில் 'நலந்தானா'விற்கு மோகனாம்பாளாக அவர் ஆடிய சலங்கை ஒலியும், காட்டிய முக பாவங்களும் அமரத்துவம் பெற்று நிற்கும்.

1961 ஆம் ஆண்டில் அவர் டாக்டர் ராமச்சந்திரனை மணந்து அமெரிக்காவிற்கு சென்றார். 1977 ஆம் ஆண்டில் நியூ ஜெர்ஸியில் 'Padmini School of Fine Arts' என்ற நாட்டியப் பள்ளியைத் துவக்கி நடத்தி வந்தார். அது இன்றளவும் தன் கலைச்சேவையை தொடர்கிறது. ரஷிய அரசு அவரைப் பாராட்டி ஒரு தபால் தலை வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

- பிரேமா சுரேந்திரநாத்

LINGA & CO

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

Legal Advisors and Commissioners of Oaths

- நீங்கள் ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் /வேலைபார்க்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதா?
- திருப்பி அனுப்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?
- ஐக்கிய இராச்சியத்தில் நீங்கள் தொடர்ந்து சட்டப்படி வசிக்க விரும்புகின்றீர்களா?
- அப்படியாயின் பல வழிகள் உண்டு.

உடன் எம்மை தொடர்புகொள்ளுங்கள்

12 ஆண்டுகால அனுபவமுள்ள முன்னணி குடிவரவு சட்ட நிறுவனத்திடம் இருந்து உங்கள் குடிவரவு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுங்கள்.

கவர்ச்சிகரமான விளம்பரங்களை கண்டு ஏமாந்து விடாதீர்கள்!
உண்மை நிலையை அறிய எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

We specialise in: Asylum and immigration matters

- Human Rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry clearance Application and appeal
- Injunction
- Judicial Review
- Work Permits
- EEA Application (ஐரோப்பிய பிரசைகள் தமது உறவினரை Sponsor செய்தல்)
- Student Visa, Visit Visa
- Highly skilled migration program
- Naturalisation Application



46 High street, Colliersweed, London, SW19 2BY
General Line: 020 8544 9285 / Emergency Line: 07771 646 441
Fax: 020 8452 9530

# சினிமா

## ஆணிவேர் மதுமிதா சொல்கிறார்



குடைக்குள் மழைதான் என்னுடைய முதல்ப் படம். எனக்கு முன்னர் என் குடும்பத்தில் யாரும் சினிமாத்துறையில் இருந்தவர்கள் கிடையாது. எங்கள் குடும்பத்தில் நானே முதல் வரவு.

எத்தனை படங்கள் நான் நடித்தாலும் எனக்கு ஆணிவேர் விசேடமான படம் ஆணிவேர் படமாக்கப்பட்ட நாட்கள் வெறும் தொழிற் காலம் மாதிரிக் கடந்து போகவில்லை. அது ஒருவிதமான அனுபவம். ஆணிவேரில் நடித்தமைக்காக நான் பெருமைப்படுகிறேன். இங்கு எங்களுடைய சினிமாவில் நடிப்பதில் இருந்து இது வித்தியாசமானது. காரணம் ஆணிவேர் என்பது வெறும் கதையல்ல. அது அவர்கள் வாழ்கிற சாதாரண வாழ்க்கை முறையாகி விட்டது. அப்படிப்பட்ட ஒரு முக்கியமான படத்தில் நான் நடித்து இருக்கிறேன். அதில் அளவு கடந்த திருப்தி எனக்கு.

அங்கே கஷ்டப்படுகிற மக்களுக்கு என்று ஒரு சினிமா உதிக்கிறபோது அதில் நானும் ஒருத்தியாக பங்கேற்று இருக்கிறேன் என்று நினைத்தால் சந்தோஷமாய் இருக்கிறது. அதைவிட பெருமையாக இருக்கிறது என்று தான் சொல்லவேண்டும். அந்த நாட்கள் ஒரு போதும் மறக்க முடியாதவைகள். நான் ஒரு தெலுங்குப் பெண் இப்பொழுது தான் தமிழினை எழுத வாசிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறேன். அதனால் எனக்கு ஈழத் தமிழ் ஆரம்பத்தில் கொஞ்சம் கடினமாக இருந்தது. ஆனால் இப்போ அப்படி அல்ல. ஈழத்துத் தமிழினை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் உணர்வுகளையும்.

சாதாரணமாக ஈழத்தில் உள்ள பிரச்சனைகள் பற்றி முன்னர் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் அங்கு என்ன நடக்கிறது என்பதை நேரில் சென்று அங்கே அவர்களுடன் இருந்த காலத்தில் தான் முழுமையாக அறிய முடிந்தது அதன் ஆழம் புரிந்தது. அங்கே இத்தனை வருடகாலப் போரினால் எத்தனையோ பேர் தங்கள் அவயவங்களை உறவுகளை இழந்திருக்கிறார்கள். என்ன கொடிய வாழ்க்கை. இருபது வருடகாலமாகப் பல அழிவுகள். அதுவே இப்போது அவர்களின் சாதாரண வாழ்க்கை என்பதுபோல ஆகிவிட்டது.

ஆனால் அங்கே பலர் உடல் ரீதியாக அங்கவீனர்களாக இருந்தாலும் உளரீதியாக அவர்கள் உறுதியானவர்கள். அம்மாதிரியான மக்களுடன் வேலை செய்தது ஒரு புது அனுபம். ஒரு மனிதனுக்கு எல்லாம் இருக்கிறபோது அதன் அருமை தெரிவதில்லை. ஆனால் அந்த மண்ணில்தான் நான் ஒரு மனிதனுக்கான விடுதலையின் முக்கியத்துவத்தினை அறிந்து கொண்டேன். அவர்கள் கடுமையாக வேலை செய்வார்கள். செய்தார்கள். அவர்கள் மன உறுதியான வர்கள். அவர்களுக்கு யார் உதவியும் தேவை இல்லை. அவர்களை அவர்கள் பாட்டில் விட்டாலே போதும். மிகுதியை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். உபத்திரம் செய்யாமல் இருந்தால் அது போதும். அவர்கள் மிகவும் உறுதியானவர்கள்.

சாதாரணமாக நாம் இங்கு திரைப்படங்கள் நடிக்கின்றபோது அது சரியில்லை இது சரியில்லை இது அழகில்லை என்று பல விடயங்களில் பிடிவாதம் செய்வதுண்டு ஆனால் அங்கு சென்று அவர்களுடன் வாழ்ந்த போது நான் ஒரு முட்டாளாகவே என்னை உணர்ந்தேன். சின்னச்சின்னக் குறைகளைப் பெரிது படுத்துகிறோம் ஆனால் அவர்கள் அங்கே போரினால் பலவிதமான உடல் ரீதியான குறைகள் இருந்தும் அவர்கள் அதைக்குறித்து அலட்டிக் கொள்வதேயில்லை. அவர்கள் சாதாரணமாக வாழ்கிறார்கள். இந்தத் திரைப்படம் மட்டும் அல்ல இனியும் வாய்ப்பு வந்தால் அவர்களுடன் பணிபுரிவேன்.

*- உடையார்*



### விமர்சனம்

## மனதோடு மழைக்காலம்

நீண்ட இடைவெளிக்குப்பின்., ஒரு ஆணும், பெண்ணும் கண்றாவி காதல் இல்லாமல், நல்ல நட்போடு... கடைசி வரை வாழ முடியும்! என்பதற்கு எடுத்துக் காட்டாக, வெளி வந்திருக்கும் படம் 'மனதோடு மழைக்காலம்'.

'49 வயதிலும் நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு அவளை பார்க்கப் போகலைன்னா, யார் குடியாவது மூழ்கிடுமா என்ன? எனக்கேட்டு நாக்கில் நரம்பில்லாமல் பேசும் மருமகளை., சட்டை செய்யாமல்... சாகக் கிடக்கும் தன் கல்லூரித் தோழியை காண தள்ளாட்டத்துடன் மருத்துவமனையை நோக்கி போகிறார் சிவா.

நடையினூடே, சிவாவின் கடந்தகால 'கல்லூரி ப்ளாஷ்பக்' நம் கண் முன் காட்சியாகிறது. சிவாவும், சத்யாவும் ஒரே கல்லூரியில் படிக்கிறார்கள். எதிர்பாராத சூழ்நிலையில், இருவரும் நல்ல நட்பிற்கு உள்ளாகின்றனர்.

இதை உணராத, அவர்களது பெற்றோர்களே., அவர்களது நட்பை காதல் என கருதி, இருவருக்கும் திருமணம் முடிவு செய்கின்றனர். அவர்களது பெற்றோருக்கு தாங்கள், காதலர்கள் அல்ல., நல்ல நண்பர்கள் என்பதை புரிய வைக்கின்றனர். கூடவே, இந்த நூற்றாண்டிலும் இப்படியும் ஒரு நட்பா? எனும் ஆச்சர்யத்தையும் எழ வைத்து விடுகின்றனர்!

இந்நிலையில், முதலில் இவர்களது நட்பை தப்பாக பார்த்து 'குட்பை' சொல்லி கைகழுவ பார்க்கும் சத்யாவின் முறை மாப்பிள்ளை கார்த்திக்கும், சத்யாவை, சந்தேகம் இல்லாமல் மணம் முடித்துக் கொள்ள முன்வருகிறான்! நட்பு வட்டாரம் புடை சூழ, கல்யாணம் களைகட்டுகிறது. கெட்டி மேளம் கொட்டி முழங்குகிறது!

அதே சூட்டோடு சிவாவிற்கும், கல்லூரி காலத்தில் அவனை ஒரு தலையாக காதலித்த ஸ்ருதியை பேசி முடித்து, முன்னின்று கல்யாணம் செய்து வைக்கின்றனர் சத்யாவும், அவள், கணவன் கார்த்திக்கும் சேர்ந்து... நாட்கள் நகர, வாழ்க்கை பயணத்திலும் எக்கச்சக்க மாறுதல்கள்... சிவாவிற்கு, குழந்தை பிறக்கிறது. ஆசை, ஆசையாய் இவனை காதலித்து கட்டிய ஸ்ருதி தலைப் பிரசவத்திலேயே இறந்து போகிறாள். கைக்குழந்தையை கஷ்டப்பட்டு வளர்க்கிறான் சிவா. இவனுக்கு இப்படி ஒரு கஷ்டமென்றால், கார்த்திக்-சத்யா தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியமே இல்லை என்பது கஷ்டமாக இருக்கிறது.

இப்படியாக நாட்கள் உருண்டோட., அந்த மகனின் மனைவிதான் 49 வயதிலும் அவளை பார்க்க போகாமல் இருக்க முடியலையோ என்று நாக்கில் நரம்பில்லாமல்., மாமனரைப் பார்த்து கேட்கிறாள். அதற்கு பதில் ஏதும் பேசாமல் சாகக் கிடக்கும் தன் தோழியைக் காண மருத்துவமனைக்கு தள்ளாட்டத்துடன் வருகின்றான் சிவா. சிவாவின் உயிர் தோழி சத்யா உயிர் பிழைத்ததாலா., இல்லையா..? என்பது கிளைமாக்ஸ்! அதற்குள் இத்தனைப் பெரிய நல்ல நட்பின் 'ப்ளாஷ்பக்'கை நம் கண்முன் விரித்து கைதட்டல் வாங்கி விடுகின்றனர்.

சிவாவாக ஷாம், சத்யாவாக நித்யாதாஸ், சிவாவின் மனைவி ஸ்ருதியாக சமிக்ஷா, சத்யாவின் முறைப்பையன் 'கம்' கணவராக மலையாள நடிகர் ஜெயசூர்யா ஆகியோர் நடித்துள்ளனர். ஷாம், இளமை முதுமை இரண்டு பருவத்திலும் அசத்தலாக நடித்திருக்கிறார். ஷாமின் சத்யாவாக நித்யாதாஸ், குடும்ப பாங்கில் கொளுத்தி எடுத்திருக்கிறார். மனைவியாக சமிக்ஷாவும் கிளாமரிலும் சரி, நடிப்பிலும் சரி... தான் எந்த விதத்திலும் யாருக்கும் சளைத்தவரில்லை என்பதை நிரூபித்திருக்கிறார்.

ஜெயசூர்யாவும் இளமை முதுமை இரண்டிலும் நன்றாக நடித்துள்ளார். இவருக்கும் முதுமை காலத்து 'மேக்கப்' தான் ஷாம் போன்றே மைனஸாக காட்சியளிக்கிறது.

ஷாம், நித்யாதாஸ், சமிக்ஷா இவர்களது கல்லூரி பருவத்தில் இவர்களிடம் இவ்வளவு சரளமாக செல்போன் இருந்திருக்க வாய்ப்பில்லை... அதே மாதிரி, ஷாம்-நித்யாதாஸின் நட்பின் தீவிரத்தை இன்னும் அழுத்தமாக காண்பித்திருக்கலாம்.

இப்படி, சில குறைகள் இருப்பினும், நட்பின் அற்புதத்தை விளக்கும் வகையில் 'மனதோடு மழைக்காலம்' படத்தை அற்புதமாக கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி இருக்கிறார் இயக்குனர் அற்புதன். அவருக்கு கார்த்திக்ராஜாவின் இசையும், என்.ராகவின் ஒளிப்பதிவும் அற்புதமாக கை கொடுத்திருக்கிறது!

*- கார்த்திக்*

**Quotation / cover provided over the phone**

**No more proposal forms to complete**
**No more immediate payment**
**No more Direct Debit Mandate to complete**
**No more claim form to fill - All the details are taken over the phone.**

But: Immediate Quotation at a competitive Premium from leading Insurer and Instant Cover

Please ring us for a friendly service: **020 8763 2221**

**P.SRINIVASAN** 32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH
PENSION * LIFE * SAVINGS * MORTGAGES * COMMERCIAL LOANS
Fax: 020 8763 2220
E-Mail: sri@armassociates.co.uk www.srinivasan.co.uk

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**Home Insurance**
Building and Contents Insurance including Let Properties
**Term Assurance / Critical Illness**
Level Term, Mortgage Assurance and Family Income Benefits
**Retailer, Shopkeepers & Liabilities**
All types of Shops including Jewellery Shops,
Self-Employed Business
**Mortgages / Re-Mortgages -**
**Decision in Principle/Virtual offer over the phone**
All types of mortgages including Self-cert and buy-to-let.
All circumstances will be considered.

ARM Associates — FSA Financial Services Authority
Authorised and Regulated by the Financial Services Authority

## MARKANDAN & UDDIN SOLICITORS

Solicitors and Administrators for Oaths

M.Markandan LLB A.Uddin LLB(Hons) MA. LLB Phd RFL

Tamil House, 720 Romford Road, London E12 6BT

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



**விவாக விண்ணப்பங்கள்**

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

**அகதி விண்ணப்பங்கள்**

14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிடதகமை விண்ணப்பங்கள் குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள் பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்பந்தமான ஆலோசனைகள்

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் - No Win No Fee அடிப்படையில்

We specialise in

For all your needs in immigration (All aspects upto house of lords).

Commerical & Residential Conveyancing, Employment, Civil Litigation

Consumer Problems, Last will, Power of Attorney, Sponsorship Declaration

HSMP, Workpermits

Tel: 020 8514 8300 / 07830 285 634

Fax: 0208 514 8381

Email: info@msssolictors.com

Contact:

Markandan: 07956 386 576

Uddin: 07957 455 670





WILLIAM CAREY COLLEGE LONDON

WCC LONDON

## LOOKING FOR A HAIR & BEAUTY COURSES?

***WILLIAM CAREY COLLEGE LONDON Introduces***

### HAIR & BEAUTY COURSES

*FEE STARTING FROM* **£199**

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்





**Certificate Courses:**

- THE ART OF THREADING
- THE ART OF WAXING
- MANICURE / PEDICURE
- HAIR CUTS & STYLING (Beginners)
- HAIR CUTS AND STYLING (Advance)
- LONG HAIR DESIGN & DECORATION
- MAKE-UP (Asian & Western)
- 1 YEAR ADVANCED DIPLOMA IN HAIR & BEAUTY



CLASSES STARTS FROM OCTOBER 2006

**Silent Features:**

- ✔ Well equiped class rooms
- ✔ Sophisticated Training Equipment
- ✔ Highly Qualified & Talented Trainers
- ✔ Training on ONE to ONE basis
- ✔ Real time training experience
- ✔ Placement Assistance
- ✔ Flexible Timings





உங்கள் அழகை மேலும் அழகுபடுத்திட நாடுங்கள்

**William Carey College London**

Midas House, 34-36 High St North, Eastham, London E6 2HJ **Tel:** 020 8472 6124

www.wcclondon.org, **email:** Sabrina@wcclondon.org **Fax:** 020 8432 6346



## Special Offers...

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| பங்கு இறைச்சி 1 கிலோ | | now £4.99 |
| Aakash Basmati 5 கிலோ | ~~15.99~~ | now £5.49 |
| Salom Basmati 5 கிலோ | ~~14.99~~ | now £2.99 |
| 20 கிலோ Tilda Broken Basmati | ~~10.99~~ | now £7.99 |
| Enesar 1 கிலோ அரிசிமா | ~~£1.19~~ | now 99p |
| Enesar 1 கிலோ கோதுமைமா | ~~£1.19~~ | now 99p |
| 20 கிலோ Tilda Basmati | ~~£26.99~~ | now £24.99 |
| Soorya மீன் | | now £1.99 |
| Samudra மீன் | now £2.79 | each (2 for £5) |
| Sri Lankan Coconut Milk | ~~2 for £1~~ | now 4 for £1 |
| 500g மிளகாய்த்தூள் | | now £1.99 each (buy 1 get 1 free) |
| Famous Grouse 1ltr | ~~£16.99~~ | now £13.99 |
| Bells 1lit | ~~£16.99~~ | now £13.99 |
| Shivas Regal | ~~£17.99~~ | now £15.99 |



GROCERY ORDERS OVER £50.00 FREE SRI LANKAN TELEPHONE CARD & FREE DELIVERY



£25 க்கு மேல் Grocery வாங்குபவர்களுக்கு 5kG Onion Bag இலவசமாக கொடுக்கப்படும்

மிளகாய்த்தூள் 1.99 buy One Get One Free

Elephant brand Sri Lankan Soda 2 for £1.00

For wholesale sprit orders call **020 8902 4590** for the price

# ALL IN ONE SUPERMARKET

**OFF LICENCE & GROCERY**

537 HIGH ROOAD, WEMBLEY, MIDDX HA0 2DJ



## இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஒவ்வொரு சிறார்களும் தனித்துவம் தானே!
அவர்தம் ஆற்றலும் தனித்துவம் தானே!!

உங்கள் சிறார்களும் கல்வியில் ஓங்கவும்...
நாளைய உலகின் சவால்களை வெல்லவும்...

# Give your child the Learna Advantage. Today.

- Individualised
- Interactive
- Inspiring

LEARNA
because every child is unique

Computer-Based Education Centres

- Maths & English for KS1, KS2 & KS3
- Product of years of advanced research
- Challenging Individualised learning path
- Focus on problem solving, reading and writing
- Improve child's self-confidence and concentration skills
- Thousands of computer activities & printed worksheets
- Monthly progress tests and instant reports

For your children to excel at school...

For them to meet tomorrow's challanges...

Let your child have the **Learna experience**.
Call us or visit us on the web.

**> www.learna.com <**



Learnies
Because they are unique

**Call 0845 094 0061**